# பொன் விழா மலர்

1952-2002




## கோண்டாவில் கிழக்கு

## ஸ்ரீ நாராயணா

## சனசமூக நிலையம்

## கிராம அபிவிருத்திச் சங்கம்

## மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்

## பாலர் பாடசாலை

வெளியீடு

2002

60.253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாக்கங்கள் தாங்கி புதுப்பொலிவுடன்
வரும் பொன் விழா மலரை வாழ்த்துகிறோம்!

# கலாஸ் கிறீம் கவுஸ்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

ஸ்பெஷல் ஐஸ்கிறீம் சொக்கிலெட் ஐஸ்கிறீம்
நட்ஸ் ஐஸ்கிறீம் வெனிலா ஐஸ்கிறீம்
புரூட்சலட் ஐஸ்கிறீம் ஜெலி ஐஸ்கிறீம்
ஸ்பெஷல் பீடா

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய
ஒரேயொரு இடம்

# KALAS CREAM HOUSE

இவற்றுடன் இணைந்த

# KALA'S MINERAL WATER CO

166/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா மலர்

# PONVIZHAMALAR

**கோண்டாவில் கிழக்கு**

**ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்**

**கிராம அபிவிருத்திச் சங்கம்**

**மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்**

**பாலர் பாடசாலை**

**வெளியீடு**

2002

*மலர் ஆசிரியர்:-*
**செல்வன். து. ஜேந்திரன்**
*3ம் வருடம்*
*முகாமைத்துவ கற்கை நெறிகள்*
*முகாமைத்துவ வணிகபீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TITLE:- PON VIZHA MALAR

EDITOR:- MR. T. Jenthiran
3rd Year
Managment Students
Faculty of Management and Commerce
University of Jaffna.

PUBLICATION:- Sri Narayana Community Centre,
Rural Development Socity, Marumalarchchi -
Sports Clup and Montasary School.
Kondavil East.

PUBLISHED ON:- April 2002

COPY RICHT:- SRI NARAYANA COMMUNITY CENTRE
KONDAVIL EAST.

COVER DESIGN:- Nantha Graphich

BOOK PRINTING:- Shamali Printers, Thirunelvely.

NUMBER OF COPIES:- 400

தலைப்பு:- பொன் விழா மலர்

மலர் ஆசிரியர்;- திரு. து. ஜெந்திரன்

வெளியீடு:- ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்
மலர் பாடசாலை

பதிப்பு;- சித்திரை 2002

அட்டைப் பதிப்பு:- நந்தா கிறின்டேர்ஸ்
மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.

நூல் அச்சுப்பதிப்பு; ஷாமளி அச்சகம் திருநெல்வேலி.

நூல் எண்ணிகை: 400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன் விழா மலர்

## சமர்ப்பணம்

அற்புதங்கள் செய்து அருளாட்சி நல்கும் ஸ்ரீ வல்லீபுர நாதரின் அருட்கடாட்சம் நிறைகின்ற இம் மண்ணில் அவதரித்து மனித நேயமுடன் வாழ்ந்து காட்டி சிற்பிகளுக்குள் முத்தாக விளங்கி எமக்கெல்லாம் வழிகாட்டிகளாக நற் பாலம் அமைத்துக் கொடுத்த நம் முன்னோர்களுக்கும் வளமான ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்ற சிந்தையோடு எமக்காய் உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இம்மலரை சமர்ப்பணம் செய்து உளம் நிறைகின்றோம்.

**நிர்வாகிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக் கீதம்

இராகம்:- மத்தியமாவதி

வாழியவே! ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
வாழியவே! எம்கிராம அபிவிருத்திச் சங்கம்
வாழியவே! மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்
வாழியவே! கோண்டாவில் பாலரின் பாடசாலை-
-வாழியவே

ஞாலத்தின் மாண்பினுக்கோர் நன்னிலவாய் உதித்து
நூலகமாய் எழுந்து நுண்ணறிவு படைத்து
காலத்திற் கேற்றதுவாய் கலைபலவும் செழித்து
ஈழத்தின் வாழ்வினுக்கே எம்தமிழாய்ச் சிறந்து
(வாழியவே)

கண்ணியத்தில் வாழ்வைக் கற்று நிதம் தெளிந்து
உண்மை நிலை ;நின்று உயர்வுபல அடைந்து
மண்ணினிலே இங்கு மகுடமென உயர்ந்து
பன்னூறு ஆண்டுகள் பாரினிலே வாழியவே!
(வாழியவே!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

எந்தமிழர் சிந்தையில் ஏத்தும் தமிழ்த்தாயே வாழ்க
நிந்தனைகள் நீங்கி நாம் நிறை வாழ்வு வாழ
வந்தனங்கள் நாம் செய்யும் தமிழ்த்தாயே
(எந்தமிழர் சிந்தையில்)

தள்ளுவரின் குறளால் வான்புகழ் அடைந்தாய்
கள்ளமில்லா புலவர் நாவில் கவிதையாய் மலர்ந்தாய்
தெள்ளுதமிழ் ஔவையின் திருப்பாட்டில் திகழ்ந்தாய்
உள்ளம் தமிழர் கோயில் உறைவிடமாய் வளர்ந்தாய்
(எந்தமிழர் சிந்தையில்)

சங்கத்தமிழ் சரித்திரத்தை சந்ததியினர்க்கு அளித்தாய்
திங்கள் கவிவெண் குடைக்கீழ் திசையாவும் ஆண்டாய்
எங்கள் தமிழ்க்குலம்வாழ மாற்றாரைக் கவர்ந்தாய்
பொங்கு தமிழாய் இன்று புதுப்பொலிவும் பெற்றாய்
(எந்தமிழர் சிந்தையிலே)

உத்தமர்களை உருவாக்கிய எம் உயிர்த்தாயே
வித்தைகளை நாம்படிக்க விரும்பும் மொழிநீயே
உத்தமியே உலகாளும் நாயகியே தாயே
நித்தியம் நீ நீடுழி வாழி! வாழி!!

**துரைராஜா ஜேந்திரன்**
3ம் வருடம்
முகாமைத்துவ கற்கை நெறிகள்
முகாமைத்துவ வணிகபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நாரயணா
# சிரஞ்சீவியாய் வாழியவே!

மறையோதி நெறியொழுகி மனமொப்பி
　　குண திசைக் கோண்டாவிலூரில்
உறையும் திருதெய்வமாய் ஊருய்ய நின்றாளும்
　　ஸ்ரீ வல்லீபுரநாதன் சுரந்தியும்
இறை பெருந்துணை கொண்டு இசைபட
　　வாழ்ந்த முன்னோர் விழுப்பம் வேண்டி
நறைதரு சுவையொப்ப நல்லதொரு மகுடமாய்
　　நாராயணா வெனும் நாம்சூட்டி
குறைவற குடியோம்ப சனசமூக நிலையமதை
　　அமைத்தே தமிழ்த்தாயைப் பணிந்தார்!
பொறையோ ரணிகலனாய் பொதுப்பணி
　　அருங்கவனாய் ஆற்ற லுந்த
துறையடை தோணியாய் தூக்கிவிடு மேணியாய்
　　ஐந்துதர பத்தாண்டுகளுழைத்து
நிறைவுறு குடமால் நிலை தளம்பாவுயர்
　　மக்கள் சேவையின் மதிப்பையுணர்ந்து
முறை திறம்பா துலாக்கோலாய் முன்னேற்றம்கண்ட
　　பொன்விழாவும் பொலியவே வாழி!
புண்ணிய மீதென்று புவனமுழுவதும் செப்பும்
　　முன்பள்ளி வைத்தனை வாழி!
நுண்ணறிவூட்டும் நூலகமும் மறுமலர்ச்சி
　　விளையாட்டு கழகமும் உடையாய் வாழி!
எண்ணித் துணிந்து ஏற்றம்காண பல்துறையிலும்
　　கற்றுயரவும், கை கொடுத்தார் வாழி,
மாண்புடை மண்ணும் மறவர்குலமும் நேசிக்கும்
　　பொங்கு தமிழும் நீடுவாழி!
வண்ணப் பொன்விழாக் கண்டு வனப்புடன் திகழும்
　　ஸ்ரீநாராயணா சிரஞ்சீவியாய் வாழியவே!

**கந்த தியாகராசா**
சமாதான நீதவான்
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

வாருங்கள்! உங்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த அன்பு வணக்கம். செந்தமிழும், செந்நெறியும் சீர்மேவுகின்ற கோண்டாவில் நற்கிராமத்தில் வைஷ்ணவ பாரம்பரியங்கள், நெறிமுறைகளைப் பின்பற்றி பூசை, புரட்டானங்கள் மூலம் நாம் பூசிக்கும் ஸ்ரீ வல்லிபுரநாதரின் அருட்கடாட்ச்சத்தினால் புண்ணியங்கள் பல சேர்த்த புனித மண் கோண்டாவில் கிழக்கில், புகழ்பூத்து.

இன்று புதுப்பொலிவுடன் பொன் விழா கண்டு உவகை கொள்ளும் ஸ்ரீ நாரயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் சேவைகளால் மனம் நிறைந்து மகிழுகின்ற எம் கிராம மக்களே! ''உங்கள் தேவைகள் எங்கள் சேவைகள்'' என்ற கருத்து வெளிப்பட ஐம்பது ஆண்டு காலம் சேவை பல செய்து மக்களின் மனங்களில் பசுமரத்தாணி போன்று பதிந்திட்ட உங்கள் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை, ஆகியவற்றின் அளப்பரிய சேவைகளை அவற்றின் உருவாக்கங்கள், மற்றும் வரலாற்றுப் பின்னணிகள், வளர்ச்சிப்படி நிலைகள் அதன் வரலாற்றுச் சாதனைகள் போன்ற பல்வேறு அம்சங்களை எம் கிராம மக்களாகிய நீங்கள் உட்பட யாழ். குடாநாட்டு மக்கள் மற்றும் அகில இலங்கை, உலகளாவிய ரீதியில் எமது சேவைகள் பல்கிப் பெருக வேண்டும். அத்துடன் எமது சங்க சேவைகளைப் பெறுகின்ற நீங்கள் உட்பட அனைவரும் மேற்குறிப்பிட்ட சங்கச் சேவைகள் அதன் உருவாக்கம், மற்றும் வரலாற்றிப் பின்னணிகள், அதன் வரலாற்றுச் சாதனைகள், வளர்ச்சிப்படி நிலைகளை அறிந்து கொள்ள வேண்டும். சனசமூக நிலைய நடப்பாண்டு நிர்வாகிகள் எமது பொன்விழா காணும் இவ் வேளையில் ''பொன் விழா மலர்'' என்ற ஒன்றினை வெளியிடுவது எம்மையும் மகிழச் செய்கிறது.

இந்தப் பொன்விழா மலர் மூலம் எங்களது கிராமத்தின் வளர்ச்சியில் எமது சனசமூக நிலையத்தின் பங்கு எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதனை எமது வருங்கால சந்ததியினருக்கு உணர்த்த வேண்டும். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி இவை என்றும் அழியா நினைவுச் சின்னங்களாக நிலைக்க வேண்டும் அத்துடன் எம் கிராம மாணவச் செல்வங்கள் மற்றும் பலரும் இந்த பொன் விழா மலர் மூலம் வெளிவரும் பற்பல பயன்நிறை அம்சங்களை பருக வேண்டும். அத்துடன் எங்களது கிராம சனசமூக நிலைய வளர்ச்சியானது என்றும் புதுப் பொலிவு பெற்றுத் திகழ நாம் எல்லோரும் என்ன செய்யவேண்டும் என்ற உரிமையோடு ஒருகணம் சிந்தியுங்கள். உங்கள் மனச்சாட்சியுடன் மனம் திறந்து பேசுங்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை என்றும் உங்கள் உள்ளம் நிறைந்து உங்கள் சேவைகளை செவ்வனே தொடங்குங்கள் (ஆரம்பியுங்கள்) தொடருங்கள். உள்ளே வாருங்கள் நிறைய பல்சுவை விருந்துகள் காத்திருக்கின்றன- பிடித்தமானவற்றை சுவைக்கலாம், ரசிக்கலாம், மகிழலாம் சுவைத்துப் பாருங்கள்விருந்துகளின் சுவை புரியும் ஆனால் சுவைக்க மட்டும் மறந்துவிடாதீர்கள். மறுத்தும் விடாதீர்கள்.

''சேவை பல செய்யும் சனசமூக நிலையங்கள்
பூவைப் போல புகழ்மணம் பரப்பும் பொக்கிஷங்கள்.''
அன்றோ

ஆதலினால் உங்கள் மனிதநேய உறவுக்கும், உணர்வலைகளுக்கும் உரமூட்டுகின்ற ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் உருவாக்கங்கள், வரலாற்றுப் பின்னணிகள், வளர்ச்சிப்படிநிலைகள், வரலாற்றுச் சாதனைகள்போன்ற பல அம்சங்களுடன் மாணவச்செல்வங்கள் மற்றும் பலருக்கும் பயன்படக்கூடிய ஆக்கங்களைத் தாங்கி வரும் பொன் விழா மலரினை காண்பதற்கு மிகவும் ஆவலில் உள்ளீர்கள் என்பதனை உங்கள் முகமலர்வு எடுத்துக் காட்டுகின்றது இன்னும் தாமதம் ஏன்? இதோ வாசல் வழியே உள்ளே போகலாம் வாருங்கள் முதலில் அருளாசியைக் கேளுங்கள்.

**திரு. து. ஜேந்திரன்**
பொன்விழா மலர் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் இதழ்கள் ...................... பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | ஆசிச் செய்திகள் | |
| 02. | வாழ்த்துரைகள் | |
| 03. | தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சந்தைப்படுத்தல் | 01 |
| 04, | மனிதனின் வளர்ச்சிப் படிநிலைகள் | 06 |
| 05. | பங்கீட்டு வலுப்பிணைப்பின் நவீனக் கொள்கைகள் | 10 |
| 06. | The Usage of the Verb "HAVE" in Differn Contextual Meanings | 12 |
| 07. | கல்வி என்னும் கடலின் சிறப்புக்ககள் | 16 |
| 08. | இலத்திரனியல் வர்த்தகம் | 17 |
| 09. | ஒரு சமுதாய வளர்ச்சியில் கல்வியின் பயன்கள் | 22 |
| 10. | கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நோக்கங்களும் கடமைகளும் | 23 |
| 11. | சமூக மேம்பாடும் சனசமூக நிலையமும் | 26 |
| 12. | யூரோ நாணய உருவாக்கம் சர்வதேச பொருளாதாரத்தில் இருமுனை நாணய அமைப்பை உருவாக்குமா? | 28 |
| 13. | சமூகத்தில் நாடகத்தின் பங்கு | 31 |
| 14. | பொது அறிவுத் தொகுப்புக்கள் | 33 |
| 15. | நிலைய ஆரம்பஅமைப்பாளர், கடந்த கால, நிகழ் காலத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர் கள். | 41 |
| 16. | நன்றிகள் | 42 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்:-

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை நிறுவனங்கள் தமது 50வது ஆண்டை இன்று கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். சமூகத்தினுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் சனசமூக நிலையமும், உடல் உள ஆரோக்கியத்தைப் பேணும் விளையாட்டுக் கழகமும், இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது போல பாலர் பாடசாலையும் கோண்டாவில் வாழ் மக்களுக்காக 50 வருடங்கள் நிறைவான பணியை செய்து தலை நிமிர்ந்து நிற்பது எல்லோரையும் அகமகிழச் செய்கிறது.

தனிமனித வாழ்வுக்கு வழி தேடிக் கொள்ளாமல் கூட்டு மனித வாழ்வுக்கே இந்நிறுவனங்கள் நிவர்த்தி செய்துள்ளன. மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை உணர்ந்த இந்நிறுவனங்கள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதே தங்கள் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இப்புனித பணியை 50 ஆண்டுகள் செயற்படுத்திய தலைவர்கள் அவர்களைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நற்பணியாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம். தொடர்ந்து இந் நிறுவனம் பல்லாண்டு காலம் வளர்ச்சி அடைந்து நற்பணியாற்ற இறைவன்அருள்புரிவாராக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

இரண்டாம் குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய, கிராம அபிவிருத்திச் சங்க மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக பாலர் பாடசாலைகளின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா

## ஆசியுரை

ஆத்மீகத்தினாலும், பண்பாட்டினாலும், கலைகளினாலும் சிறப்புக்கள் பெற்ற இடம் கோண்டாவில் பதியாகும். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இப் பகுதியில் ஸ்ரீ நாரயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை யாவும் ஆற்றும் பணிகள் யாவரும் அறிந்ததே. சமூக நலனில் அக்கறை கொண்ட பலபேர் சேர்ந்து இச் சனசமூக நிலையத்தை நல்லபடி இயக்கி வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. சனசமூக நிலையத்தோடு கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை என்பனவும் இணைந்து ஆற்றும் பணிகள் மேலும் சிறப்பானது. இச் சனசமூக நிலையம் இன்று ஐம்பது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாட இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து கோண்டாவில் வாழ் மக்களுக்கு பணியாற்ற வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி.**

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

சமாதான நீதிபதி

தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

## ஆசிச் செய்தி

கோண்டாவில் கிழக்கில் அமைந்திருக்கும் ஸ்ரீ நாரா யணா சனமூம் நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை 50வது ஆண்டு நிறைவுப் பொன்விழாவைக் காணுகின்ற போது மனதுக்கு பெரும் நிறைவைத் தருகின்றது. இச் சனசமூக நிலையம் கல்வி, கலாசாரம், விளையாட்டு, சமயப்பணிகள் போன்றவற்றில் இக் கிராம மக்களை வளர்த்திருக்கிறது. இந்நிலையத்தை நடாத்தி வருகின்ற நிர்வாகத்தினருக்கும், மனப்பூர்வமான ஒத்துழைப்பை நல்கிவரும் கிராம மக்களுக்கும், இவ்விழாவில் அவர் களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் சீரும்சிறப்புடனும் வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ வல்லீபுரநாதப் பெருமானை பிரார்த் திக்கின்றேன். இந் நிகழ்ச்சியை செப்பனிட வெளிவரும் மலர் நல்லமுறையில் அமைய எனது பாராட்டுக்களையும் ஆசிகளையும் மனப்பூர்வமாக வழங்குகின்றேன்.

**ச. தியாகராசா**
தலைவர்
ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# ஆசியுரை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தினர் தமது நிலைய ஸ்தாபகத்தின் 50 ஆண்டு நிறைவில் பொன் விழாவைக் கொண்டாடுவதையிட்டு அதன் கடந்த கால நிகழ்கால நிர்வாகிகள் அங்கத்தவர் களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஒரு நிறுவனம் ஓரிரு வருடங்கள் நிலைப்பதே அரிதான இக் காலத்தில் இந்நிறுவனம் பல்வேறு தடைகளையும் தாண்டி நிறைவான பல பணிகளை சமூகத்தில் ஆற்றியுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட் டுக் கழகம் முன்பள்ளி போன்ற பலபிரிவுகளைத் தன் னகத்தே கொண்டு 300 ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தன்சேவையைக் கடந்த அரை நூற்றாண்டளவாக வழங்கி வந்துள்ளது.

ஒரு பொது நிறுவனம் இன்றைய காலத்தில் இன, மத, மொழி, அமைவுகளுக்கு அப்பால் சென்று பணி யாற்றும் போது அதன் வளர்ச்சி பல வருடங்கள் நிலைப்பதாகின்றது. இந்நிலைய வளர்ச்சி கண்டு பெருமை யுறும் இவ்வேளையில் வெளியிடப்படும் பொன்விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இறையாசிகள்: என்றும் உங்களுக்கு உரித்தாகுக.

**அருட்பணி. கு. யோ. அன்ரனிபாலா**
பங்குத்தந்தை
புனித செபஸ்தியார் ஆலயம்,
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# ஆசிச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை ஆகிய நிறுவனங்கள் கடந்த 50 ஆண்டுளாக தமது கிராமத்து மக்களின் கல்வி, விளையாட்டு, சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் சமூக பணியாற்றி பொன்விழா கொண்டாடுவது கண்டு எனது பாராட்டை இத்தால் தெரிவிக்கின்றேன்.

அவர்களுடைய பணிகள் மேலும் பல்லாண்டுகள் தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசியை தெரிவிக்கின்றேன்.

**கந்தையா சண்முகநாதன்**
அரசாங்க அதிபர்
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**50 வது ஆண்டு விழா**

# ஆசிச் செய்தி

பொன்விழாக் காணும் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்திற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந் நிலையம் தனது புகழ் பூத்த வரலாற்றில்மக்களுக்கு ஆற்றிய மகத்தான பணிகள் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டியவையே. தான் சார்ந்த மக்களின் உயர்ச்சி கண்டு உள்ளத்தில் உவகை பூத்து நிற்கும் நிலையமானது தன்பணி சிறக்க பங்காற்றிய உன்னத உள்ளங்களை ஒரு கணம் தம் மனக்கண் முன் நிலைநிறுத்தி அவர்களுக்கு தலை சாய்த்து நன்றி பகர்ந்து நிற்கின்றது. கல்வி, கலை, தகவல் பரிமாற்றம், பொழுது போக்கு என்ற இலக்கில் நிறுவப்பட்ட இந்நிலையமானது இன்று அதன் தன்னலமற்ற பரந்துபட்ட சேவையினால் மக்களின் மனங்களில் மறையாத ஓரிடத்தைப் பெற்றுள்ளது. அம்மக்களின் வளர்ச்சிக்காக கடந்த அரை நூற்றாண்டு காலமாக உழைத்த இந்நிலையம் இன்றைய பொன் விழாவினை மட்டுமல்ல நூற்றாண்டு விழாவினை இன்னமும் வெகு விமரிசையாகக் கொண்டாடும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

இந்நாள் வரை இந்நிலையத்தை வளர்த்த அதன் அங்கத்தவர்களின் அயராத உழைப்பும் அசையாத நம்பிக்கையும் சொல்லில் அடங்காதவையே. இந் நிலையம் வளர்த்த தம் மைந்தர்கள் மண்ணில் புகழ் பூத்து விளங்க காரணமாக இருந்த வழிகாட்டிகள் போற்றுதற்குரியவர்களே. கலை, கலாச்சாரம், கல்வி, விளையாட்டு என்பவற்றின் மூலம் குடாநாட்டில் தனக்கென தனியான இடம்பிடித்து நிற்கும் நிலையத்திற்கு தன்னிகரில்லாத் தலைவர்களின் வழிகாட்டல்களே களம் அமைத்துக் கொடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. கடந்த கால நிர்வாகிகள் ஒவ்வொருவரினதும் மகத்தான பணியினாற் தான் அவனியில் இன்று ஓர் உன்னத இடத்தில் உயர்ந்து நிற்கின்றது.

ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், ஏழ்மையிலும்கல்வி உயர்விலும் பணிவு என்ற உன்னத இலட்சியங்களை அடிமனதில் இருத்தி அரும்பாடுபட்டு வரும் இந் நிலையமானது இன்னும் பல படிகள் மேலேறி குன்றில் இட்ட தீபம் போன்று மிளிர என் ஆசிகள் பல.

**ரி. வி. கிருஸ்ணசாமி**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**50 வது ஆண்டு விழா**

# பிரதேச செயலரின் ஆசிச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி கொண்டாடப்படவிருக்கும் பொன் விழாவிலே வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு கிராமமும் முன்னேற்றமடைவதற்கு அங்குள்ள அடிமட்ட நிறுவனங்களின் பங்கு அளப்பரியது. அவற்றின் திறனான செயற்பாடுகளிலேயே கிராமத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது. இந்நிறுவனங்களின் திறமையான செயற்பாட்டிற்கு அவற்றின் சிறந்த நிர்வாகமே மூல காரணமாகும். எனவே அடிமட்ட நிறுவனங்களான சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றனவற்றின் சிறந்த செயற்பாடுகளுக்கு அக்கிராம மக்களின் ஒத்துழைப்பும் நம்பிக்கையும் மிகவும் அவசியமானவை. அந்த வகையில் மக்களினது ஒத்துழைப்புடனும் நம்பிக்கையுடனும் கடந்த ஐம்பது வருடங்களாக ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் சிறந்த சேவையாற்றி வருகிறதென்றால் அது மிகையாகாது. பல சனசமூக நிலையங்கள் பெயரளவில் மட்டுமே இயங்கி வருகின்றன. ஆனால் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமானது மற்றவற்றிற்கெல்லாம் முன்னோடியாகவும் எடுத்துக்காட்டாகவும் இயங்கி வருகின்றது.

சிறந்த சேவையாற்றி நன்மதிப்புடன் திகழும் இச் சனசமூக நிலைய நிர்வாகிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களுடைய சேவையைப் பாராட்டுவதுடன் இப் பொன்விழா சிறப்புறவும் தொடர்ந்தும் பல்லாண்டுகள் சிறந்த சேவையாற்றவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**நா. வேதநாயகன்**
பிரதேச செயலர்
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு மலர்

## ஆசிச் செய்தி

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் இயங்கும் சன சமூக நிலையங்களில் சனசமூக அமைப்பு மட்டத்தில் தனது குறிக்கோளை அடைவதிலும், மக்களின் பங்களிப்பூடாக அப்பகுதி மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளை நன்கறிவேன். தமது வரலாற்றுடன் தனது சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர் உந்துசக்தியாக சிறப்பு மலர் ஒன்று வெளியிட எடுக்கப்பட்டுள்ள முயற்சி அனைவராலும் போற்றுதற்குரியது. சமூக அமைப்பில் மக்களின் உள, உடல் வளர்ச்சிக்குதவியாக விளையாட்டுக் கழகம், மற்றும் சிறுவர் முன்பள்ளி இந்நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டமை இதன் மேல்நிலைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். பிரதேச சபை எல்லைக்குள் இயங்கும் நிலையங்களில் இது முதன்மையும், சிறப்பும் மிக்கதுடன் ஏனையவற்றிற்கு ஓர் முன்னுதாரணமான நிலையமாக இது திகழ்வது அனைவரது கணிப்பீடு என்பதில் எவருக்கும் ஆட்சேபனை இருக்காது. இப்படியான ஒருநிலையம் ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதும் அதற்குரிய ஆசிச் செய்தியை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை இட்டு மிக மகிழ்ந்து சிறப்பு மலர் சிறப்பாக அமைய வேண்டுமென இறையருள் வேண்டிப் பிரார்த்தித்து பிரதேச சபை சார்பாக பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

பிரதேச சபை,
நல்லூர்.

**செ. செல்வரட்ணம்**
[செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# ஆசிச் செய்தி

கோண்டாவில் கிழக்கில் அமைந்திருக்கும் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், சிறுவர் பாலர் பாடசாலை ஆகியவற்றின் பொன்விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் நான் பெருமகிழ்வு அடைகிறேன்.

எமது சமூகத்தின் ஒற்றுமையீனம், அறிவின்மை, அடிமைத்தனம், களவு, கொள்ளை ஆகியவற்றில் மூழ்கியிருந்த வேளை சில பெரியோர்களின் ஆலோசனையின் பேரில் ஒரு சங்கத்தை ஆரம்பிக்கும் நோக்குடன் 10-11-1951ம் ஆண்டு பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டினேன் அவ்வேளை சில பெரியோர்களும் கலந்து கொண்டனர். சபையோர் என்னையே அமைப்பாளராக நியமித்தனர் நானும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அன்று தொடக்கம் செயற்பட்டேன். அமரர் சோமசுந்தரம் அவர்களைக் கொண்டு தேசிய கீதப் பாடல்களை எழுதுவித்து எமது கோண்டாவில் கிராமத்திலும் அரியாலைக் கிராமத்திலும் தேசிய கீதம் நடாத்திப் பெருமளவு பணம் சேகரிக்கப்பட்டது. நன்கொடையாகவும் பணம் சேகரிக்கப்பட்டது. அப்பணத்தைக் கொண்டு பெரிய மேசையும் இரு வாங்குகளும் செய்ப்பட்டன.

20-04-1952 ஆண்டு தேர்தல் பொதுக் கூட்டம் நடாத்தினேன். அன்று திரு. ஆ. முருகேசு அவர்கள் தலைவராகவும், (நா. கனகையா) நான் செயலாளராகவும் திரு. சி. ஐயாத்துரை பொருளாளராகவும் 12 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டோம். அன்று தொடக்கம் கூட்டாக இணைந்து செயற்பட்டோம். வருடந்தோறும் உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள், தேசிய கீதம், கரப்பந்தாட்டப் போட்டிகள், தாச்சி சுற்றுப்போட்டிகள் ஆகியன நடைபெற்றன. நிலையத்தை ஆரம்பிப்பதற்கும் உதவி புரிந்த பெரியோர்களுக்கும் நண்பர்களுக்கும் அன்று தொடக்கம் இன்று வரை பொறுப்பாளர்களாகவும் பண உதவி புரிந்தவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இச்சங்கத்தினூடாக எமது மக்கள் மேலும் பல துறைகளிலும்முன்னேறவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

**நா. கனகையா**
காப்பாளர்,
ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# ஆசிச் செய்தி

## ஆத்மீகப் பணியில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் 50 ஆண்டு களாக மக்களின் முன்னேற்றத்துக்காக பல துறைகளிலும் சேவை செய்து வருகின்றது? இதில் ஆத்மீகப் பணியும் ஒன்றாகும்.

இச் சனசமூக நிலையம் ஆத்மீக வளர்ச்சிக்கு பல விடயங்களை மேற்கொண்டு வருகின்றது. தைப்பொங்கல், நவராத்திரி விழாக்கள், ஏடு தொடக்கல், திருக்கார்த்திகை தீபம், ஆலயங்களில் மண்டகப்படி நிகழ்வுகள், தியான வகுப்புக்கள் போன்றவைகளுடன் 1986ம் ஆண்டு கோண் டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லீபுர நாதர் தேவஸ்தானத்தின் மகோற்சவ தேர் உற்சவ தினத்தன்று ''அமுதசுரபி'' என்னும் அன்னதான தற்காலிக கொட்டகை அமைத்துச் சிறப்பாக அன்னதான நிகழ்வு மேற்கொண்டதன் பயனாக ஆலயத்தில் 21-08-94ம் ஆண்டு எங்கள் அன்னதான சபை உருவாகி அன்னதானப் பணியை சிறப்பாக செய்து வருகின்றது. இப்பணிக்கு வித்திட்டது இச் சனசமூக நிலை யத்தின் ஆத்மீகப் பணியேயாகும்!

இச் சனசமூக நிலையத்தின் ''பொன் விழா'' மலர் வெளியீடு சிறப்புற நிகழவாழ்த்துவதோடு இந் நிறுவனம் மேலும் பல நூற்றாண்டுகள் ஆத்மீக வழியில் மக்களை இணைத்து சீரும் சிறப்பாக வாழ வழிசெய்ய வேண்டு மென எல்லாம்ஸ்ரீ வல்ல வல்லீபுரநாதர் அருட்கழல் அடிகள் இறைஞ்சிப் பணிகின்றேன்.

நன்றி

**திரு. ந. குணபாலசிங்கம்**
தலைவர்
அன்னதான சபை
ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

## தலைவரின் பார்வையில்..........

“எம் கடன் பணிசெய்து கிடப்பதே” என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு அரும்பணிகளாற்றி, அயராதுழைத்து அமரத்துவம் அடைந்துவிட்ட முன்னாள் தலைவர்களுக்கும் ஊரோடு ஒன்றி வளர்ச்சிப் பாதைக்கு உறுதுணையாய் உந்து சக்தியாய் இருந்து உயிர்நீத்த அனைத்து மக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்........

அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி நெஞ்சை விட்டகலா நினைவுச் சுமைகளோடு உங்கள் முன் நிற்கும் இளைய தலைவன் ......... என் சிந்தையின் பார்வையில் சிலவரிகள்........

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும், நலத்துக்கும், சீர் திருத்தப் பணிகளுக்கும் வழிகாட்டக் கூடியது பொது அமைப்புக்களே. இத்தகையதோர் உயர்ந்த எண்ணம் அன்றைய இளைஞர்களின் உள்ளத்தில் கசிந்து ஊற்றெடுத்தது இன்றைய தலைமுறை செய்த பெரும் பாக்கியமே!

“தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணி செய்வார்க்கு அரும் பொருள் யாதொன்றுமில்.” என்ற வள்ளுவர் வாக்குக்கொப்ப எண்ணித் துணிந்து, கண்ணியமோம்பி கால்கோல் இட்டனர். தனிமரம் தோப்பாகாதென்பதற்கிணங்க பலரும் கூடி “ஸ்ரீ நாராயணா” எனும் பொருத்தமான பெயரிட்டு 1952ம் வருஷம் ‘நந்தன’ ஆண்டு சித்திரைத் திங்கள் இருபதாம்நாள் நல்ல சுபமுகூர்த்த வேளையில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றையதினத்தில்ஆரம்பித்து வைத்த அந்த கர்த்தாக்களுக்கு இன்றைய பொன்விழா நன்னாளில் மனம்உவந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமைப்படுகின்றேன். அவர் தம் தொண்டை போற்றக் கடப்பாடுடையேன்......... அந்நாளில் முறையான தொழிலின்மை, வளமான பொருளாதாரமின்மை, சீரான கல்வியறிவின்மை என்பவற்றிற்கும், சமூகத்தின் குறைபாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் சனசமூக நிலைய நிர்வாகிகள் இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை கண்ணீரால் காத்தோம்" என்று ஏங்கிய எங்கள் பாரதியின் மனநிலையில் எம்மவர்களுக்கும் கண்ணீரும் - செந்நீரும் விலையாகக் கொடுத்து சமூக சீர்திருத்தப் பணிகளை நேர்மகொண்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர் என்பதை என்றும் மறக்கமுடியாது......... அன்று அவர்களின் தியாகம் பதித்த தடயங்கள் தான் இன்று யாழ் தீபகற்பத்தில் சிறந்ததொரு சனசமூக நிலையமாக நற்பெயரைத் தாங்கி திகழ்கிறது!

இன்றைய பொன்விழா நன்நாளில் நிரந்தரக்காணியின்றி கட்டிடமின்றி நிலையாக ஓரிடத்தில் இயங்க முடியாதிருந்த துர்ப்பாக்கிய நிலையைநீக்க தூயமனம் படைத்தோர் மனம் உவந்து காணியை அன்பளிப்பு செய்ததை பாரும் புனலும் படர் விசும்பும் வாழ்த்தும் அப்பெருதவியை நான் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.........

அன்றைய முன்னோடிகளின் முயற்சியினால் தகரக்கொட்டில் சீமெந்திலான கட்டிடமாகஉருவாக்கப்பட்டது. இதுவும் கூட எம்மவர்களின் சக்திக்கு மீறிய உழைப்பால் உருவான கட்டிடம் என்பதனையும் இன்றைய நிலையில் எண்ணிப் போற்றுகின்றேன்.........

ஆரம்பகாலம் தொட்டே விளையாட்டுத்துறையிலும் தனக்கெனத் தனியிடம் வகித்த பெருமையை உடையது. மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் சாதித்தவை பல. கரப்பந்தாட்டம், தாச்சிப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிக் கேடயங்களையும், கிண்ணங்களையும் பெற்றதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். தடகள விளையாட்டுப் போட்டிகளிலும் எமது வீரர்கள் பங்குபற்றி பரிசில்களை வென்றுள்ளனர்கள். அவர்கள் எமக்கு ஈட்டித்தந்த வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்.

இவை தவிர அண்ணா, காந்தி, பாரதி என்னும் மூன்று இல்லங்களாகப் பிரித்து ஆண்டுதோறும் சித்திரை மாதம் இல்ல மெய்வல்லுனர் போட்டியும் ஆண்டு நிறைவு விழாவும் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருவதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல கல்வித்துறையிலும் எம் சிறார்கள் சளைத்தவர்கள் அல்ல. முன்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 50 வது ஆண்டு விழா

ஊடாக இளஞ்சிறார்களுக்கு அறிவொளி ஊட்ட வேண்டிய காலப்பகுதியில் ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.'' என்பதை கருத்தில் கொண்டு மழலைச் செல்வங்களுக்கு கல்விச்சாலை அமைத்து அதைத் திறம்பட நிர்வகித்து எண்ணெழுத்தும், விளையாட்டும் ஊட்டிய பெருமையை உடையது ஸ்ரீ நாராயணா முன்பள்ளி. விழுப்பம் தரும் ஒழுக்கத்தையும் ஓதியுணர்த்திய படியால் இங்கு கல்வி பயின்றவர்கள் பலர் இன்று பட்டதாரிகளகாவும், உயர் பதவி வகிப்பவர்களாகவும் பலதுறைகளில் முன்னேற்றம் அடைந்து திகழ்வதும் எமது கிராமத்துக்கும் சனசமூக நிலையத்துக்கும் கிடைத்த பெருமையாகவே நான் கருதுகின்றேன்.

ஆண்டு தோறும் ஐந்தாம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இக்கிராம மாணவர்கள் சித்தி அடைவதும் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவாகிச் செல்வதும் ஐம்பது ஆண்டு காலங்களில் எமது சனசமூகநிலையம் ஈட்டிவரும் பெருமைக்கு சான்றாக அமைகிறது என்றால் அது மிகையாகாது.........

வல்லமையுள்ள எமது கிராம மக்களுக்கு நல்லருள் சுரந்து வல்லமையளிக்கும் ஸ்ரீ வல்லீபுரநாதர் ஆலய வளர்ச்சிக்கும் எங்கள் சனசமூக நிலையத்தின் செயற்பாடு பெரிதும் உந்துசக்தியாக அமைது கொண்டிருப்பது கண்கூடு. எங்கள் கிராமத்து ஆலயங்ளில் சித்திரத்தேரோடும் சீர்பெற்ற ஒரே திருக்கோவில் என்னும் பெருமையை பெற்றுயர்ந்து திகழ்வதற்கு காரணமாக, வழிகாட்டியாக இருந்து இயக்கி செயற்பட்ட பெருமையில் எங்கள் சனசமூக நிலையத்துக்கும் பங்குண்டு என்பது தெளிவு.........

முடிவாக......... இந்தப் பொன்விழா மண்டபம் அமைத்து உருவாக்க உதவிய அனைவருக்கும் பலவழிகளிலும் ஒத்தாசை புரிந்து ஊக்கமளித்து உதவிய எல்லோருக்கும் பொன்விழா வாழ்த்துக்களை கூறி ஸ்ரீ வல்லீபுரநாதனருள் என்றென்றும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி
வணக்கம்

தலைவர்
**கோ. நரேந்திரன்**
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபதலைவரின்

## உள்ளத்திலிருந்து..........



50 வது ஆண்டு விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் 50 வது ஆண்டு நிறைவுப் பொன்விழாவை கொண்டாடு வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நிலையத்தை ஆரம்பித்த பெரியார்கள், காணிகளை அன்பளிப்புச் செய்தோர்கள், சனசமூக நிலைய கட்டிடத் துக்கு அடிக்கல் நாட்டி திறப்புவிழா செய்வதற்கு உறு துணையாக உரமூட்டியோர் அனைவருக்கும் எனது உள மார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். அத்துடன் இச் சனசமூக நிலையத்தில் தந்தையும் மகனும் தலைவராக இருந்த வரலாறு எமக்கே சாரும். மேலும் நான் இச் சனசமூக நிலையத்தில் 1986ம் ஆண்டு முதல் இன்று வரை வகித்த பதவிகளின் மூலம் நல்லூர் பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தில் பொருளாளராகவும் செயலாளராகவும் பதவி வகித்திருக்கிறேன். அதேபோல் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களில் சம்மேளனத்தில் செயலாளராகவும், பொருளாளராகவும் கடமை புரிந்தி ருக்கிறேன். தற்போது தாச்சி விளையாட்டு சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிகிறேன்.

மேலும் ஆரம்ப காலத்தில் எமது சனசமூக நிலை யம் கல்வி வளர்ச்சியில் உறுதியாக நின்று செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பொழுது பெற் றோர்களே தமது பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் முன் னின்று உழைக்கிறார்கள். தற்பொழுது எமது நிலையத் தில் கணனிப் பயிற்சி ஆரம்பித்து செயற்பட வேண்டிய நிலை கைகூடியிருக்கின்றது. இப்பயிற்சி திறம்பட அமை வதுடன், கல்விவளர்ச்சியிலும், விளையாட்டுத்துறையிலும் எமது பிள்ளைகள் சிறந்து செயற்பட வேண்டும் என்றும் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பே எப்போதும் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமையும் அத்துடன் மக்களின் ஒற்றுமையே சனசமூக நிலையத்தின் வளர்ச்சியாகும் என்று கூறி மேன்மேலும் எமது நிலையம் வளர்ச்சியின் பாதையில் முன்நிற்க வேண்டும் என்று எல்லாம் வல்லஸ்ரீவல்லீபுரநாதர் அருள்புரிவார் என்று கூறி வாழ்த்தி வணங்கி விடைபெறுகிறேன்.

நன்றி

**செ. சண்முகலிங்கம்**
உபதலைவர், ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
செயலாளர், நல்லூர் பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசம்
தலைவர், யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் நோக்கில்.........



50 வது ஆண்டு விழா

## கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை ஆகியவற்றினது வரலாற்றுப் பின்னணியும் அவற்றினது வளர்ச்சிப் படிநிலைகளும்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை ஆகிய ஸ்தாபனங்கள் எமது பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகவும் கல்வி, கலை, விளையாட்டு, சுகாதாரம், கிரா அபிவிருத்தி போன்ற சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றது. இச்சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவைப் "பொன் விழா" இன்று (20 - 04 - 2002) சனிக்கிழமை கொண்டாடும் வேளை இச்சங்கத்தின் உருவாக்கம் அதன் வளர்ச்சிப் படிநிலைகள் பற்றியும், சங்கத்தை வளர்த்த மூதாதையினரையும், சங்க அபிமானிகளின் சேவைகள் பற்றிச் சிந்திப்பதற்கும் எழுதுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றமையினையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பகுதி மக்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கல்வி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, கலாச்சார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, கலை பண்பாட்டு விழுமியங்கள், போன்ற பல்வேறு அம்சங்களில் பிற அடக்கு முறைகளினாலும் பாதிக்கப்பட்டிருந்த வேளை, இம்மக்களின் சகல நலன்களையும் மேம்படுத்துவதற்கு சங்கம் ஒன்று தேவை என அன்றிருந்த வயோதிபர்களும், இளைஞர்களும் சிந்தித்து அதன் அவசியத்தை உணர்ந்து 1951 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி (தென்னம்பிள்ளை புளியமரத்தடியில்) திரு. நா. கனகையா தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது திரு. சி. ஐயாத்துரை, திரு. க. ஆசைப்பிள்ளை, திருவாளர்கள் பொ. மாணிக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

நா. தம்பிஐயா, சி. ஐயம்பிள்ளை, க. நல்லதம்பி (நல்லான்) வி. பொன்னர், மு. இராமநாதன் (தேசிகர்), க. கந்தையா, ஐ. பழனி, ஆ. முருகேசு, க. துரை, சி. கந்தையா, வேலன் - கந்தையா - கந்தன் (துள்ளுக் குட்டி) ஆகிய பெரியார்கள் சங்கத்தின் அவசியம் பற்றி பொதுமக்கள் மத்தியில் உரையாடியும், வேறு பல அன்பர் களும் உரையாடிய பின் சங்கத்தின் அவசியம் பற்றி உணர்ந்த மக்கள் திரு. நா. கனகையா அவர்களை அதன் அமைப்பாளராக ஏகமனதாக மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிதிப் பொறுப்பாளராகவும் நியமிக்கப் பட்டு, முதன் முதலில் வே. மயில்வாகனம் அவர்களால் பணம் அன்பளிப்பு செய்யப்பெற்று, அதன் பின் வேறு பல அன்பர்களின் பண உதவியுடனும், 1952 ஆம் ஆண்டு சித்திரைப் புதுவருடத்தில், தேசிய கீத கதம்ப சுற்றுலா மூலம் கோண்டாவில், அரியாலைப் பகுதியில் பணம் சேக ரிக்கப்பெற்றது இப்பணச் சேகரிப்புக்கான தேசிய கீதப் பாடல்களை முத்தமிழ் செல்வன், கவிமணி, திருப்புகழ் மணி, தேசிகர் திரு. மு. சோமசுந்தரம் அவர்களால் இயற்றப்பெற்று இளைஞர்களுக்கு அவற்றை பழக்கி அவர் களின் ஒத்துழைப்பும் வழங்கப்பெற்றது. அதன் பின் மேற்கூறப்பட்ட பெரியோர்களின் பூரண முயற்சியால் 1952 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி அவ் வாண்டின் தலைவராக திரு. ஆ. முருகேசு அவர்களும், செயலாளராக திரு. நா. கனகையாவும், திரு. சி. ஐயாத் துரை (அறிஞர்) அவர்கள் பொருளாளராகவும் மொத்தம் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர்கள் திரு. நா. கனகையா அவர்களால் மேற்படி சங்க இடத்தில் கூட்டப் பெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப் பெற்று திரு. கண பதி நல்லதம்பி அவர்களின் பேராதரவுடன் அவருடைய சகோதரியான திருமதி. கந்தையா தையல் அம்மா அவர் களின் வீட்டின் தெற்குப்புற விறாந்தையில் மேற்கூறப் பட்ட முதலாவது நிர்வாகசபையுடன் 1952 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி ''ஸ்ரீ நாராயணா நூல் நிலையம்'' எனும் பெயரில் செனற்றர் திரு. பொ. நாக லிங்கம் என்பவரால் சங்கம் திறந்து வைக்கப்பெற்று சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பெற்றது. சங்க நட வடிக்கையில் இவ் நிர்வாக சபையின் பூரண முயற்சியினா லும், பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பாலும், சங்கத் தேவைக்காக ஒரு பெரிய மேசையும், இரண்டு பெரிய வாங்குகளும் செய்யப் பெற்றதுடன் தினசரிப்பத்திரிகை, தாச்சி விளையாட்டு, கரப்பந்தாட்டம், ஊஞ்சல் விளை



யாட்டுக்கள் மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் சங்கத்தின் தேவையை உணரச் செய்தார்கள். இதற்கு மேலாக அன்றைய காலகட்டத்தில் மக்களின் தேவையாக விளையாட்டும், நாடகமும் முக்கிய பங்கு வகித்தமையால் 1953 ஆம் ஆண்டு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் மறுமலர்ச்சி நாடக மன்றமும் உருவாக்கப்பெற்று நூல் நிலையத்தின் நிர்வாகத்தின் கீழ் நிர்வாகம் செய்யப் பெற்றன. தொடர்ந்து இவ்வாண்டு சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு தேசியகீதச் சுற்றுலா மூலம் மக்களிடம் பணம் சேகரிக்கப்பெற்று அந்நிதி மூலம் இல்ல மெய்வல்லுனர் போட்டியும் நடாத்தப்பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கியும் மறுமலர்ச்சி நாடக மன்றத்தின் முயற்சியால் ''மந்திரகுமாரி'' எனும் நாடகம் அரங்கேற்றப் பெற்று முதலாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பெற்றது. இத்தகைய தேசிய கீத சுற்றுலாவும், இல்ல மெய்வல்லுனர் போட்டியும் எமது சங்க வளர்ச்சியில் இன்றும் பிரதான நிகழ்வுகளாக அமைகின்றன.

மக்களின் பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் குடிசைக் கைத்தொழிலை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் சங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக 1956 ஆம் ஆண்டு தேசிகர் மு. சோமசுந்தரம் தலைவராக இருந்த காலப்பகுதியில் குடிசைக் கைத்தொழில் திணைக்களத் தலைவர் திரு. எஸ். கந்தவனம் அவர்களால் ''பாரதி ஐக்கிய நெசவு நிலையம்'' ஆரம்பிக்கப்பெற்றது. இதன் பயனாக பல ஆண்களும், பெண்களும் பலர் குடிசைக் கைத்தொழிலை மேற்கொண்டு தமது இயல்பு வாழ்க்கை நிலையின் பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்றமையினால் அக்காலப்பகுதியில் எமது கிராமத்தில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டது. இவ்வாண்டு காலத்திலேயே நூல் நிலையத்தின் ஒற்றுமையினையும் வளர்ச்சியையும் கண்ட (D.R.O) அவர்களால் ஸ்ரீ நாராயணா நூல் நிலையம் அரசாங்கத்தில் ''ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமாக (J/V/C 14/CC/350) என்னும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப் பெற்றது. இதன் மூலம் சனசமூக நிலையத்தின் சேவை மேம்படுத்தப்பெற்றது.

1957 ஆம் ஆண்டு திரு. சி. ஐயம்பிள்ளை அவர்கள் தலைமையில் திரு. கந்தன் - நாகன் அவர்களிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைப்பரப்பு காணி விலைக்கு வாங்கப் பெற்றது. இவ் வருடம் சங்கம் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட திரு. வேலன் வல்லியின் காணியில் கொட்டில் அமைத்து சங்க நடவடிக்கைகள் தொடரப்பெற்றது.



50 வது ஆண்டு விழா

1959 ஆம் ஆண்டு சமூக மக்களின் மத்தியில் பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், எமது சமூகத்திற்கிருந்த அடக்கு முறைகளை உடைத் தெறியும் நோக்கத்திற்காகவும், சனசமூக நிலையத்தில் திரு. க. கிருஷ்ணராஜா அவர்களின் தலைமையில் சமூக சீர்திருத்த வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப் பெற்று மக்களின் விழிப்புணர்ச்சிக்கும், சமூக அடக்குமுறையில் இருந்து விடு படவும், பல வருடங்களாக பல அகிம்சைப் போராட்டங் களையும், அரசாங்கத் தலையீடுகள் மூலமாகவும் சமூகத் தில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. இதற்கு அன்றைய இளைஞர்களும் சங்க அபிமானிகளும் பலவிதமான துன்பங் களையும், பல கஸ்டங்களையும் அனுபவித்ததன் பயனா கவே இன்று எமது சமூகம் மேம்பாடு அடைந்து விளங் குகின்றது என்பதனை யாரும் மறைக்கவோ, மறுக் கவோ முடியாத உண்மைகளாகும்.

1960 ஆண்டு டாக்டர் எம். ஐ. பூபாலசிங்கம் (சமாதான நீதிவான்) அவர்கள் தலைவராக இருந்த காலத் தில் எமது சங்கமானது நிலையான ஒரு இடத்தில் நிறுவப் பட வேண்டும் என கருதப்பட்டு திரு. வி. மு. கந்தையா அவர்களின் பூரணமுயற்சியால் திருமதிபிள்ளையான் முத்தி ஞாபகார்த்தமாக ஒன்றேகால் பரப்புக் காணி அவரின் உறவினர்களால் அன்பளிப்புச் செய்யப் பெற்றது. இக் காணியில் தற்காலிக கொட்டில் ஒன்று அமைக்கப் பெற்று சங்க நடவடிக்கைகள் நிரந்தரமாக இயங்க ஆரம் பித்தது.

பின்பு சங்கத்திற்கு நிலையான கட்டிடம் தேவை யென சங்க அபிமானிகள் சிந்தனையின் பயனாக 1962ம் ஆண்டு திரு. க. செல்லையா அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் திரு. பாலச்சந்திரன் (D. R. O) அவர்களால் புதிய கட்டிடத்திற்கான அத்திபாரக்கல் (சங்குஸ்தாபனம்) இடம்பெற்று பத்திரிப்புவரை வேலை நிறைவு பெற்றது.

1963ம், 1964ம் ஆண்டு காலப்பகுதியில் திரு. நா. கனகையா அவர்கள் தலைமையில் சங்கத்தின் சகல சுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

களும் கட்டி முடிக்கப்பெற்றது. 1966ம் ஆண்டு திரு. வே. வ. கோபாலசிங்கம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் சங்கக் கட்டிடத்தின் கூரை வேலை, பூச்சு வேலை, நிலவேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பெற்று திரு. சிவஞானம் (D.R.O) அவர்கள் இக்கட்டிடத் திறப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவர்களால் இக்கட்டிடம் திறந்து வைக்கப் பெற்றது. ஊர்மக்களின் உதவியுடனும், பொது மக்களின் பலவிதமான அன்பளிப்புக்கள் மூலமும் இக்கட்டிடமானது திறந்து வைக்கப் பெற்றவிடயம் எமது சங்க வளர்ச்சியில் மிகமிக மகத்தான தொன்றாகும்.

எமது மக்களின் ஒற்றுமையையும், சங்க வளர்ச்சி, சங்கத்தின் நேர்மையான நிர்வாகத் திறமை கண்டு 1967ம் ஆண்டு திரு. வே. வ. கோபாலசிங்கம் தலைவராக இருந்த காலத்தில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச்சங்கம், (R/D/J/57/A/02) என்னும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப் பெற்றது.

1968ம் ஆண்டு திரு. நா. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் எமது மக்களின் ஒற்றுமையை வெளியுலகிற்கு காட்டும் நோக்குடன் செயற்பட்டு சங்கத்தின் முயற்சியால் எம்மக்களின் பிரதிநிதியாக கொக்குவில், கோண்டாவில் கிராமசபை 14ம் வட்டார அங்கத்தவராக திரு. ப. சின்னத்துரை அவர்கள் தெரிவானார். இதன் பயனாக எமது நிலையத்தின் முன் பிரதான வீதி பொது மக்களின் உதவியுடன் அகலமாக்கி சீராக்கப் பெற்றது. திரு. ப. சின்னத்துரை அவர்களின் முயற்சியால் கொக்குவில் கிராமசபை மூலம் குறிப்பிட்ட இவ் வீதி தார் இடப்பெற்று செப்பனிடப் பெற்றது. அரசடி வைத்திய சாலை (ஆஸ்பத்திரி) வீதியில் இருந்து எமது ஸ்ரீ வல்லீபுர நாதர் தேவஸ்தான ஆலயம் வரை மின்சார விநியோக இணைக்கப் பெற்றது.

1970ம் ஆண்டு தலைமைத்துவம் இளைஞர் கைக்கு மாற்றம் செய்யப்பெற்று திரு. சு. சண்முகநாதன் அவர்கள் தலைமைப் பதவியை ஏற்று எமது சங்க ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும், வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

1971ம் ஆண்டு திரு. நா. கனகையா அவர்கள் தலைமையில் எமது மாணவர்கள் கல்வி பயிலும் யா/கோண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**50 வது ஆண்டு விழா**

வில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மலசலகூடம் எமது சங்கத்தினால் சிரமதானமாக அமைக்கப்பெற்றது. தொடர்ந்தும் 1972ம் ஆண்டின் தலைவராக திரு. நா. கனகையா இருந்த காலத்தில் எமது மக்கள் இலகுவாக உணவுப் பொருட்களை பெறக்கூடிய வகையில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை இலக்கம் 19னை உடைய நாராயணா என்னும் விற்பனை நிலையம் எமது சங்கத்தின் முயற்சியினால் திரு. த. மயில்வாகனம் அவர்களின் இல்லத்தில் திறந்து வைக்கப்பெற்றது.

1974ம் ஆண்டு எமது பாலர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் குறிப்பிட்ட இவ்வாண்டின் தலைவரான திரு. நா. கனகையா அவர்களின் தலைமையில் முதன் முதலாக பாலர் பாடசாலை சங்கக் கட்டத்தில் அமைக்கப்பெற்று இதன் முதல் ஆசிரியராக திருமதி தவமணி சுப்பிரமணியம் அவர்கள் நியமனம் செய்யப் பெற்றார். அப்பொழுது முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இப் பாலர் பாடசாலையில் கல்வி பயின்றனர். இவ்வாண்டு அரசாங்க விசேட நன்கொடைப் பண உதவியுடனும், பொதுமக்களின் சகல உதவியுடனும் முன் மண்டபம் பூர்த்தி செய்யப் பெற்று திறப்புவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இக் கட்டிடத்தை திரு. விமல் அமரசேகரா (அரசாங்க அதிபர்) அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

1975ம், 1976ம் ஆண்டு காலத்தில் திரு. க. கதிரேச அவர்கள் தலைமையில் பாலர் பாடசாலைக்கு ஒரு நிரந்தர கட்டிடம் அமைக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு திரு. ப. சின்னத்துரை அவர்களிடமிருந்து ஒன்றே கால் பரப்புக்காணி அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றது. இதில் பொது மக்களின் ஆதரவுடனும், யாழ்/லயன்ஸ் கழகத்தின் உதவியுடனும் பாலர் பாடசாலை மண்டபம் அமைக்கப்பெற்றது. இதற்கான ஓடுகள் திரு. க. கனகராசா (அதிபர், மில்க்வைற் ஸ்தாபனம்) அவர்களால் அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. இக்கட்டிடத்தின் திறப்பு விழா 23-05-1957ம் ஆண்டு D. R. யோகு பசுபதி (தலைவர் யாழ்/லயன்ஸ் கழகம்) அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. பல லயன்ஸ் கழகப் பிரதிநிதிகளும் இவ் விழாவில் கலந்து கொண்டனர். இவர்களுடன் இவ் விழாவிற்கு லயன்ஸ் கழக தலைவர் திரு. இராசேந்திரா எனும் பெரியார் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்தார். அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

அத்துடன் இவ்வாண்டு யாழ்/லயன்ஸ் கழகத்தினால் 10 மேசைகளும், 10 வாங்குகளும் அன்பளிப்புச் செய்யப்பெற்றது.

1977 ஆம் ஆண்டு திரு. க. கிருஸ்ணராஜா தலைமையில் சங்கத்தின் வெள்ளி விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பெற்று, இவ்வெள்ளிவிழாவினை யொட்டி சங்கத்தின் சிறப்பு மலர் ஒன்று வெளியீடு செய்யப்பெற்றது. இவ்விழாவிற்கு உயர்திரு. மு. சிவசிதம்பரம் (பாராளுமன்ற உறுப்பினர் நல்லூர் தொகுதி) அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார்.

1978 ஆம் ஆண்டு திரு. சி. இராசரத்தினம் தலைவராக இருந்த காலத்தில் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின் பணிப்பின் பேரில் எமது கிராமத்துக்கு மின்சார விநியோகம் வழங்கப்பெற்றது. அத்துடன் எமது நிலையத்துக்கும் மின் இணைப்பு வழங்கப்பெற்றது.

1979 ஆம் ஆண்டு திரு. இரத்தினசபாபதி அவர்களின் தலைமையில் கொக்குவில் கிராம சபையில் ஒப்பந்த வேலைகள் பொறுப்பேற்கப்பெற்று எமது கிராமத்தின் சென் - செபஸ்த்தியார் வீதி செப்பனிடப்பெற்றது. அதில் வந்த இலாபப் பணத்தினை வங்கி ஒன்றில் முதல் தடவையாக வைப்பு செய்யப்பெற்றது. அத்துடன் அரஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் (கண்ணாடி அலுமாரி) சோக்கேஸ் அமைக்கப்பெற்றது. மேலும் சங்க நடவடிக்கை தொடர்பாக திரு. சு. இரத்தினசபாபதியும், ந. குணசிங்கம் அவர்களும் யாழ்ப்பாணம் சென்ற வேளை பலாலி வீதியில் பலத்த விபத்துக்குள்ளாகியமை என்றும் மறக்க முடியாத நிகழ்வாகும்.

1980 ஆம் ஆண்டு திரு. ப. சின்னத்துரை தலைவராக இருந்த காலத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமபந்தி போசன சுற்றுலாவினூடாக எமது நிலையத்திற்கு வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1981 ஆம் ஆண்டு திரு. க. தியாகராசா அவர்கள் தலைமையில் யாழ் / லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் நிலைய பாலர் பாடசாலை மாணவருக்கு ஒரு மலசல கூடமும், கொக்குவில் கிராமசபையில் ஸ்ரீ வல்லிபுரநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஸ்தான பொதுக் கிணற்றுக்கு ஒப்பந்தம் செய்யப் பெற்றமையும், ஆலய பரிபாலன சபையுடன் இணைந்து தீர்த்தக் கிணறு ஆலயத்தின் தெற்கு வீதி பக்கமாகவும் அமைக்கப்பெற்றது.



50 வது ஆண்டு விழா

1982 ஆம் ஆண்டு திரு. சி. வாமதேவன் அவர்கள் தலைமையில் முதன் முதலில் நிலையத்தில் பௌர்ணமி விழா கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான மகோற்சவத்தின் 10 தினங்களும் நிலையம் சார்பாக மண்டகப்படி வைத்து ஆத்மீக தொண்டிலும் நிலையத்தின் சேவை விஸ்தரிக்கப்பெற்றது.

1984 ஆம் ஆண்டு திரு. சு. இரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் பிரபல ஒப்பந்தகாரர் வெற்றிவேல் (உரும்பராய்) அவர்களின் உதவியுடன் நிலையக் கட்டடம் புனரமைப்பு செய்யப்பெற்று வர்ணங்களும் பூசப் பெற்றது. நிலைய வருமானத்தை பெருக்கும் நோக்கில் ஒரு தொகுதி இரும்புக் கதிரைகள் செய்யப்பெற்று வாடகைக்கு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

1985 ஆம் ஆண்டு திரு. சி. தேவராஜா தலைமையில் நிலைய முன் மண்டபத்திற்கு சுருக்குக்கேற் இடப் பெற்றமையும், மேலும் ஒரு தொகுதி இரும்புக் கதிரைகள் வாங்கப்பெற்றது.

1986 ஆம் ஆண்டு திரு. ஐ. இராசையா அவர்கள் தலைமையில் எமது தற்போதைய சங்கத்துடன் இணைக் கப் பெற்றிருக்கும் நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத் திற்கான அடிக்கல் இவரது தலைமைத்துவ காலத்தில் நாட்டப்பெற்றது. முதன்முதல் ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ் தான மகோற்சவத்தின் தேர்த்திருவிழா அன்று ''அமுத சுரபி'' அன்னதானமடம் அமைத்து அன்னதான நிகழ்வு நிலையத்தினால் பொதுமக்களின் உதவியுடன் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பெற்றது. வறிய மக்களின் வீடுகளில் ஏற்படும் மரணச் சடங்கின் செலவைக் குறைப்பதற்காக பொதுமக்களின் உதவியுடன் ஒரு பிரேத வண்டி செய்யப் பெற்றது. காலப்போக்கில் அது பழுதடைந்துவிட்டது. அன்னதான மிகுதிப் பணத்தில் ஒரு கிடாரம் வாங்கி ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானத்திற்கு வழங்கப்பெற்றது. அத்துடன் ஒரு தொகுதி இரும்புக் கதிரைகளும் செய்யப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

1987 ஆம், 1988 ஆம் ஆண்டு திரு. ஜே. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் இந்திய இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட எமது அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலம் நிவாரணங்கள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றது. மேலும் அன்னதான தேவைக்கு சில பாத்திரங்கள் வாங்கப்பெற்றது.

1989 ஆம் ஆண்டு திரு. செ. பேரின்பநாதன் தலைமையில் நிலைய முன் மண்டபம் கொத்தி மீண்டும் சீமெந்து இடப்பட்டு இழுக்கப்பெற்றது. நிலையத்திற்கு வர்ணமும் பூசப்பெற்றது. அத்துடன் பாலர்பாடசாலை மாணவருக்கு நான்கு ஊஞ்சல் அமைக்கப்பெற்று நூல் நிலையத்திற்கு பல புத்தகங்களும் சேகரிக்கப்பெற்று நூல் நிலையத்திற்கு புதுப்பொலிவு வழங்கப்பெற்றது.

1990 ஆம் ஆண்டு திரு. செ. சண்முகலிங்கம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் உள்ளூராட்சித் திணைக்கள மூலம் பாலர் பாடசாலை மாணவர்கள் பாவிப்பதற்குரிய ஒரு தொகுதி தளபாடங்கள் கிடைக்கப்பெற்றது. திரு. நா. கனகையா அவர்களின் பெரு முயற்சியால் கிராமத்தின் சிறிய வீதிகள் எங்கும் இலங்கை மின்சார சபையால் மின்னிணைப்புகள் வழங்கப்பெற்றன.

1991 ஆம் ஆண்டு திரு. சி. ஞானசம்பந்தர் அவர்களின் தலைமையில் உதயன் பத்திரிகை அதிபர் திரு. சரவணபவன் அவர்களால் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒரு தொகுதி தளபாடங்கள் கிடைக்கப்பெற்றது. அது மட்டுமன்றி பாலர் பாடசாலை ஆசிரியருக்கு மேலதிக பயிற்சி வழங்கப்பெற்று பாலரின் கல்வி மேம்படுத்தப்பெற்றது.

1992 ஆம் 1993 ஆம் ஆண்டுகளில் திரு. ஐ. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் 20 வது வருடங்களுக்கு மேலாக எமது சமூகத்தை பல விதங்களில் பாதிப்புக்குள்ளாக்கிய ''கள்ளுத்தவறணை'' அகற்றப்பெற்றது. அத்துடன் தேசியகீத சுற்றாடலின் ஒருபகுதி பணத்தில் ஒரு பெற்றோல்மக்ஸ் வாங்கப்பெற்றது. பாலர் பாடசாலை மாணவரின் கல்வியை மேம்படுத்த திரு. லிங்கவாசனால் பாலர் பாடசாலை மாணவருக்கு புத்தகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பளிப்பு செய்யப்பெற்றது. யாழ் சர்வோதய நிறுவனத்தினதும் பொதுமக்களின் உதவியுடனும் குளாய்க் கிணறு அமைக்கப்பெற்றது. இக்கிணறு இளைஞர்களின் பெருமுயற்சியால் ஒரேநாளில் தண்ணீர் காணப்பெற்ற விடயம் மறக்க முடியாத நிகழ்வாகும். ஊரில் சிரமதானத்தின் மூலம் இரண்டு கிணறுகள் சிரமதானம் செய்து கொடுக்கப்பெற்றது. கிராம அபிவிருத்திச் சங்க உதவியுடன் வசதி குறைந்த மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு திட்டங்களுக்கு கடன் வழங்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பெற்றமையும், யாழ் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் வசதி குறைந்தவர்களுக்கு நெசவு உபகரணங்கள் வழங்கப்பெற்றது. கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் அந்த உபகரணங்கள் சேதமாக்கப் பெற்றன. வீடமைப்பு திணைக்களத்தின் உதவியுடன் இலவசமாக வீடு வசதியற்ற வறிய குடும்பங்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கப்பெற்றது. அத்துடன் எமது நிலையத்தின் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகமானது(RDJ 57/A/02) என்னும் பதிவிலக்கத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பெற்றது. திரு. க. பாஸ்கரன் (கொலண்ட்) அவர்களால் ஒரு மேசையும் அன்பளிப்பு செய்யப்பெற்றது. இவ்வாண்டு நடைபெற்று முடிந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் பின்னர் அவ்வாண்டு இல்லத் தலைவர்களால் எமது நிலையத்திற்கு பல பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பெற்றது.

1994 ஆம் ஆண்டு திரு. செ. சண்முகலிங்கம் அவர்கள் தலைமையில் சங்கத்தின் வளர்ச்சி பற்றிய சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பெற்றது. இம்மலரும் இன்று நமது சங்கம் வெளியிடும் பொன்விழா மலருக்கு பேருதவியாகவுள்ளது. மேலும் மாணவர்கள் மத்தியில் சமய அறிவுப்போட்டி, பாடசாலை மட்டங்களில் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

1995 ஆம் ஆண்டு திரு. ந. ஸ்ரீதரன் தலைமையில் சங்கத்தின் 43 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு ''சங்கோசை'' என்னும் நிலைய வரலாற்றை உள்ளடக்கிய சிறப்புமலர் ஒன்று வெளியிடப்பெற்றது. இம்மலரும் எமது இன்றைய வெளியீடான பொன்விழா மலருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேருதவியாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமன்றி ஒரு தொகுதி இரும்புக் கதிரைகளும் செய்யப்பெற்றது.

1996 ஆம், 1997 ஆம் ஆண்டு காலத்தில் கே. ஜீ. சத்தியகுமார் தலைமையில் எமது சங்க பாலர் பாடசாலைக்குரிய காணியை அன்பளிப்புச் செய்த திரு. ப. சின்னத்துரை அவர்களுக்கு கெளரவிப்பு விழா கொண்டாடப் பெற்றது. மேலும் நல்லூர் பிரதேச சபையின் சமாசம் நடாத்திய பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டியமையும். எமது கிராம நாராயணன் வீதியின் 320' அடி நீளமான வீதி நல்லூர் பிரதேச சபையின் உதவியுடன் தார் இடப்பெற்று செப்பனிடப் பெற்றது. இதன் மூலம் பெற்ற மிகுதிப் பணத்தில் ஓர் இரும்பு அலுமாரி வாங்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் அமரத்துவம் அடைந்த சி. ஜெயன் ஞாபகார்த்தமாக ஒருதொகுதிப் புத்தகங்களும் வழங்கப் பெற்றது.

1998ம், 1999ம், 2000ம் ஆண்டு காலத்தில் திரு. ஐ. இராசரத்தினம் அவர்களின் தலைமையில் கடந்தகால வன்செயல்களினால் நிலையக் கட்டிடம் பாதிப்படைந்திருந்தமையினாலும் கட்டிடத்தை புனரமைப்புச் செய்ய வேண்டிய தேவைஏற்பட்டது. இந்தப் புனரமைப்பு நடவடிக்கைக்கு நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவியுடனும், U.N.H.C.R. நிறுவனத்தின் நிதியுதவியுடனும், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் உயர். திரு. மணிபல்லவராஜன் J.P.U.M அவர்களின் அனுசரனையுடனும், நல்லூர் பிரதேச சபை உபதலைவர் திரு. துரை தவராஜா அவர்களின் உதவியுடனும், நல்லூர் பிரதேச சபையின் நிதியுதவியுடனும் நிலைய சேமிப்பு பணத்தின் ஒருபகுதி நிதியுதவியுடனும், எமது முன்னோர்கள் கட்டிய நிலையத்தின் பழைய உபகரணங்களுடனும் புதிதாக சங்கத்தை புனரமைப்பு செய்வதற்கு 25 - 11 - 1998 ஆம் ஆண்டு தலைவர் திரு. ஐ. இராசரத்தினம் அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று தற்போது புதுப்பொலிவுடன் விளங்கும் நிலையத்தின் கீழ்மண்டப வேலைகள் யாவும் பூரணப் படுத்தப் பெற்று மேல்மண்டபத்திற்கான கொட்டகை வேலைகள் பூரணப்படுத்திய நிலையில் கீழ்மண்டபமானது நல்லூர் பிரதேசசபை உப தலைவர் திரு. துரை தவராஜா (சமாதான நீதிவான்) அவர்களால் 07-02-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 50 வது ஆண்டு விழா

ஆம் ஆண்டு திறந்து வைக்கப் பெற்றது. மேலும் இவ் ஆண்டின் 46வது ஆண்டு விழாவினை முன்னிட்டு நடாத்தப் பெற்ற விளையாட்டுப் போட்டியின் பயனாக அவ்வாண்டு இல்லத்தலைவர்களால் பல பொருட்கள் அன்பளிப்பாக நிலையத்திற்கு வழங்கப்பெற்றது. அத்துடன் தலைவரின் பெருமுயற்சியினால் விளையாட்டு உபகரணங்கள் சேகரிக்கப் பெற்றது. மேலும் அவ்வாண்டின் பாலர் பாடசாலை பாலர்களின் விளையாட்டுப் போட்டியிற்கு யாழ் / யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடனும், வி. லவன் உழவு இயந்திர உரிமையாளர் திரு. சி. லிங்கவாசன் அவர்களாலும் பாலர் பாடசாலை மாணவருக்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப் பெற்றது. திரு. வ. கந்தசாமி அவர்களின் முயற்சியால் பாலர்கள் விளையாடுவதற்கு யுனிசெவ் நிறுவனம் மூலம் ஊஞ்சல் போன்ற விளையாட்டுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றது. அத்துடன் கோண்டாவில் சத்திய சாயி பாபா சமுர்த்தியினால் நூலகத்திற்கு பல புத்தகங்கள் இலவசமாக நிலையத்திற்கு வழங்கப் பெற்றது. 1995 ஆம் ஆண்டு நாட்டினது யுத்த அனர்த்தங்களினால் நமது கிராமத்தினூடாக அமைக்கப்பெற்ற இராணுவ வேலி காரணமாக எமது கிராம மக்களின் காணிகளில் மிதிவெடிகள் புதைக்கப் பட்டிருந்தமையும் அவற்றினை நீக்கி அக்காணிகளின் உரிமையாளர்கள் தங்கள் காணியில் குடியேறுவதற்கும் 1998 ஆம், 1999ஆம் ஆண்டு காலங்களில் நல்லூர் பிரதேச சபைத் தலைவரின் உதவியுடனும், புல்டோசர் இடப்பட்டு காணிகளில் இருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்காக அக்காணிகள் வழங்கப் பெற்றது. அதுமட்டுமன்றி வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் நோக்குடன். நல்லூர் பிரதேசசபை செயலகத்தின் உதவியுடன் G.T.Z நிறுவனத்தின் மூலம் வறியகுடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பெற்றது. மேலும் திரு. ஐ. இராசையா அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை 19ஆம் இலக்கமுடைய நாராயணா கிளைக்கு அடிக்கல் நாட்டப் பெற்ற அக்கட்டிடமானது அவ்வாண்டு காலத்தில் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி அவர்களின் பெருமுயற்சியால் இக்கட்டிட வேலைகள் யாவும் நிறைவேற்றப் பெற்று அவர்களினாலேயே இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை திறந்து வைக்கப்பெற்றது. மேலும் எமது கிராமத்தின் நாராராயணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

வீதி, அம்மன் வீதி ஆகிய வீதிகள் நல்லூர்ப் பிரதேச சபையின் உதவியுடன் தார் இடப்பெற்று செப்பனிடப் பெற்றது. அத்துடன் நல்லூர் பிரதேச சபையால் விளையாட்டு உபகரணங்களும், எமது நூல்நிலையத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்களும் அன்பளிப்பு செய்யப் பெற்றது. மேலும் லயன்ஸ் கழகத்தினால் பெற்றோல்மக்ஸ் ஒன்றும், கண்பார்வையற்றவர்களுக்கு கண்ணாடியும் வழங்கப்பெற்றது.

2001 ஆம், 2002 ஆம் ஆண்டு காலத்தில் திரு. கோ. நரேந்திரன் அவர்களின் தலைமையில், நா. கிருஷ்ண பிள்ளை அவர்களின் பெருமுயற்சியினாலும், நல்லூர் பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் அவர்களின் உதவியுடன் யா / யுனிசெவ் நிறுவனத்தின் மூலம் 1000 லீற்றர் கனவளவு நீர் உள்ளடக்கக் கூடிய தண்ணீர் தாங்கி அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றது. இத் தண்ணீர் தாங்கிக்கு நீர் நிரப்புவதற்குரிய மின் மோட்டாரும் உபகரணங்களும் திரு. நா. இராசையா குடும்பத்தினரால் நிலையத்திற்கு அன்பளிப்பு செய்யப் பெற்றது. 2001 ஆம் ஆண்டு தீபாவளியினை முன்னிட்டு நடாத்தப் பெற்ற கலை நிகழ்வின் ஊடாக இளைஞர்களால் திரைச்சீலை ஒன்றும் வழங்கப் பெற்றது. அத்துடன் திரு. ம. கனகலிங்கம் (சுவிற்சலாந்து) அவர்களால் ஒரு பெரிய மேசையும், பிளாஸ்ரிக் கதிரைகளும் அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. மேலும் 2001 ஆம் ஆண்டு அமரர். தேவிசிகாமணி ஞாபகார்த்தமாக திரு. மூ. அருளம்பலம் குடும்பத்தினரால் ஒரு மின்விசிறி அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. அத்துடன் திரு. ந. குணசிங்கம் அவர்களாலும் ஒரு மின்விசிறி அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. மேலும் நல்லூர் பிரதேச சபை மூலமாக எமது நிலையத்திற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பெற்றது. இவை மட்டுமன்றி அமரர் திரு. ஐ. நல்லையா ஞாபகார்த்தமாக திருமதி பூரணம் - நல்லையா குடும்பத்தினரால் மின் வி சிறி ஒன்றும், அமரத்துவம் அடைந்த வை. குணசேகரன், ம. சுதாகரன் ஞாபகார்த்தமாக திருமதி இலட்சுமி வைத்திலிங்கம் குடும்பத்தினரால் மேலும் ஒரு மின்விசிறியும் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது அத்துடன் திரு. ந. குணபாலசிங்கம் அவர்களால் ஒரு ரியூப்லைற் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. திரு. ஆ. செல்வநாயகம் அவர்களால் சுவர்மணிக்கூடு ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. அத்துடன் 2001 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆண்டு நடைபெற்ற இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி மூலம், இல்லத்தலைவர்களினால் பல பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. இவைமட்டுமன்றி நல்லூர் பிரதேசசபையினால் 2001 ஆம் ஆண்டு பல விளையாட்டு உபகரணங்கள் பரிசாக வழங்கப்பெற்றதுடன், 2002 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேசசபையால் நடாத்தப்பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் அணியினர் முதலாம் இரண்டாம் இடத்தை பெற்றமைக்காகவும், பெண்கள் அணியினர் முதலாம் இடத்தை பெற்றமைக்காகவும் நல்லூர் பிரதேச சபையினால் சான்றிதழ்களும், பரிசில்களும் வழ்ங்கப்பெற்றது. அத்துடன் மீண்டும் பல விளையாட்டு உபகரணங்களும் 2002 ஆம் ஆண்டு எமது கிராமத்து அன்பர் திரு. வ. கமலநாதன் (சுவிஸ்லாந்து) அவர்களால் பிளாஸ்ரிக் கதிரைகளும் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. இதுமட்டுமன்றி அமரர் கோ. உருத்திரன் ஞாபகார்த்தமாக திருமதி. லலிதாமணி குடும்பத்தினரால் மின் ஒளிர்குளாய் (ரியூப்லைற்) இரண்டு அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. இவ்வாறு எமது மக்களின் நிலையத்திற்கான அன்பளிப்பு பணிகள் இன்றும் தொடர்கின்றன.

எமது நிலையத்தின் கல்விப்பணி, நிலையம் ஆரம்பிக்கப்பெற்ற காலத்தில் இருந்து ஊரில் கல்வி கற்ற பெரியோர்களினால் இலவசமாக மாலை நேர வகுப்புக்கள் நடைபெற்றமையும், மாணவரதும். வாசகரினதும் நன்மை கருதி நூல் நிலையம் பணி நடைமுறைப்படுத்தப்பட்டது. இவைமட்டுமன்றி 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்பெற்று கௌரவிக்கப் பெற்றமையினாலும், மாணவர்களின் கல்வி நிலையை பெற்றோர்களும் உணர்ந்து செயற்பட்டதன் விளைவாக இன்று எமது கிராமத்தில் பல பட்டதாரிகள் உருவாவதற்கு எமது நிலையம் வகை செய்துள்ளது.

எமது நிலையத்தில் விளையாட்டுப்போட்டி ஆரம்பிக்கப்பெற்ற காலம் முதல் இன்றுவரை பாரதி, காந்தி, அண்ணா என்ற மூன்று இல்லங்களாக பிரிக்கப்பெற்று இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு நிகழ்வுகள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றன. எமது நிலையமானது நல்லூர் பிரதேச செயலகம், நல்லூர் பிரதேசசபை மூலம் நடாத்தப்பெற்ற பல விளையாட்டுக்களில் பங்கு பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பல பரிசில்களை வென்றுள்ளது. கிராமிய விளையாட்டான தாச்சி (கிளித்தட்டு) விளையாட்டில் யாழ் மாவட்டத்தில் முதன்மை பெற்ற விளையாட்டுக் கழகமாக எமது மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமானது திகழ்கின்றது. இவ்வாறு பல்வேறு தாச்சி விளையாட்டுக்களில் அன்று தொடக்கம் பங்குபற்றி பல வெற்றிக் கேடயங்களை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

எமது நிலையத்தின் கலைப்பணியில் ஆரம்பத்தில் மறுமலர்ச்சி நாடகமன்றம் என்ற ஒரு நாடக மன்றம் உருவாக்கப்பெற்று ஊரில் பல கலைஞர்களை உருவாக்கியும், பல இடங்களில் நடைபெற்ற போட்டிகளில் (நாடகம்) வெற்றி பெற்றதுடன் சிறந்த நாட்டுக்கூத்து அண்ணாவியர் என நாகமுத்து செட்டியார் அவர்களை நல்லூர் பிரதேச செயலகம் கௌரவித்தமையும் இவரது நாட்டுக்கூத்து நிகழ்வானது இலங்கை வானொலியில் ஒலி பரப்பு செய்யப்பெற்றவையும் குறிப்பிட த்தக்க தொன்றாகும். இதுமட்டுமன்றி இன்றைய இளைஞர் தலைமுறையில் செல்வன். பூ. கருணதாஸ் தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ்ப்பாணப் பிராந்தியத்தினூடாக நடாத்தப்பெற்ற கலாச்சாரப் போட்டி நிகழ்வில் ஓகன் வாத்தியத்தில் முதலிடம் பெற்றமையும் எமது நிலையத்தின் கலைப்பணிகளுக்கு சிறந்த நல்ல எடுத்துக்காட்டுக்களாகும்.

எமது கிராமத்தின் சிரமதான பணிமூலம் எமது முன்னோர்கள் ஆரம்பகாலம் முதல் இன்று வரை எமது நிலையம் கோயில் பொதுத்தாபனங்களில் நிகழும் எந்த சிரமதானப் பணிகளிலும் பங்கேற்று வருகின்றது. எமது ஊரிலுள்ள 150 வெட்டுக் கிணறுகளுக்கு அதிகமாக எமது முன்னோர்களின் சிரமதான பணி மூலமே தான் வெட்டிக்கட்டப் பெற்றவையாகும். மற்றும் ஊரில் பல வீடுகள் கூட சிரமதானப் பணிகள் மூலமாகவே கட்டப்பெற்றவையாகும். இவ்வாறு எமது நிலையத்தின் சிரமதானப்பணிகள், கலை, கலாச்சார, சமூகப்பணிகள் தொடர்கின்றன.

இன்று பொன்விழா காண்பதற்காக அடியெடுத்து வைத்துள்ள எமது நிலையமானது இப்பொன்விழாவினை முன்னிட்டு யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாச்சி சுற்றுப் போட்டியினையும், மற்றும் யாழ் மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டப் போட்டிகள், துடுப்பாட்டப் (கிறிக்கற்) போட்டிகள், மரதன் ஓட்டப் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கள் என்பவற்றினை நடாத்தியமையும் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் பாடசாலை மாணவர் மட்டத்தில் பொது அறிவு, வினாடி விளையாட்டுப்போட்டி நடாத்தியமையும் எமது கிராம மாணவர் மத்தியில் பேச்சுப்போட்டி நிகழ்வுகள் நடாத்தியமையும் குறிப்பிடத்தக்கவையாகும். மேற்கூறப்பட்ட தாச்சிச் சுற்றுப்போட்டிக்கான 1-ம் பரிசினை எம்மால் நடாத்தப் பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்ட நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட திரு. லகுநாதன் இணுவில் அவர்களினால் வழங்கப்பெற்றது. இதற்கான 3-ம் பரிசினை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீகிருஷ்ணாலய நாடகமன்றத்தினரால் வழங்கப்பெற்றது.

இவைமட்டுமன்றி, இந்தப் பொன்விழா ஆண்டாகியாகிய இவ்வருடம் (2002 ஆம்) எமது நிலையத்தினால் ''பொன்விழா மலர்'' ஒன்று வெளியீடு செய்யப்பெறுகின்றமையும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கின்ற செயற்பாடு மற்றும் எமது கிராமத்து மாணவர்கள் அன்று தொடக்கம் இன்று வரையில் பல்கலைக்கழக உள்வாரியாக வெளிவாரியாக பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு பட்டங்கள் பெற்றவர்களையும், தற்பொழுது உள்வாரியாக பட்டப்படிப்புக்களை தொடர்கின்றவர்களையும் கௌரவிக்கின்ற செயற்பாடு இவை மட்டுமன்றி எமது நிலைய ஆரம்ப தலைவர், செயலாளர், பொருளாளர்கள் மற்றும் ஆரம்பம் முதல் இன்று வரையிலான தலைவர்களை கௌரவிக்கின்ற செயற்பாடு, மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினூடாக நடாத்தப்பெற்ற கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை கௌரவிக்கின்ற செயற்பாடுகள் போன்ற பல பன்மடங்கு சேவைகளை எமது நிலையம் இந்தப் பொன்விழா ஆண்டில் நிறைவேற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கவைகளாகும்.

எமது நிலையம் 50 ஆண்டுகளாக இக்கிராம மக்களின் நலனுக்காக தன்னை அர்பணித்து பல வெற்றிகளையும், சாதனைகளையும் கண்டு பொன்விழா கொண்டாடும் வேளை கடந்தகால வன்செயல்களினால் எமது கிராமத்து மக்கள் பல சொத்துக்களையும், உடமைகளையும் இழந்து பல சோதனைகளின் மத்தியில் துயரப்படுகின்ற எமது கிராம மக்களின் துயரத்திலும், வேதனைகளிலும் நாமும் துயரப்படுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

எமது நிலையத்தின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப் பணித்த எமது மூதாதையினர்க்கும், எமது நிலையத்தின் சங்க அபிமானிகளுக்கும், பல கஸ்டங்கள் மத்தியிலும் தம் சுயநலன்கள் கருதாமல் கட்டிட நிர்மாணிப்பு பணி யில் பங்குபற்றி நிறைவேற்றியவர்களுக்கும் எமது நிலைய வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் உறுதுணையாக நல்லூர் பிரதேசசபை உட்பட இருந்தவர்களுக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது நிலையத்தின் வரலாற்று பின்னணிகள், வளர்ச்சிப்படி நிலைகளை ஆராய்வதற்கு உதவிய **1994, 1995** ஆம் ஆண்டு காலங்களில் வெளியீடு செய்ய பெற்ற சிறப்பு மலர்களுக்கும், அவற்றினை வெளியீடு செய்த அவ்வாண்டுகளின் நிலைய நிர்வாகிகள் உட்பட ஒத்தாசை புரிந்த அனைத்து பெரியோர்களுக்கும், பொதுமக்களுக் கும் எமது உள்ளங் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிறைவாக எமது நிலையத்தின் பொன்விழாவாகிய (20 - 04 - 2002) இன்று வரை எமது நிலையத்தின் வர வாறு, வளர்ச்சி, மேம்பாடு போன்ற பல சிறப்புக்களை யும் எனது நோக்கில் பார்வையிட்டதனூடாக மீண்டும் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்து மகிழ்ச்சி யடைவதோடு இந்நிலையம் பல நூற்றாண்டுகள் சிறப் பாக வாழவேண்டும் எனவும் இதன் சேவைகள் என் றென்றும் எமது மக்களுக்கு உரித்தாக வேண்டும் எனவும் இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி
வணக்கம்

**சீ. சுஜீவா**
பொதுச் செயலாளர்
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

## வாழ்த்துச் செய்தி

*கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூ நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை கடந்த 50 ஆண்டுகளாகத் தமது கிராமத்து மக்களின் கல்விக்காகவும், அவர்களது வாழ்வுக்காகவும், உயர்வுக்காகவும் பல பணிகள் செய்வது கண்டு அக மகிழ்கின்றேன். 50 ஆண்டுகளாக இடைவிடாது அயராது தொடர்ந்து உழைப்பதுவியப்பிற்குரியதும் பாராட்டுக்குரியதும் ஆகும்.*

*அவர்கள் தமது பணியை இன்னும் பல்லாண்டுகள் சிறப்புற ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு, இச்சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும் பொன் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கி வாழ்த்துகிறேன்.*

**தியாகராசா மகேஸ்வரன்** பா. உ.
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை தமது 50வது ஆண்டு நிறைவினை பூர்த்தி செய்து தமது சேவையை இனிதே நிறைவேற்றி வருகின்றன.

இக் கிராம மக்களின் வாழ்வுக்கும் அவர்களது வாழ்க்கை வளங்களுக்கும் எதிர்கால எமது மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் துணை செய்கின்ற இந் நிலையம் மேன்மேலும் வளர வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

கிராமம் வளர்ச்சி பெற்று திகழ்வதற்கு முக்கியமாக அக்கிராம மக்களின் நற்பண்புகளும் ஒற்றுமையும் தான் காரணம் என்பது கண்கூடு.

இப்பகுதி மக்களின் வாழ்வுக்கும் குறிப்பாக மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கும் இந்நிலையம் ஆற்றும் சேவை தொடர்ந்தும் தங்கு தடை இன்றி செயற்பட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு இச் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும் பொன் விழா மலர் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

நன்றி.

என்றும் மக்கள் சேவையில்
**நடராஜா இரவிராஜ்**
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி




தங்கள் சனசமூக நிலையமும் அதுசார்ந்த ஏனைய நிறுவனங்களினதும் பொன் விழாசிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமூகப் பணியில் தங்கள் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் ஆற்றி வரும் மகத்தான பணிகளை நான் நன்கு அறிவேன். நாராயணா அவதாரம் அவதாரங்களில் ஒன்றாக உள்ளது. கிருஷ்ண அவதாரத்திலே கீதை உபதேசிக்கப்பட்டது. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதே கீதையின் சாரம். அதன் அடிப்படையில் தங்கள் நிர்வாகத்தினர் கடமைப் பற்றோடு பணி செய்வது உன்னதம் மிக்கது.

உங்கள் கிராமத்தின் வளர்ச்சியில் நீங்கள் ஒற்றுமையாகச் செயற்படுவது ஒரு முன்னுதாரணமாகும். ஒரு உள்ளூராட்சி நிர்வாக அலகு ஒன்றில் சனசமூக நிலையம் ஒன்றின் பங்களிப்பு அபிவிருத்திச் செயற்பாட்டில் மிக இன்றியமையாதது. அந்த வகையில் நல்லூர் பிரதேச சபையின் கீழ் தங்கள் நிலையம் வருகின்ற போதிலும் தங்கள் சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்கள் பலர் யாழ். மாநகர சபையில் பணியாற்றுகின்றனர். அதனால் தங்களது உற்சாகத்தையும் முயற்சியையும் நான் நன்கு அறிவேன். தங்கள் நிலையத்தில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட துரிதமான கட்டுமானப் பணிகளில் சகல அங்கத்தவர்களுடன் நிர்வாக சபையினர் அயராது உழைத்துள்ளனர். அதே நிர்வாக சபையினரின் காலத்திலேயே பொன் விழா இடம்பெறுவது இறையருள் என்றே கூற வேண்டும்.

தங்களது பொன் விழாவும், விழா மலரும் சிறப்படைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறை ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

**செ. கந்தையன்**
முதல்வர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி




ஒரு நிறுவனம் ஐம்பது ஆண்டு கால சேவையினைப் பூர்த்தி செய்கின்றது என்பது ஒரு சரித்திர சம்பவமாகும். இந் நிறுவனம் ஆரம்பத்தில் சனசமூக நிலையமாக ஆரம்பித்து கிராம அபிவிருத்திக்கு என கிராம அபிவிருத்திச் சங்கத்தையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு இச்சாதனையை அடைந்தது என்று கூறும்போது இந்நிறுவனத்தை பிரதிபலிக்கும் கிராம மக்களின் ஒற்றுமைக்கும் மன எழுச்சிக்கும் இது ஒரு சான்றாகும்.

இந் நிறுவனத்தின் ஐம்பது ஆண்டு காலப்பகுதியில் முப்பது ஆண்டுகள் வரை இந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டவன் என்பதனையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எல்லாம்வல்ல எம்பெருமான் நாராயணன் பெயரால் உருவாக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் ஐந்து தசாப்த காலங்களிலும் தமிழுக்கும் கலை வளர்ச்சிக்கும் அயராது பணியாற்றி வந்துள்ளமை யாழ்குடாநாடு மட்டுமன்றி இலங்கை பூராகவும் அறிந்த உண்மையாகும்.

இந் நிறுவனம் பல கலைஞர்களையும், சமூகத் தலைவர்களையும், பண்பாளர்களையும், சமய முன்னோடிகளையும் உருவாக்கிய பெருமையைப் பெற்றுள்ளது.

எனவே, இந்த ஐம்பது ஆண்டுகால சேவையினைப் பூர்த்தி செய்யும் இச் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும் பொன் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைவதுடன் மட்டுமன்றி இந் நிறுவனம் மேலும் பல்லாண்டு காலம் சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

வணக்கம்

**பெ. கனகசபாபதி ஜே. பி.**
தலைவர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# A MESSAGE

It's with an immense pleasure, I send this message to " Pon Vizha Malar " on the occasion of its release to mark the Golden Jubilee Celeb--ration of Sri Narayana Community Center at Kon--avil. The magnificent service rendered by this Center in diverse disciplines to the socie'y thro--ugh organizations like Rural Development Society, the Montsory School and the Marumalarchchy Sports Club which furction vigorusly under its generous Patronage, is highly commendable.

Community Centers play a vital role in the uplift of societies by taking crucial decisions espe--cially at moments of hardship and constraint. They endeavour in bringing unity, coeperation and consensus when there is conflict. They are the fortification agaiust foul agents such as ignorance and ill feeling and they instil moral valnes in the society. The Sri Narayana community Center is exemplary in its role for human progress.

I congratulate all those who are associated with this Community Center for their esteemed service.

**VAIRAMUTHU SUNTHARESAN**
Instructor in English
ELTC,
University of JAFFNA,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலயைம் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதை எண்ணிப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தச் சனசமூக நிலையம் தற்போதைய நிலைமையிலும் தனது அயராத முயற்சியால் மக்களுக்கு அரிய பல சேவைகளை வழங்கி வீறு நடைபோட்டு வருகின்றது.

கிராம மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஆளுமை விருத்திக்கும் கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்ப்பதற்கும் இச்சனசமூக நிலையமானது கடந்த 50 ஆண்டுகளாக அயராது உழைத்துப் பொன் விழாக் காணும் இவ்வேளையில், அதனுடைய சேவைகள் பல்கிப் பெருகி, பன்மடங்காகி வளர வேண்டுமென மனமார வாழ்த்துவதோடு பொன்விழாவின் பூரிப்புக்கண்டு வெளியிடப்படும் மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- நன்றி -

**திருமதி. சிவானந்தி மன்மதராசன்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
பி/ உ. உ. ஆ. அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# வாழ்த்துச் செய்தி

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அடங்கும் கோண்டாவில் பிரதேசம் அனைத்து வளங்களும் ஒருங்கே அமைந்த இந்த மண்ணிலே ஆலயங்களுக்கும், சன சமூக நிலையங்களுக்கும் குறைவேயில்லை. அந்த வகையில் ஸ்ரீரங்கநாதன் அருள்பாலிக்கும் வல்லீபுர நாதர் ஆலயச் சூழலிலே மக்களின் சமூக மேம்பாட்டுக்கும் அறிவு விருத்திக்கும் பெரும் பங்காற்றிவரும் 'ஸ்ரீநாராயணா' சனசமூக நிலையம். எமது சபை எல்லைக்குள் நல்ல முறையில் வரும் ச. ச. நிலையங்களில் ஒன்றாகும். பிறக்கும் போதும் புதுவருட தினத்திலே தனது சேவையின் 50வது ஆண்டு பொன்விழாவை நிறைவு செய்யவுள்ள இந்த மகிழ்ச்சியான நேரத்திலே வெளியிடப்படும் பொன்விழா மலர் சிறப்பாக அமையவும் இந்த நிலையத்தை நல்ல முறையில் நிர்வகித்துவரும் நிலைய நிர்வாகிகளுக்கும், அன்பிற்குரிய மக்களுக்கும் நல்லூர் பிரதேச சபையின் சார்பிலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பிலும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

- நன்றி -

**க. மணிபல்லவராஜன்**
(ஜே. பி. யூ. எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 50வது ஆண்டு பொன் விழா
## வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல என் வணக்கத்திற்குரிய விநாயகப் பெருமானின் திருப்பாதார விந்தங்களை தலைமேல் சூட்டிப் பணிந்து காத்தற் கடவுளாகிய கண்ணபிரானின் கருணையோடு எனது அன்புக்கினிய மக்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த கோடி வணக்கங்கள் உரித்தாகட்டும். ஓர் மனிதனுக்கு இரு கண்கள் போல ஓர் சமூகத்திற்கு இரு கண்களாக விளங்குவது. ஒன்று ஆலயம், அடுத்தது சனசமூத நிலையமாகும். இவற்றை அறிந்தவர்கள், உணர்ந்தவர்கள் தெரிந்தவர்கள் ஆரம்பகாலத்திலேயே இவற்றை உருவாக்கியுள்ளார்கள், இவர்களுக்கு மனமார்ந்த உளமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு 47 சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றுள் சகல வளத்தையும் கொண்டு இயங்குவது. ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமாகும் குறிப்பாக ஏனைய சனசமூக நிலையங்களுள் முன்மாதிரியாக திகழ்கின்றது. அது மாத்திரமன்றி வருடாவருடம் ஆண்டு விழா புதுவருடப் பிறப்பன்று இல்ல விளையாட்டுப் போட்டிகளுடன் ஆரம்பிக்கப்படுவது தனிச்சிறப்புடையதாகும். இவ்வருடம் 50 வது ஆண்டு பொன்விழா மலர் வெளியீடு இடம் பெறுவது மிகவும் சந்தோஷகரமானது மேன்மேலும் இச் சனசமூக நிலையம் எழுச்சி பெற்று வளர்ச்சி பெற்று பல்துறையிலும் சேவை புரிய வேண்டும் என வேண்டி இவ்பொன்விழா மலர் சிறப்புற மனமார வாழ்த்துகின்றேன்.

நன்றி

இங்ஙனம்
மக்கள் சேவையிலுள்ள
**துரை. தவராசா J.P.**
உப தலைவர்
நல்லூர் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 வது ஆண்டு விழா

# வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலையம் ஐம்பது ஆண்டுகளைக் கடந்து பொன்விழா கொண்டாடும் வேளை இக்கிராமத்தின் முதலாவது சமாதான நீதிபதியாக இருந்து வாழ்த்து தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இச்சனசமூக நிலையம் அரசியல் சமய வேறுபாடுகளின்றி இக்கிராமத்தின் முன்னேற்றத்துக்காக தலைமுறை தலைமுறையாக இளைஞர்களால் சிறப்பாக நிர்வாகிக்கப்படுகின்றது. ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நிலையத்துக்கு நிலையான காணியோ, கட்டிடமோ கிடையாது. 1960 ஆம் ஆண்டு எனது நிர்வாகத்தினதும் திரு. வி. மு. கந்தையா அவர்களினதும் பூரண முயற்சியால் திருமதி பிள்ளையாள் முத்தியின் உறவினர்களால் முதன் முதல் காணி அன்பளிப்பு செய்யப்பட்டதன் பயனாக இன்று மேல் மாடிகளைக் கொண்ட சனசமூக நிலையமாக அமைந்து மக்களுக்கு சேவை செய்து வருகின்றது. இதனால் காணி தந்தவர்களும் அதனைக் தேடிய நாங்களும் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இந்த நிலையம் நிலப்பரப்பில் இருந்து பல நூற்றாண்டுகள் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துவதோடு இவ்பொன் விழாவினையொட்டி வெளியிடப்படும் பொன்விழா மலர் சிறப்பாக மலர எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**எம். ஐ. நடராஜசிங்கம்**
சமாதான நீதவான் எம். ஐ. ஏச். ஆர். ஐ. எம். பி.
சித்த ஆயுள்வேத வைத்தியர்
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கமும் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகமும் பாலர் பாடசாலையும் தமது 50 ஆவது ஆண்டு நிறைவினைப் பொன்விழாவாகக் கொண்டாடுவதையிட்டு மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

இக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் பல திட்டங்களினூடாக 50 வருடங்கள் சனசமூக நிலையமும், கிராம அபிவிருத்திச் சங்கமும் உழைத்திருக்கின்றன. இதனால் யாழ் மாவட்டத்திலேயே ஒரு முதல்தரமான அபிவிருத்திச் சங்கமாக இன்று மிளிர்ந்து கொண்டு இருக்கின்றது.

பாலர் பாடசாலை எத்தனையோ கல்விமான்களை உருவாக்கிக் கொடுத்ததோடு, மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களையும் வெற்றிப் பெருமிதத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

சமூக விழுமியச்சிந்தனைகளை ஏற்படுத்தி கல்வி பொருளாதார கலை, கலாச்சார மேம்பாட்டிற்கு வழி காட்டி மக்களை விழிப்படையச் செய்துள்ளது. அத்தோடு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளை அமைப்பதற்கும் தனது இடத்தின் ஒரு பகுதியைக் கொடுத்துதவி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது. என்னால் இக்கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு தொடர்ந்து 5 வருடம் செயலாளராக கடமையாற்றும் வாய்ப்பை பெற்றிருந்தேன் அதனையிட்டு உளம் மகிழ்ந்து கொள்கிறேன். அத்தகைய கிராம அபிவிருத்திச் சங்கமானது மணிவிழா, வைரவிழா, அமுதவிழா, நூற்றாண்டுவிழா ஆகியவற்றை கண்டு இன்னும் வானளாவ உயர்ந்த கட்டிடப் பொலிவோடு வளம்பெற எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லீபுரநாதர் பெருமானை இறைஞ்சி வாழ்த்துவதோடு இவ்வேளையில் வெளியிடப்படும் பொன்விழா மலர் சிறப்புற அமையவும் எனது உள்ளத்து உளமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**நா. கிருஷ்ணபிள்ளை**
தலைவர்,
ஸ்ரீ நாராயணா கிளை J/19
நல்லூர் ப. நோ. கூட்டுறவுச் சங்கம்
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாழ்த்துச் செய்தி

சீர்மேவு கோண்டாவில் கிழக்குப் பதியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வல்லீபுரநாதப் பெருமானின் அருட் கடாட்சத்தின் பொருட்டு ''நாராயணன்'' பெயரில் ''ஸ்ரீ நாராயண சனசமூக நிலையம்'' என்னும் ஒரு ஸ்தா பனத்தை ஏற்படுத்தி இப்பகுதி மக்களின் கல்வி, பொரு ளாதாரம், விளையாட்டு, கலை, பண்பாடு, ஆத்மீகம் போன்றவற்றிலும் மக்களின் சகல இன்ப துன்பங்களிலும் தன்னை அற்பணித்து மக்களின் ஸ்தாபனமாக விளங்கு கின்றது.

இத்தாபனத்தின் வளர்ச்சிக்கு திருமதி பிள்ளை யான் முத்தியின் உறவினர்களும் திரு. ப. சின்னத்துரை என்பவரும் தங்களது காணிகளை நிலையத்துக்கு அன் பளிப்பாக வழங்கியதனாலும் இக்கிராமத்தில் வாழ்ந்த முன்னோர்கள் பல இன்னல்கள் பல துன்பங்கள் மத்தி யிலும் இப்பகுதி மக்களின் அடிப்படை வளர்ச்சிக்கு ஏற் பட்ட தடைகளை அகற்றுவதற்கு பல அறவழிப் போராட் டங்களையும் நடாத்தி மக்களை ஒருங்கே அணி திரட்டி தங்களை முழுமையாக இந்நிலைய வளர்ச்சிக்கு அற்ப ணித்ததின் பயனாக இன்று இச்சனசமூக நிலையம் ''பொன் விழாவைக் கண்டுள்ளது.

இச்சனசமூக நிலைய வளர்ச்சியில் இக்கிராம மக் களின் சகல விதமான பூரண ஒத்துழைப்பும் பிரதேசச் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், பிரதேசசபைத் தலைவர்கள், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், கிராமசேவை அலுவலர்கள், யாழ்/ லயன்ஸ் கழகம், சர்வோதய நிறுவனம், யூ. என். எச். சீ. ஆர் நிறுவனம், யுனிசெப் நிறுவனம், ஜீ.ரீ.சற் நிறுவனம், அகதிகள் புனர்வாழ்வு கழகம் போன்றவர்களின் அனுசர ணையும் ஆலோசனைகளும் மேலும் சிறப்பாக இயங்க வழி செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்மண்ணில் பல பட்டதாரிகளும் பல இளைஞர் கள், யுவதிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றதுடன் பல அரச திணைக்கழகங்களிலும் ஊழியர் களாகவும் தொழில் புரிகின்றனர் இப்பெருமையும் எமது சனசமூக நிலையத்துக்கே சாரும்.

தம்மக்களின் பெருமைகண்டு கழிப்புறும் "ஸ்ரீ நாரா யண சனசமூக நிலையத்தின்" பொன்விழா நிகழ்வுகளில் ஒன்றாகிய பொன் விழா மலர் வெளியீடு சிறப்பாக நிகழ வாழ்த்தி இப்பகுதி மக்களின் வாழ்விலும் இச்சனசமூக நிலையத்தின் சேவையிலும் எமது வல்லீபுரநாதரின் அருட்பார்வை என்றென்றும் கிடைக்க வேண்டிப் பிரார்த் திக்கின்றேன்.

நன்றி

**திரு. ஐ. இராசரத்தினம்**
காப்பாளர் - ஸ்ரீ நாராயணாசனசமூக நிலையம்
தலைவர் - ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்தி சங்கம்
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ வல்லீபுரநாதரின் அருளோடும், சென் செபஸ்தியார் ஆலய அருளோடும் பொன்விழா கொண்டாடும் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய ஆரம்ப ஸ்தாபகர்களையும் தற்போதைய நிர்வாகிகளையும், உதவி புரிந்தோர்களையும், பொதுமக்களையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

''கல்வியே சிறந்த செல்வம்'' இந்நிலையை நமது சமூகம் மிக விரைவில் அடைய வேண்டும். நமது சமூக இளைஞர், யுவதிகளின் நற்பண்பு, பல்கலைக்கழக அனுமதிகள், கல்வி நிலைகள் என்பன எங்களை மகிழ்வூட்டுகின்றது.

நமது சமுதாயத்தைப் பற்றி சிறப்பாக, பண்பாக பேசுவது நமக்கு பெருமையாகவுள்ளது.

இந்த ஆண்டில் பொன்விழாக் கொண்டாடி பொன்விழா மலர் வெளியீடு செய்ய நன் முயற்சியில் ஈடுபட்டுள்ள நல்லுள்ளங்களையும் வெளியீடு செய்யவுள்ள மலர் சிறப்புறவும் எனது வாழ்த்துக்கள் பல.

வாழ்க நமது சமுதாயம்
வளர்க நமது ஒற்றுமை

நன்றி

**க. நல்லைநாதன்**
பொறியியலாளர்
சிங்கப்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் பொன் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் பொன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கிராம மக்கள் அனைவரதும் அயராத முயற்சியினாலும், ஒத்துழைப்பின் பயனாகவும் ஸ்தாபிக்கப்பட்ட இவ் அமைப்புகள் கடந்த 50 ஆண்டு காலமாக ஆற்றி வரும் பணிகள் போற்றத்தக்கதாகும். குறிப்பாக இக் கிராம மக்களின் பொதுநலன்களிலும், சிறார்களின் ஆரம்பக் கல்வி நடவடிக்கைகளுக்கும் சிறந்த பணியாற்றி வருகின்றன, ஒரு கிராமத்தில் இவ்வாறான அமைப்புக்களின் பங்களிப்பினால் அங்கு கலை, கலாச்சாரங்கள் பேணி பாதுகாக்கப்படுவதுடன் அங்கு சிறந்த நற்பிரஜைகளையும் உருவாக்க முடியும். இவ்வமைப்புக்கள் மேலும் சிறப்புற வளர்ச்சியுற்று கிராம மக்களுக்கும் சமூகத்திற்கும் சிறந்த சேவையாற்ற வேண்டுமெனக்கூறி பொன் விழா சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்த்துச் செய்தி

ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம் 50 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இந்நேரத்தில் இந் நிலையத்திற்கும், இவ் நிலையத்தால் வெளியிடப்படும் பொன்விழா மலருக்கும் எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மிகுந்த மகிழ்சி அடைகின்றேன்.

சனசமூக நிலையம் ஒன்று தொடர்ச்சியாக 50 ஆண்டுகளாக தனது மக்களிற்கு சேவையாற்றிக் கொண் டிருப்பதென்பது எளிதானதொரு விடயமல்ல. மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த நிலையில் அதன் சேவைகள் தொடருவதனால் சனசமூக நிலையத்தின் சேவைகள் அனைவராலும் உணரப்படுகின்றது.

இச்சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட மக்கள் தெய்வபக்தியும், ஈகைச்சிறப்பும், ஒற்றுமைப்பணியும் மிக்க வர்கள். எந்தவொரு காரியத்தையும் செருக்கடக்கி சிரம் தாழ்த்தி நிறைவேற்றும் கல்விப் பெருந்தகைகளையும் பண்பாளர்களையும் உருவாக்கிய பெருமை இதற்கு உரிய தாகும்.

கல்வி, கலை, கலாச்சார அம்சங்களை வளர்ப்ப தற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கின்றது. இத்தகைய ஆக்கங்கள் ஊக்கங்களிற்கு கைகொடுத்த பெரியார்களை காலத்திற்குகாலம் வாழ்த்திக் கௌரவிக்கிறது. கல்வியில் முதல்நிலை பெறுவதற்கு அத்திவாரம் இடுவதுடன் வருடாவருடம் திறமையான மாணவர்களிற்கு பாரட்டும் பரிசில்களும் வழங்குகின்றது.

இத்தகைய சீரிய பணிகளை மேற்கொள்ளும் இந் நிலையத்தின் சேவை மேலும் சிறந்த முறையில் தொடர வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

இச்சங்கம் உருவாக ஆரம்பகர்த்தாக்களாக இறந் தவர்களை சிரம்தாழ்த்தி வாழ்த்துகின்றேன். இப்புதிய கட்டடம் உருவாக பெரும் முயற்சியெடுத்த அனைவரை யும் 50 வருடகாலத்தில் பணியாற்றிய தலைவர்களையும் ஏனைய அங்கத்தவர்களையும் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

**க. நரேஸ் நேசன் B.Sc.**
கணக்காய்வாளர்
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்,
ஸ்ரீ நாரயண கிராம அபிவிருத்திச்சங்கம்,
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2002ம் ஆண்டு எமது சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்கள்**




**2002ம் ஆண்டு இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் இல்லக் காப்பாளர்கள், தலைவர்கள், உபதலைவர்கள், தலைவிகள், உபதலைவிகள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2001ம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப் பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட வீரர்கள்**



**2001ம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப் பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட வீரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப் பெற்ற
தாச்சிச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி
முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட வீராங்கனைகள்




எமது பழைய சனசமூக நிலையத்தின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தகவல் தொழிநுட்பம் சார்ந்த சந்தைப்படுத்தல்"
# IT Based Marketing

**Miss. S. Sujeetha,**
**Asst. Lecturer,**
**Dept. of Management Studies**

## 1.1 அறிமுகம் ( introduction )

நிறுவனங்கள் தமது அன்றாட காகித வேலைகளை இலகுபடுத்துவதற்காக பயன்படுத்தத் தொடங்கிய தகவல் தொழிநுட்பமானது இன்று நிறுவனங்களின் ஆளணி முழுவதையும் பிரதியீடு செய்யக்கூடிய வகையில் அதன் பயன்பாடுகளும் பிரயோகங்களும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. சாதாரண வேலையாட்கள் முதல் தொழில் வல்லுனர்கள் வரை தகவல் தொழிநுட்பத்தை பயன்படுத்தாது தமது ஒரு நாள் வேலையைக்கூட சிறப்பாக செய்ய முடியாதளவிற்கு விரும்பியோ, விரும்பாமலோ தகவல் தொழினுட்பம் மனித வாழ்வின் ஒரு பகுதியாக மாறிவிட்டது என்றே சொல்லலாம். அந்த வகையில் நிறுவனங்கள் தமது சந்தைப்படுத்தல் கருமங்களை சிறப்பாக ஆற்றுவதற்கும், போட்டி அடிப்படையிலான நன்மையை ( Competitive Advantage ) பெற்றுக் கொள்ளவும் தகவல் தொழிநுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பது பற்றியே இக்கட்டுரை ஆராய்கிறது.

## 1.2 தகவல் தொழிநுட்பமும் சந்தைப்படுத்தலில் அதன் தாக்கமும். Information Technology and its impact on Marketing.

பொதுவாக தகவல் தொழிநுட்பம் என்பது கணனியினை மட்டும் உள்ளடக்கியது என்றும் இவ்விருபதங்களும் ஒன்றுக்கு ஒன்று மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய பதங்கள் என்றும் மாணவர்களிடையே ஒரு தவறான கருத்து நிலவுகிறது. உண்மையில் கணனி மற்றும் கணனி சார் முறைமைகள் என்பவை தகவல் தொழினுட்பம் என்னும் விருட்சத்தின் ஒரு கிளை மாத்திரமே. இத் தகவல் தொழினுட்பம் என்னும் பதம் கணனி தொழிநுட்பத்துடன் ( Computer technology ) தகவல் தொடர்பிற்குதவும் தகவல் தொடர்பு முறைகளையும் ( Communication technology ) அதாவது பக்ஸ், தொலைபேசி போன்ற தொடர்பு சாதனங்களது பிரயோகங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

இதே போன்றே சந்தைப்படுத்தல் என்னும் பதத்தினை எடுத்துக் கொள்வோமாயின் நுகர்வோரது தேவையினை அறிந்து அவற்றினை பூர்த்தி செய்வதுடன் தொடர்பு பட்ட அனைத்துக் கருமங்களையும் உள்ளடக்கியதாக இது காணப்படும்.

தகவல் தொழிநுட்பமானது சந்தைப்படுத்தலில் பல வகையில் உதவி புரிந்தாலும்கூட இக்கட்டுரையானது பின்வரும் மூன்று சந்தைப்படுத்தல் முறைகளையுமே முக்கியமாக ஆராயவிருக்கின்றது.

(i) நேரடி அஞ்சல் சந்தைப்படுத்தல்.
( Directmail Marketing )

(ii) தொலைச்சந்தைப்படுத்தல்.
( Tele Marketing )

(iii)தொடரறா சந்தைப்படுத்தல்.
( On-line Marketing )

## 1.3 நேரடி அஞ்சல் சந்தைப்படுத்தல் Direct Mail Marketing

இம்முறையின் கீழ் நிறுவனங்கள் தமது பொருட்கள், சேவைகள் பற்றிய விபரங்கள், குறிப்புகள், அறிவிப்புகளை ஒரு குறிப்பிட்ட தொகுதி வாடிக்கையாளருக்கு நேரடியாக அஞ்சல் செய்யும். இவ் விபரணங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் தமக்கு அப் பொருட்கள், சேவைகள் தொடர்பாக ஆர்வம் இருப்பின் ஏதோ ஒரு வழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( தகவல் தொழிநுட்ப ஊடகங்கள் ஊடாக அல்லது சாதாரண அஞ்சல் மூலம் ) கட்டளைகளைப் பிறப்பிப்பர். கட்டளையிடுதல் தொடர்பாக ஆர்வம் காட்டாத நபர்களுக்கு மீண்டும் மீண்டும் விபரணங்கள் அனுப்பப்பட்டு கொள்வனவுக்கான தூண்டல் வழங்கப்படும். இந்த அஞ்சலிடல் முறைமைக்கு முன்னர் சாதாரண தபால்கள் பயன்படுத்தப்பட்டாலும் தற்பொழுது உள்ள தகவல் தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக மின்னஞ்சல் (e-mail ), தொலைநகல் ( Fax-mail ) மற்றும் குரல் அஞ்சல் ( Voice mail ) போன்றன அண்மைக்காலங்களில் பாரியளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இங்கு மின்னஞ்சல் ( e-mail ) என்பது ஒரு கணனியில் இருந்து இன்னுமொரு கணனிக்கு எழுத்து வடிவிலோ, ஒலி வடிவிலோ, ஒளி வடிவிலோ தகவலை பரிமாற்றும் ஒரு ஊடகம் ஆகும். அதே போன்று தொலைநகல் அஞ்சல் என்பது தொலைபேசி வலையமைப்பினூடாக பக்ஸ் என்னும் இயந்திரத்தினைப் பயன்படுத்தி அதே மாதிரியான இன்னுமொரு பக்ஸ் இயந்திரத்திற்கு ஆவண வடிவில் தகவல்களை அனுப்பும் முறை ஆகும். தற்பொழுது கணனிகள் ஊடாகவே தொலைநகல் அனுப்பும் வசதி காணப்படுகின்றது. குரல் அஞ்சல் என்பது தொலைபேசி இலக்கத்தைக் கொண்ட நபர் ஒருவருக்கு தொலைபேசியைப்போலவே ஒலி வடிவில் தகவலை அனுப்பும் முறைமையாகும். இங்கு தகவலைப் பெற்றுக் கொள்பவர் அழைப்பில் இல்லாத நேரத்திலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பின்னர் வழங்கப்படக்கூடிய நன்மை காணப்படுகின்றது.

நேரடி அஞ்சல் முறைமையில் விபரணங்கள் அனுப்பப்படவேண்டிய பெயர், முகவரி போன்ற விடயங்கள் கணனியின் உதவியுடன் ஒரு கோப்பாக ( file ) அல்லது தரவுத் தளமாக ( Data - base ) அஞ்சல் பட்டியல் வடிவில் (Mailing - list ) சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.இந்தப் பட்டியல் கடந்த கால வாடிக்கையாளரை ( Existing customers ) மட்டுமன்றி நிறுவன பொருட்கள் சேவைகளில் ஆர்வமாக உள்ள எதிர்கால வாடிக்கையாளரையும் ( Intended customers ) உள்ளடக்கி இருக்கும். இவை தொடர்பான விபரங்கள் பல்வேறு மூலகங்களிலிருந்து தகவல் தொழிநுட்பம் சார்ந்த அடிப்படையிலோ அல்லது மனித வலுவினைப் பாவித்தோ பெற்றுக் கொள்ளப்படலாம். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் குழுவே நிறுவனத்தின் இலக்கு சந்தையாக ( Target market ) கருதப்படும்.

இவ்வகையான சந்தைப்படுத்தல் முறைமையினை பயன்படுத்தும் நிறுவனத்திற்கு சிறந்த உதாரணமாக குழந்தைகளுக்கான உணவு வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமான ( Nestle ) நிறுவனத்தின் சிறுவர்களுக்கான உற்பத்திப் பிரிவினைக் குறிப்பிடலாம். இப் பிரிவு தமது பிரதேசத்திலுள்ள இளம் தாய்மார் தொடர்பான தரவுத்தளத்தை ( Data-base ) பேணி வருகின்றது. காலத்துக்குக் காலம் அவர்களுக்கு குழந்தை வளர்ப்பு தொடர்பான மற்றும் மருத்துவ ஆலோசனை தொடர்பான குறிப்புக்கள் அனுப்பிவைக்கப்படும். இவற்றோடு தமது நிறுவனப் பொருட்கள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் விபரணங்கள் அனுப்பிவைக்கப்பட்டு கொள்வனவு தூண்டப்பட்டு கட்டளைகள் பெறப்படுகின்றது.

## 1.4 தொலைச் சந்தைப்படுத்தல் Tele Marketing

இம் முறைமையானது நவீன தொலைத்தொடர்பு சாதனங்களான தொலைபேசி போன்றவற்றினூடாக புதிய வாடிக்கையாளரைக் கவர்வதற்கும், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளரிடம் இருந்து ஒழுங்கான முறையில் தொடர்ச்சியாக கொள்வனவுக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவுகிறது. இந்த தொலைச் சந்தைப்படுத்தலின் ஒரு பிரிவாக இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு சந்தைப்படுத்தல் முறைமையே (Home Banking) ஆகும். இது வீட்டில் இருந்தவாறே வங்கியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் ( Fund Transfer ), காசோலைப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல், நிலுவைகளைச் சரிபார்த்து அறிந்துகொள்ளல் ( Balance verfication ) நிறுத்துதல் கட்டளைகளைப் பிறப்பித்தல் ( Stop payment ) போன்ற பல்வேறு கருமங்களை ஆற்றுவதற்கு வழிசெய்கின்றது.

தகவல் தொழில் நுட்பம் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் இதற்கென வேறு சில உபகரணங்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அவையாவன தன்னியக்க அழைப்பு இயந்திரம் ( Automatic-Dialing machine ) பதிவு செய்யப்பட்ட செய்தி பரிமாற்றல் இயந்திரம், ( Recorded-Message player ) பதிலளிக்கும் இயந்திரம்.( Answering machine ) இந்த உபகரணங்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தாமாகவே அழைப்பினை ஏற்படுத்தி ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள விளம்பரங்கள் மற்றும் விபரணங்களை வாடிக்கையாளருக்கு வழங்கும். இது மாத்திரமன்றி கட்டளைகளை மேற்கொள்வதற்காக அழைப்புக்களை ஏற்படுத்துகிற வாடிக்கையாளரது செய்திகளையும் கட்டளைகளையும் பதிவு செய்து நிறுவன சந்தைப்படுத்தல் பிரிவுக்கு வழங்குவதுடன் வாடிக்கையாளரது விசாரணைகளுக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நியமமான பதில்களையும் வழங்கி வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துகின்றன.

## 1.5 தொடரறா சந்தைப்படுத்தல் On-line Marketing

இப்பதமானது இலத்திரனியல் வர்த்தகத்திற்கு (e-commerce) மாற்றீடானது. இத்தகைய வியாபாரமானது பௌதீக ரீதியான சந்தைக்கு ( Physical Market place ) பதிலாக கற்பனை ரீதியான சந்தை வெளியில் ( Market Space ) நடைபெறுவதாக கருதப்படுகிறது. இந்த சந்தைப்படுத்தல் முறைமையானது இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறைமையாகும். இந்த சந்தைப்படுத்தல் முறையின் கீழ் பின்வரும் நான்கு பிரயோகங்கள் முக்கியம் பெறுகின்றன.

(i) இலத்திரனியல் வெளிப்படுத்துகை Electronic presence

(ii) தொடரறா விளம்பரம் On-line Advertisment

(iii) செய்திக் குழுக்கள் மற்றும் இணைய சமூகத்துடன் தொடர்பு கொள்ளல் participating in newsgroups and wep communities.

(iv) மின்னஞ்சல் முறைமை e - Mailing

### 1.5.1 :- இலத்திரனியல் வெளிப்படுத்துகை Electronic presence

நிறுவனங்கள் தமது தேவைக்கென இணையத்திலே ஒரு வெப் தளத்தை (Web Site) உருவாக்கி கொள்வதையே இது குறிக்கும். இந்த வெப் தளங்கள் கூட்டிணைக்கப்பட்ட வெப் தளங்களாகவோ (Corpornte web Site) அல்லது சந்தைப்படுத்தல் வெப் தளங்களாகவோ (marketing web Site) காணப்படலாம். கூட்டிணைக்கப்பட்ட வெப் தளங்கள் நிறுவன வரலாறு, இலக்குகள், செயற்பாடுகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி இருக்கும். சந்தைப்படுத்தல் வெப் தளங்கள் சந்தைப்படுத்தலை இலக்காக கொண்டு நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளது (Catalog) பொருட்களை வாங்குவது தொடர்பான சிறு செய்திகள் (Shopping Tips) மற்றும் நிறுவன விளம்பரம், விற்பனை மேம்படுத்தல் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி கவர்ச்சிகரமாக பாவனையாளரை மீண்டும் மீண்டும் தொடர்பு கொண்டு பார்க்க (Repeat Visit) தூண்டும் வகையில் அமைந்திருக்கும்.

### 1.5.2 :- தொடரறா விளம்பரங்கள் On - line Adventising.

இணையத்தினூடாக செய்யப்படும் விளம்பரங்களை இது குறிக்கும். இந்தவிளம்பரங்கள் 3 வகையில் விளம்பரப்படுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) வர்த்தக விளம்பர சேவையை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட வெப் தளங்களினூடாக விளம்பரம் செய்தல். Vsirg Commercial ON - lire Services.

(ii) வர்த்தகம் சார்ந்த துனையுடன் கூடிய செய்திக் குழுக்களுடாகவிளம்பரப்படுத்துதல். Vsirg Commercial Newsgroups.

(iii)இணையத்தின் எந்தவொரு வெப் தளத்தில் நுழைந்தவுடனும் பாவனையாளரை கவரும் வகையில் திரையில் தோன்றும் விளம்பரங்கள். Vsirg Pop - vp Adverdisement.

இவ்வாறான இணைய விளம்பரங்கள் மிகவும் கவர்ச்சிகரமானவை. இணைய பாவனையாளர் தமக்கு தேவையான வெப் தளத்தினும் நுழைய மறந்து இவ் விளம்பரங்களின் பால் ஈர்க்கப்படுமளவிற்கு கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்டிருக்கும். சில விளம்பரங்களை பொறுத்தவரை அவை பாவனையாளர் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் திரையினை முழுமையாக ஆக்கிரமிக்கும். இவற்றினை பார்வையிட்ட பின்பே தமக்கு தேவையான வெப் தளத்துக்குள் அவர்கள் நுழைய முடியும். எனவே சாதாரண ஊடக தளங்களுடான விளம்பரங்களை விட தொடரனா விளம்பரங்கள் பெரிதும் வெற்றிகரமாக தொழிற்படுகின்றன.

### 1.5.3 :- செய்திக்குழுக்கள் மற்றும் இணைய சமூகத்துடன் தொடர்பு கொள்ளல். News groups and web Communities.

இம்முறையில் நிறுவனங்கள் வர்த்தக துறைசார்ந்த தனிநபர், குழுக்கள், நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இவை அடிக்கடி பொதுவான சில தலைப்புகளில் தமது கருத்துகள், ஆலோசனைகளை ஒருவருடன் ஒருவர் பரிமாறிக் கொள்வர். இதனால் துறைசார்ந்தோருடன் மட்டுமன்றி வாடிக்கையாளருடனும் நல்ல தொடர்பு ஏற்படுகின்றது. மேலும் பொருள், சேவை தொடர்பான அறிவு (Product Awareness) விருத்தி செய்யப்படுவதுடன் இவற்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப எதிர்காலத்தில் தமது பொருட்கள் சேவைகளை வடிவமைத்து கொள்ள உதவுகின்றது. கணனி மென்தன்மி (Soffware) போன்ற பொருட்களின் சந்தைப்படுத்தல் இவ்வகைக்கு மிகவும் பொருத்தமாக அமைகின்றது.

### 1.5.4 :- மின்னஞ்சல் E - mail

மின்னஞ்சலானது பல்வேறு வகையில் சந்தைப்படுத்தலுக்கு ஆதரவு அளிக்கின்றது. இணைய பாவனையாளர் தமது கட்டளைகளை மின்னங்சல் மூலமாக வழங்க முடிவதுடன் நிறுவனங்கள் வாடிக்கையாளர் சேவைப்பிரிவினை (Customer Service Division) இணையத்திலேயே விஸ்தரிக்க முடியும். வாடிக்கையாளர் சேவைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் தமக்கு வரும் மின்னஞ்சல் மூலம் வாடிக்கையாளர் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்வதுடன் அவர்களது தேவைகள் விருப்பங்களை அறிந்து அதிலிருந்து எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட முடியும். வாடிக்கையாளருக்கு போதிய விளக்கங்கள், தீர்வு நடவடிக்கைள் உடனுக்குடன் வழங்கப்பட கூடியதாக இருப்பதால் நிறுவனத்தின் வாடிக்கையாளர் தொடர்பு (Customer Relasionship) பலப்படுத்தப்படுகின்றது. அது மாத்திரமன்றி கணனி வழியிலான ஒரு அஞ்சல் பட்டியலை (Computer based mailing list) உருவாக்கி அந்த வாடிக்கையாளர்களை நிறுவனத்தின் விசுவாசமான வாடிக்கையாளராக (Loyal Customers) தக்க வைத்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.6 :-தகவல் தொழில்நுட்பம் சார் சந்தைப்படுத்தலின் பிரச்சனைகளும் சவால்களும். Problems and Challenger faced by IT based Marketing

(1) வியாபாரத்தில் இடைநிலையாளராக (Intermediaries) தொழிற்படுகின்ற ஒரு தொகுதியினருக்கான தேவை நீக்கப்படுவதனால ஒரு தொகுதி வேலைப்படையினர் வேலையிழக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம். உதாரணமாக பயணமுகவர், பங்கு தரகர், காப்புறுதி முகவர், புத்தகசாலை உரிமையாளர்.

(2) இணையப் பாவனையாளர் பெருமளவு அறிவுசார் வாடிக்கையாளராக (Knowledge Customers) இருப்பதனால் பெரும்பாலான கொள்வனவும் இலத்திரனியல் உபகரணங்கள், கணனி வன்தன்மி, மென்தன்மி போன்றவையாகவே காணப்படுகின்றன. சாதாரண நுகர்வு பொருட்களது விகிதாசாரம் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகிறது.

(3) இணையத்தில் காணப்படும் வெப் தளங்கள் எண்ணற்றவையாக காணப்படுவதனால் அவற்றினை கொள்வனவு நோக்கில் தேடுவது சலிப்பூட்டுவதாகவும், பல வெப் தளங்களை நினைவில் வைத்திருக்க முடியாத நிலையம் காணப்படுகின்றது.

(4) இத்தகைய வியாபாரம் சார்ந்த சட்டங்கள் முழுமையாக வடிவமைக்கப்படாததாலும், அவற்றின் நடைமுறைச் சிக்கல்களாலும் இவ் வியாபாரம் பாதுகாப்பு அற்றதாக கருதப்படுவதால் வாடிக்கையாளர் தமது கடனட்டைகளை (Credit Cart) பாவிப்பதில் தயக்கம் காட்டுகின்றனர்.

(5) நிறுவனம் பற்றிய முக்கிய தகவல்கள் வர்த்தக சேவை நோக்கில் செயற்படும் நிறுவனங்களால் பயன்படுத்தப்படுவதால் நிறுவனங்களது தனித்துவம் (Privacy) பாதிக்கப்படுகிறது.

(6) இவ்வடிப்படையிலான வர்த்தகம் மனித உறவு முறைக்கு (Human Relatiun ship) பெரும் அச்சுறுத்தலாக காணப்படுகிறது.

## 1.7 :- முடிவுரை

இன்றைய நவீன யுகத்திலே அறிவுசார் தேடல்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்து செல்கின்றன. அந்த அறிவுசார் பொருளாதார உலகை கட்டியெழுப்புவதில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு இன்றியமையாதது. வளர்ச்சியடைந்த நாடுகளில் மாத்திரமன்றி இலங்கை போன்ற நாடுகளிலும் இதன் தேவைப்பாடு உணரப்பட்டு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் தற்பொழுது தகவல் தொழில்நுட்பம் என்பது கேட்பதற்கும் எழுதுவதற்குமான ஒரு கருப்பொருளாக காணப்பட்டாலும் மிக விரைவில் நாமும் தகவல் தொழினுட்பத்தின் பிரயோகங்களில் ஐக்கியமாகிவிடுவோம் என்பதில் ஐயமில்லை.

Reference :-

(1) Philip Kotler, Marketing Management, Millennium Edision, (Prentice - Hall of India Pvt Ltd, 1999)

(2) V. Eswaran, Informating Technology for Management, 1st edition, (2001).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் வளர்ச்சிப் படி நிலைகள்

திருமதி. பீ. லிங்கசபேசன்
B.A (HONS)
Dip. in Education
(ஆசிரியை, யா/ இணுவில் மத்திய கல்லூரி)

உணர்ச்சிகள் உள்ள எல்லா விலங்குகளைப் போன்ற மனிதனும் வளர்ச்சியடையும் உயிராகும். பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ச்சியாகப் பல மாறுதல்களை மனிதன் அடைந்து கொண்டே போகிறான் . மனித வளர்ச்சியில் ஏற்படும் இத்தகைய மாறுதல்களை குறிப்பிட்ட சில நிலைகளாகப் பிரிக்கலாம். இவற்றை வளர்ச்சிப் பருவங்கள் அல்லது வளர்ச்சி நிலைகள் என மனவியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மனிதனின் வளர்ச்சிகளை நிர்ணயிப்பதில் மரபுநிலை, சூழ்நிலை இரண்டும் முக்கிய பங்கு பெறுகின்றது. இதைவிட நுண்ணறிவும் பால் சார்ந்த பண்புகள், நாளமில் சுரபிகள், உண்ணும் உணவின் தன்மை, போதிய காற்றோட்டம், வெளிச்சம், சமுதாயப்பண்பாடு போன்றனவும் காணப்படுகின்றது. ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலையிலும் பொதுவான சிலபண்புகள் மேலெழுந்து காணப்படுகின்றது. வளர்ச்சி எனப்படும் இந்த வாழ்க்கை நிலைமையை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து கருத்துக்களை பியாசே, ஒரிக்கன் போன்ற பல்வேறு உளவியலாளர் கருத்துகளை வெளியிட்டு உள்ளார்கள்.

அண்மைக் காலங்களில் மேலை நாடுகளில் வளர்ச்சியடைந்து வருகின்ற உளவியலாளர்கள் மனித வளர்ச்சியைப் படிநிலைகளாகப் பிரித்து ஆராய்கின்றனர்.

(1) குழந்தைப் பருவம்

(2) பிள்ளைப் பருவம்

(3) கட்டிளமைப் பருவம்

(4) வளர்ந்தோர் பருவம்

## 1. குழந்தைப் பருவம் (INFANCY)

இப்பருவமானது பிறப்பிலிருந்து ஐந்து வயது வரை அமைந்து இருக்கும். இக்கால கட்டம் தொடர்பாக உளவியலில் கருத்து வேறுபாடு உண்டு. இந்தப் பருவம் பற்றி பல்வேறு உளவியலாளரும் பல்வேறு வயதுகளை காட்டுகின்றனர். சிலர் 3 1/2 வயது என்றும், வேறுசிலர் 4 வயது என்றும் இன்றும் சிலர் 7 வயது என்றும் கூறுகின்றனர். ஆனால் பிறப்பிலிருந்து ஐந்து வயது வரையும் நியமமான கல்வி தொடங்கும் காலமாகும். குழந்தை தனித்து வாழ்வதில்லை. பிறருடன் கூடியே வாழ்கின்றது. ஆகவே அது சமூகச் சூழ்நிலைக்கும் பொருத்தமுறல் வேண்டும். பொருத்தப்பாடு காரணமாக உடல் வளர்ச்சி, இயக்கை வளர்ச்சி, உள்ளக் கிளர்ச்சி வளர்ச்சி, சமூகப் பண்பு வளர்ச்சி ஆகியவற்றைக் காண்கின்றோம்.

குழந்தைக்கு நேரிடும் செயல்களால் அதனிடம் கிளம்பும் உள்ளக் கிளர்ச்சிகள் அவனுடைய மனநிலையைப் பொறுத்தவை. குழந்தையின் மனநிலையை அறிந்தவர் நியாயமற்ற நடத்தை என நாம் கருதும் பலவற்றை விளக்க முடியும். அபாயம் இல்லாத போது குழந்தை அஞ்சினாலும், குறை சொல்வதற்கு முன் மனம் நொந்தாலும், அச்சத்திற்கும், வெகுளிக்கும் காரணம் இல்லை என்று ஆலோசனையின்றிக் கூறுவதால் பயனில்லை. அவன் முன்னமே அல்லல் உற்று இருப்பதால் எளிதில் அஞ்கிறான் என்றும், தன்னம்பிக்கை இன்மையாலும் மற்றவர்கள் பால் கொண்ட எதிர்பாலும் அவன் குறை கூறுவதால் புண்படுகின்றான் என்று அறிதல் வேண்டும். அவற்றிற்குரிய காரணங்களைக் கண்டறிந்து அவனைக் குணப்படுதத முயல வேண்டும். குழந்தையின் உள்ளக் கிளர்ச்சிகள் பள்ளிச் செயல்களுடனும் கலந்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பிள்ளைப் பருவம் (CHILD HOOD)

இப்பருவம் ஐந்து வயதில் இருந்து பத்து வயதானது. இதனை வேறு உளவியலாளர்கள் இதன் பிற்பகுதியை முற்கட்டிளமைப் பருவம் என்று வகுத்து ஆராய்ந்து உள்ளனர்.

## 3. கட்டிளமைப் பருவம்

இப்பருவம் பத்துவயதிலிருந்து பதினெட்டு வயது என்றும், பத்தொன்பது, இருபது வயது என்றும் பலவாறு கூறியுள்ளனர். வாக்காளர் இடப்பில் பதிவு செய்யும் வயது பதினெட்டு ஆகையால் இப்பருவத்தை 10 - 18 வயது எல்லைக்குள் இடலாம். ஆங்கிலக் கவி சக்கரவர்த்தி ஷேஸ்பியர் குறிப்பிடுகையில்

"குதலைக் குரலிப் குழறியுங் கக்கியும்
தாதி கையதனில் தவழும் குழவியாய்
இளமை ஒளிரும் இன்முகம் தோன்ற
அரைகுறை மனத்தில் முனகல் குரலோடு
நத்தை போல் நகர்ந்து பையுங்கையுமாய்ப்
பன்றிக் கேழுர் பாலகனாகியும்
புருவப் பொலிவில் பொருமிய நெஞ்சம்
ஊதுலைக் துருத்தியின் வெதும்பிய ஒன்றாய்
சோகக் காதல் பாட்டிசைத் தாங்கே
காளைப் பருவமாம் காதலானாகியும்."

என்று குமர்ப் பருவத்தினை வர்ணித்துள்ளனர்.

குமர்ப் பருவம் அடிக்கடி விரைவான உடல் வளர்ச்சிக் காலமாகும். விவேகியான ஆசிரியர் குமரப் பருவத்தின் அவலட்சணத்தை பொருட்படுத்தமாட்டார்.

வளர்ந்தோர் என அங்கீகரிக்கப்படாத பருவம் கட்டிளமைப் பருவம் எனப்படும். இதனை நிலை மாறிக் கொண்டிருக்கும் பருவம் எனவும் கூறுவர். இது சிறுவரும் அல்ல வளர்ந்தோரும் அல்ல என்ற இடைநிலைப் பருவம் ஆகும். இப்பருவம் கைத்தொழிலில் புரட்சியின் பின்னர் ஓர் பிரச்சனைக்குரிய பருவமாகக் காணப்படுகின்றது. இளைஞர்கள் பல நெருக்கடிகளை அனுபவிக்கத் தொடங்கினார்கள். கல்வியில் போட்டி, தொழில்களில் போட்டி, சமூக அந்தஸ்தில் போட்டி, திருமணத் தெரிவிலே போட்டி போன்ற நிலமைகள் ஏற்படுகின்றது. இவை மேலைத்தேய கல்வி முறையினால் இளைஞர்களுக்கு பிரச்சனையைக் கொண்டு வருகின்றது.

இப்பருவம் தொல்குடி மக்களிடம் ஓர் பிரச்சனைக்கு உரிய பருவமாக இருக்கவில்லை. ஆண் பெண் பூப்படையும் போது ஓர் சடங்கு வைப்பார்கள், அவர்கள் தந்தையின் தொழிலை பரம்பரையாக மேற்கொள்வர். அத்துடன் பூப்பை தொடர்ந்து திருமணம் நடக்கும். கல்வியானது நீண்டகாலக் கல்வியாக அல்ல. ஆனால் மேலைநாட்டு வருகையால் இவற்றில் மாற்றம் ஏற்படுகின்றது. பூப்படையும் போது வயது வந்தவர்கள் என்பதன் குறியீடாக பெண்கள் பூப்படைவதால் சேலை கட்டுவர், ஆண்கள் பூப்படைதலைக் காட்ட சால்வை போடுவர். இவை மேலைத்தேய கல்வியால் இல்லாமல் போனது.

இதனால் இப்பருவம் உலகம் முழுவதிலும் ஓர் பிரச்சனைக்குரிய பருவமாகக் காணப்படுகின்றது. பாடசாலைகளில் ஆண், பெண் கற்கும் போது அங்கு பல பிரச்சனைகள் இப்பருவத்தில் ஏற்படுகின்றது.

## கட்டிளமைப் பருவத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள்

அ) உடலியற் காரணிகள் :-

எலும்பு கூடுவளர்ச்சி, உயரமும் எடையும் அதிகரிக்கும், உடலின் உள்ளுறுப்புக்கள் வளர்ச்சி அடையும், மூளை வளர்ச்சி பெறுகின்றது, குரல் நாண் நீளுதல், உரோமம் முகத்தில் மார்பில் வளர்தல், சுரப்பிகளின் தொழிற்பாடு போன்ற தீவிரமான துல்லியமான இருப்பருவத்தில் பசி அதிகரிக்கும், உணவு உட்கொள்வது அதிகரிக்கும் இதனால் தான் பெண்கள் பூப்படைந்ததும் நல்ல உணவு கொடுக்கின்றார்கள். ஆண்களை துலாவிலிருந்து வீழ்த்திக் கொடுத்தல் நடைபெற்றது. அதாவது துலாவில் இருந்து நீரை இறைக்கும் போது அவரை வீழ்த்தி வீழ்ந்தவருக்கு நல்ல உணவு கொடுத்தல் இப்பருவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) மன எழுச்சிக் குழப்பங்கள் :-

இப்பருவத்தில் மன எழுச்சிக் குழப்பங்கள் ஏற்படுகின்றது. திடீர் என ஏற்படும் உடல் மாற்றங்களால் மனப்பதகளிப்பு ஏற்படுகின்றது. உடலியல் மாற்றங்களால் ஏற்படும் இந்த மன எழுச்சியானது கூச்சத்தை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் இந்த மன எழுச்சியால் பயம், கூச்சம், பதகளிப்பு, கோபம் போன்ற உணர்வுகளுடன் காதல் உணர்வும் ஏற்படுகின்றது. இந்த காதல் உணர்வு இந்த கட்டிளமைப் பருவத்தில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். தவறுதலான சிந்தனையால் பயம் ஏற்படுகின்றது. காரணம் இல்லாமல் தோன்றும் பயம் சோபியா என்பர். இப்பருவத்தில் பரீட்சைப் பாடங்கள் தொடர்பான, உயர்கல்வி தொடர்பான, தமது எதிர்காலம் பற்றிய பயமாக இவை காணப்படும் குமரப் பருவச் சிறுமிகள் உடல் சம்பந்தப்பட்ட வரை அதிக ஆயாசப் பெறக் கூடும். ஏனெனில் இக்காலத்தில் அவர்கள் வீட்டு வேலைகளில் அதிக பங்கெடுக்கக் கூடும். ஆகையால் பாடசாலைகளில் மிதமிஞ்சிய முயற்சிக்கு இடங் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்பதை ஆசிரியர்கள் முக்கியமாக ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இ) உள ஆற்றல்

இப்பருவத்தில் சிக்கலான விடயத்தை பகுத்தாராயும் திறன், கணிதப் பிரச்சனைக்கு தீர்வு காணும் திறன், சொல் ஆற்றல் வளர்ச்சி அடையும் திறன், புதிதாக சொற்களை ஆக்கும் திறன், பிரயோக ஆற்றல் கருத்துக்களை நடைமுறைப்படுத்திப் பார்ப்பது போன்ற ஆற்றல்களை வளர்க்கும். தவறுகளை கண்டு பிடிக்கும் ஆற்றல், மனனம் செய்யும் திறன், மூளையில் நிறுத்தி வைக்கும் திறன் ஆகியன இப்பருவத்தில் வளர்ச்சி அடையும் காலமாகும்.

**கட்டிளமைப் பருவத்தின் பிரச்சினைகள்**

(1) அமைதியற்ற பருவம்

(2) காரணங்களே தொடர்பின்றி மனவெழுச்சிகள் பல சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.

(3) சமூக நிலமைகளோடு பொருந்திப் போகாமையும் ஓர் பிரச்சனை

(4) பெற்றோர் கட்டுப்பாடு விருப்பமில்லை.

(5) எதிர்காலம் பற்றிய பிரச்சனை

(6) கல்வி, பொருளாதாரம், சமூக மதிப்பு போன்றவற்றுடன் இணைத்துப் பல பிரச்சனைகள் இப்பருவத்தில் எழும்.

(7) பள்ளிக்கூடச் செயல்களுக்கு பங்கம் ஏற்படுத்தல்.

(8) பரீட்சை என்றால் விடுகைப் பத்திரத்துடன் வீட்டில் நிற்றல்

(9) பாடசாலையின் சுவர்களில் தமது பெயர்களையும், தமக்கு விருப்பமான பெயர்களையும் இடுதல்.

(10)ஆசிரியர்களுக்கு பட்டப் பெயர்களைச் சூட்டுதல்.

(11)பாடசாலை முகவாயில் இருந்தாலும் மதில் பாய்ந்து பாடசாலைக்குள் வருதல்.

இவற்றை கண்காணிக்க தற்பொழுது சீர்மியக் குழு பாடசாலைகளில் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பிரச்சனை தீர்க்கும் நடவடிக்கைகள்**

(1) கட்டிளைஞரோடு கலந்துரையாடல்.

(2) அவர்களுக்கு பொறுப்புக்களை கொடுத்தல்.

(3) விளையாட்டுகளில் ஈடுபடுத்தல்.

(4) கலையம்சங்களில் ஈடுபடுத்துதல்.

(5) சிறந்த பொழுதுபோக்கை ஏற்படுத்துதல்.

(6) சீர்மியம் செய்தல், உள ஆற்றல் என்பவற்றை வளர்க்க பள்ளிக் கூடத்தில் சீர்மிய அமைப்பை உருவாக்குதல்.

இறுதியான மனிதவளர்ச்சிக் கட்டமாக அமைவது வளர்ந்தோர் பருவமாகும்.

4. வளந்தோர் பருவம் :-

இதனை இரண்டாக பிரிக்கலாம்.

அ) வளர்ந்தோர் பருவத்தின் முன்னைய காலப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) வளர்ந்தோர் பருவத்தின் பின்னைய காலப்பகுதி

இதில் தொழிலும், திருமணமும் பெறுகின்ற பகுதி முன்னைய பகுதியாகவும் ஓய்வு பெறுவதோடு பிற்பகுதி முடிவடைகின்றது. ஆனால் இந்த பிற்பகுதியை முதிர்ச்சிப் பருவம் எனவும் இதனை

அ) முதிர்ச்சி முற்காலம்

ஆ) முதிர்ச்சி பிற்காலம்

முதிர்ச்சி முற்காலம் ஓரளவு உதவியின்றி செயற்படவும் முதிர்ச்சிப் பிற்காலம் பராமரிப்புக்கு ஒருவரது உதவி அவசியம்.

இவ்வாறான மனிதனின் வளர்ச்சிப் படிகளை 4 ஆக வரையறைப்படுத்தியுள்ளனர்.

உசாத்துணை நூல்கள் :-

(1) கற்றலும் கற்பித்தலும் - ஜெரிமிவூவால்போல்
(2) கல்வியில் மனவியல் - எஸ். சந்தானம்
(3) கல்வி இயல் - DR. H. S. S. லாரன்ஸ்
(4) கல்வி உளவியல் கோட்பாடுகள் - DR. ந. சுப்புரெட்டியார்
(5) உளநெறிக்கதைகள் - DR. சபா. ஜெயராசா
(6) ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும் - DR. சபா. ஜெயராசா

## சிரிப்பின் ரகங்கள்

| | |
|---|---|
| 1. ஓயாமல் சிரிப்பவன் | – பைத்தியக்காரன் |
| 2. இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் | – கோமாளி |
| 3. காணாமல் சிரிப்பவன் | – கஞ்சன் |
| 4. கற்பனையில் சிரிப்பவன் | – கவிஞன் |
| 5. நிலைமறந்து சிரிப்பவன் | – காதலன் |
| 6. கொடுக்கும் போது சிரிப்பவன் | – சூழ்ச்சிக்காரன் |
| 7. மகிமையில் சிரிப்பவன் | – மன்னன் |
| 8. அருளிற்கு சிரிப்பவன் | – ஆண்டி |
| 9. நினைவோடு சிரிப்பவன் | – அறிஞன் |
| 10. துன்பத்தில் சிரிப்பவன் | – மனிதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கீட்டு வலுப்பிணைப்பின் நவீன கொள்கைகள்

P. Abiman
Asst Lectarer
Dept of Chemistry
University of Jaffna.

சக்திச் சொட்டெண் பொறிமுறை வந்த பின் பங்கீட்டு வலுப்பிணைப்பை விளக்குவதற்கு அனேக புதிய கருத்துக்கள் முன்னுரைக்கப்பட்டன. பங்கீட்டுவலுப் பிணைப்பின் நவீன கொள்கைகள், அணுக்களின் இலத்திரன்கள் குறிப்பிட்ட நிலையான ஒழுக்குகளில் அசைவதில்லை ஆனால் வெளியில் (Space) சில பகுதிகளில் அசைகின்றன என்னும் அறிவை அடிப்படையாகக் கொண்டது.

இந்தக் கொள்கையின்படி பங்கீட்டு வலுப்பிணைப்பு இரு அணுக்களின் வெளி ஒழுக்குகள் ஒன்றின் மேல் ஒன்று மேற்படிந்து அவற்றின் இலத்திரன் அடர்த்திகள் இரு அணுக்களிடையே செறிவதால் உண்டாகும் பிணைப்பு ஒழுக்கு எனக் கருதப்படுகிறது.

இந்தவகை பங்கீட்டு வலுப்பிணைப்பு தோற்றத்தை விளக்க இரு முக்கிய கொள்கைளள் முன்வைக்கப்படும்.

(1) வலுவளவுப் பிணைப்புக் கொள்கை (V. B. theory)

(2) மூலக்கூற்று ஒழுக்குக் கொள்கை (M. O. theory)

இங்கு வலுவளவு பிணைப்புக் கொள்கை மூலம் விளக்கம் தரப்பட்டுள்ளது.

## வலுவளவுப் பிணைப்புக் கொள்கை (Valence Bond theory)

இக்கொள்கையில் இலத்திரன் சோடி பிணைப்புப் பற்றி சக்திச் சொட்டெண் பொறிமுறையால் விளக்கலாம். பிணைப்பானது அணுக்களுக்கிடையே ஓரிடப்படுத்தப்பட்டுள்ளது எனக் கருதப்படும். ஐதரசன் மூலக்கூறு உருவாகுவதை ஓர் எளிய உதாரணமாகக் கருதுவோம்.

ஒரு ஐதரசன் அணுவின் அலைச்சார்பு Qa எனவும், மற்றைய ஐதரசன் அணுவின் அலைச்சார்பு Qb எனவும் கொண்டு, இவ்விரு அணுக்களையும் அருகருகே கொண்டு வந்தால், ஐதரசன் மூலக்கூறின் அலைச்சார்பு

$$Q = Q_{a(1)} + Q_{b(2)}$$

(1), Qa என்னும் அணு ஒழுக்கில் உள்ள இலத்திரனையும் (2), Qb என்னும் அணு ஒழுக்கிலுள்ள இலத்திரனையும் குறிக்கும். இந்த அலைச்சார்பு ஐதரசன் மூலக்கூறை சரியான முறையில் குறிக்கின்றதா? இதைக் கண்டறிவதற்கு அலைச்சார்பு மூலம் ஐதரசன் மூலக்கூறின் சக்தியைத் துணிந்து அதை பரிசோதனை மூலம் கண்ட ஐதரசன் மூலக்கூறின் சக்தியுடன் ஒப்பிட வேண்டும்.

இச்சக்தி இரு அணுக்களிடையே உள்ள தூரத்தின் சார்பில் கணிக்கப்படலாம். வெவ்வேறு கருவிடைத் தூரங்களுக்கு ஐதரசன் மூலக்கூறுகளின் சக்தி வேறுபாடு அழுத்தச் சக்தி விளக்கப்படத்தினால் தரப்படும்.




இரு அணுக்களும் முடிவில்லாத் தூரத்தால் பிரிந்திருப்பின், தனித்தனி ஐதரசன் அணுக்களின் அழுத்த சக்திபூச்சியமாகும். இவ் அணுக்களைக் கிட்டக் கொண்டுவரும்போது, முதலில் ஒரு அணுவின் கருவிற்கும் மற்றய அணுவின் இலத்திரனுக்கும் இடையே ஒரு மென்மையான கவர்ச்சி ஏற்படும்.மேலும் நெருங்கி வரும் போது இரு கருக்களிடையேயும் இர அணுக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலத்திரன்களுக்கிடையேயும் குறிப்பிடத்தக்க தள்ளுகை விசையொன்று ஏற்படும். எனவேகருவிடைத்தூரம் இல் கவர்ச்சி, தள்ளுகை விசைகள் சமனிலைப்பட்டு, வலுவளவு இலத்திரன்கள் சோடி சேரும். இத்தூரத்தில் அழுத்தசக்தி வரைபு இழிவுப் பெறுமானம் காட்டும். அதாவது உறுதியான பிணைப்பு உருவாகியதாகக்கூறுவோம்.

(வரைபுd) கருவிடைத்தூரம் இலும் குறைவாக இருப்பின், தள்ளுகை விசை கூடி தொகுதியின் அழுத்த சக்தி விரைவாக அதிகரிக்கும்.

இலத்திரன்கள் சோடி சேராவிட்டால் (அதாவது இரு இலத்திரன்களும் சமாந்திரச் சுஎற்சியைக்காட்டினால்) கணிக்கப்பட்ட அழுத்த சக்தி விளக்கப்படம் இழிவுப் பெறுமானத்தைக் காட்டாது. பிணைப்பும் தோன்றாது (வரைபு c) எனவே வலுவளவுப் பிணைப்புக் கொள்கையில் இலத்திரன்களின் சுழற்சி மிகவும் முக்கியமானது. அத்துடன் பிணைப்பு ஏற்படுவதற்கு ஒவ்வொரு அணுவும் பிணைப்பற்ற ஒர இலத்திரனைக் கொண்டிருக்கவேண்டும். அவை சோடிசேர்ந்து பிணைப்பை ஏற்படுத்தும்.

$Q = Q_{a(1)} + Q_{b(2)}$ என்னும் அணுச்சார்பிலிருந்து கணித்த அழுத்த சக்தி விளக்கப்படத்தை மேலே பார்த்தோம். இவ்வரைபு ஒரு இழிவுப் பெறுமானத்தைக் காட்டினாலும், உண்மையான அழுத்த சக்தியுடனான (வரைபுd) ஒப்பீடு சரியல்ல. இத்தகைய சந்தர்ப்பத்தில்நாம் இலத்திரன் (1) Qa இருப்பதாகவும் இலத்திரன் (2) Qb இருப்பதாகவும் கருதலாம். ஆனால், இவ்விரு இலத்திரன்களையும் நாம் வேறுபடுத்திஅறிய முடியாது.அத்துடன் பிணைப்பு உருவாகிய பின்னர் இவ்விரு இலத்திரன்களும் இரு அணுக்களையும் சேர்ந்ததாகும்.

எனவே பின்வருமாறு கூறுவது மிகச் சிறந்தது

$$Q = Q_{a(1)} + Q_{b(2)} + Q_{a(2)} + Q_{b(1)}$$

இங்கு நாம் இரு அணுக்களினதும் இலத்திரன்களை ஒன்றுக்கு மாற்றாக ஒன்று மாற்றிச் சேர்த்து மொத்த அலைச் சார்பைக் கணித்துள்ளோம். இதனால் பெறப்படும் அழுத்த சக்தி விளக்கப்படும் d ஐ ஒத்தது.

ஐதரசன் மூலக்கூறின் அழுத்த சக்தி மேலும் திருத்துவதற்கும், உண்மையான வரைபுடன் பொருந்தும் ஒரு வரைபைப் பெறுவதற்கும் அயன் கட்டமைப்புக்களைக் கருத வேண்டும். இவையும் மொத்த அலைச் சார்புக்கு ஓரளவு பங்களிக்கும்.

அதாவது $H:H \leftrightarrow H^{+}:H^{-} \leftrightarrow H^{-}:H^{+}$

(a) (b) (c)

இங்கு நாம் இரு இலத்திரன்களும் ஒரே அணு ஒழுக்கில் காணப்படும் நிகழ்தகவைக் கருத்தில் கொள்ள வேண்டும். இம் மூன்று வடிவங்களுக்குமான ( சாத்தியமான வடிவங்கள் என அறியப்பட்ட ) அலைச் சார்புகள்.

$$a = Q_{A(1)} + Q_{B(2)} + Q_{A(2)} + Q_{B(1)}$$

$$b = Q_{B(1)}\ QB_{(2)}$$

$$C = Q_{A(1)}\ Q_{A(2)}$$

a,b,c, எனப்படும் இலத்திரன் கட்டமைப்புக்கள் ஐதரசன் மூலக்கூறின் பரிவுக்கட்டமைப்புக்கள் எனப்படும்.உண்மையான கட்டமைப்பு இம் மூன்று கட்டமைப்புகளின்பரிவுக்கலப்பாகும்.

தரைநிலையில்(ground state )ஐதரசன் மூலக்கூறானது இம் மூன்றில் எந்த ஒரு அமைப்பாகவும் காணப்படமாட்டாது. ஆனால் மூலக்கூறின் உண்மையான கட்டமைப்புக்கு இவை மூன்றும் பங்களிக்கின்றன. எனவே ஐதரசன் மூலக்கூறு பற்றிய திருப்திகரமான விளக்கம் யஇடிஇஉ ஆகிய மூன்று கட்டமைப்புகளின் பங்களிப்பைப் பற்றிக் கருத்திற் கொள்வதால் பெறப்படும்.

இவ் ஐதரசன் மூலக்கூறுக்கு விளக்கிய வலுவளவுப் பிணைப்புக் கொள்கை அனேக இரசாயனப் பிணைப்புக்களை விளக்க உபயோகிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE USAGE OF THE VERB "HAVE" IN DIFFERENT CONTEXTUAL MEANINGS

**Vairamuthu - Suntharesan**
Instructor in English
ELTC,
University of Jaffna
Jaffna.

The verb 'Have' in addition to its usage as auxiliary in perfect tenses functions with special meanings in different contexts. Some of these contexts are briefly presented with examples so as to enable students to acquaint with common English structures, which occur very frequently.

The verb 'Have' and its corresponding form 'Has' are used to refer to events in the present time and the past form of the 'Have' and 'Has' is 'Had'. The following table illustrates the subject - verb agreement pattern, as the usage of these verb forms is concerned.

## Events in the present

| Subject | Verb |
|---|---|
| I, We, You, They | Have |
| He, She, It | Has |

## Events in the past

| Subject | Verb |
|---|---|
| I, We, You, He, She, It, They | Had |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Events in the Future

| Subject | Verb |
|---|---|
| I<br>We<br>You<br>He<br>She<br>It<br>They | Will Have |

## Usage in Different Contexts

I) **Possessing**

Eg.)

1. a) He has two large houses.

OR

b) He has got two large houses.

2. a) Do you have any foreign stamps?

OR

b) Have you got any foreign stamps?

3. a) They have some love birds.

b) They have got some love birds.

(In the above examples, the sentence pattern - (b) is very common in the British English.)

II) **Possessing or Showing a Mental quality or Physical feature**

Eg.)

***Mental quality.***

1) She has enough courage
2) He has a good memory.
3) We must have confidence.

***Physical feature***

4) The school has three halls.
5) Owls have large eyes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III) **Indicating a Relationship**

Eg.)
1) I have three brothers.
2) He has many friends.
3) Does he have any sisters?

IV) **Experiencing or Feeling**

Eg.)
1) I have no doubt that you are lying.
2) They had the impression that they treated the guests well.
3) Do you have any idea when she got married?
4) What reason have you (got) for believing that he is not sincere?

V) **Suffering from (an illness or disease)**

Eg.)
1) How often do you have a headache?
2) She says she has a stomachache.
3) He has got appendicitis.

VI) **Displaying a quality**

Eg.)
1) Would you have the goodness to help me in carrying these articles?
2) He has the impudence to make such hurtful remarks.
3) Surely he didn't have the nerve to say that before others.

VII) **Taking or accepting somebody**

Eg.)
1) We will have the minister as the chief quest in the function.
2) Usually we have the neighbours' dog while they are away.

VIII) **Be aware of something as a Duty or Necessity.**

Eg.)
1) I must leave now. - I have a bus to catch.
2) He has got family to feed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IX) Performing an action or consuming by eating, drinking, smoking etc.

Eg.)

1) I have a bath in the morning daily.
2) He has a walk in the evening.
3) He had a sandwich for lunch.
4) All the employees have tea at 4 P.M.

**X) Receiving or Undergoing**

Eg.)

1) I had a letter from my father last week.
2) She will have an award soon.
3) He is having an operation on his chest.
4) I am having treatment for chest pain.

**XI) Producing (Give birth to somebody or something)**

Eg.)

1) Mala is having a baby.
2) His paintings have great effect usually.

**The students of ESL are expected to practice making further sentences under each of the different contexts indicated above. Such practice may be an initial step in mastering the language in its use in formal and situations.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி என்னும் கடலின் சிறப்புக்கள்

திருமதி. சந்திரகலா ரூபசிங்கம்
B.A

உலக வாழ்வின் மேன்மைக்கும், உயர்வுக்கும் உதவுகின்ற செல்வங்களை பொருட் செல்வம், கல்விச் செல்வம் என இரண்டாகப் பகுப்பர். ஒன்றினை பொன், பூமி, மண்ணில் விளை தானியங்கள் என்றும், மற்றையதை மனங்களில் உள்ள இருள் அகற்றி ஒளியூட்டவல்ல கல்விச் செல்வம், அதாவது அறியாமையை அகற்றி அறியவல்ல வல்லமையைத் தரவல்ல கல்விச் செல்வம் ஆகும்.

நல்லதையும், கெட்டதையும் பகுத்துணரும் வல்லமையை தரவல்லது, சமூகத்தில் உள்ளவற்றை பகுத்தறிந்து நல்லதை மட்டும் நுகர்வதையும், அல்லாததை மறுக்கும் ஆற்றலையும் தரவல்லது. சமூக மானுடர்களுள் நல்லவர்களுடன் பழகுவதற்கும், கெட்டவர்களுடன் ஒதுங்கி நடப்பதற்கும் உதவுகின்றது. அதாவது சமூகத்தில் ஓர் நற்பிரஜையாக வாழ வழிகாட்டுகின்றது. தீயவழி தவிர்த்து நல்லவழி நாடுவதற்கு நற்றுணையாகின்றது. நற்பண்புகளைப் பழக்குகின்ற ஆசானாக்குகின்றது. எனவே மானிடனை முழுமனிதனாக்கும் தன்மை மிக்கது கல்விச் செல்வம் என்பதில் ஐயமில்லை.

கல்வி எமது வாழ்நாளை வீணே கழிப்பதைத் தவிர்க்கிறது வையகம் போற்றும் உயர்நிலையைத் தன்னைக் கற்றவர்க்குக் கொடுக்கிறது. அன்பு, அருள் நிறைந்த நல்லெண்ணத்திற்கு இட்டுச் செல்கிறது. இதனால் கல்வியானது இம்மைக்கும் பின் மறுமைக்கும் துணையாகி நின்று இனிய வாழ்வு தருகிறது.

பொருட் செல்வமோ தீயினால் பொசுங்கத்தக்கது, தீயவரால் கொள்ளையிடப்படவல்லது, கொடுக்கும் தோறும் குறையவல்லது, பொதுவாகக் கூறின் நிலையற்றது. ஆனால் குறைவற்ற செல்வமாகிய கல்வியோ கற்றவரின் உயிரோடு ஒன்றியிருப்பது, கொடுக்கும் தோறும் பெருகவல்லது, கொடுத்தவர்க்கும், கொண்டவர்க்கும் நற்பேறினை நல்க வல்லது. ஏழேழ் பிறவிக்கும் முன்கற்ற கல்வி கைகொடுக்கும் என்றும், கேடில் விழுச்செல்வம் என்றும், கற்காதவர்கள் முகத்தில் இருப்பது கண்கள் இல்லை வெறும் புண்களே என்றும் குறை கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகையார்.

தமிழ் மூதாட்டியாம் ஔவையார் இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்றும், களங்கமற்ற இளமைக் காலமே கல்விக்கு உரியது என்றும், கல்விக்கு ஏற்றம் கூறுகிறார். கல்வி அழகே அழகு, கல்வியானது எவரிடத்தும், எக்காலத்திலும், எங்கு சென்றாலும், எல்லையற்ற பெருமையைப் பெருக்குகின்றது. அது நல்வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியாகிறது. அஞ்ஞான இருள் அகற்றி அறிவூட்டும் எல்லையில்லாத பரந்த வெளி. எஞ்ஞான்றும் துணையாகி நின்று இன்பம் தரவல்லது.

எல்லையில்லாத கல்வியின் சிறப்புணர்ந்து என்றும் கற்போம். ஏற்றம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் வர்த்தகம்
# Electronic Commerce

க. தேவராஜா
தலைவர்
வணிகத் துறை
யாழ் பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகமானது, 1970 களின் ஆரம்பத்தில் இலத்திரனியல் நிதி மாற்றம் போன்ற புத்தாக்கங்களுடன் ஆரம்பமானது எனலாம். எவ்வாறாயினும், இந்தப் பிரயோகமானது பெரிய கூட்டுத்தாபனங்களுக்கும் ஒரு சில சிறிய தொழில் நிறுவனங்களுக்கும் மட்டும் வரையறுக்கப்பட்டதாக ஆரம்பத்தில் காணப்பட்டது. இலத்திரனியல் தரவு பரிமாற்றம் வந்த பின்னர் இலத்திரனியல் வர்த்தகமானது நிதி மாற்றங்களிலிருந்து ஏனைய வகையான பரிமாற்ற முறைவழியாக்கத்துக்கு விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன் நிதி நிறுவனங்களுக்கு மேலதிகமாக, உற்பத்தியாளர்கள், சில்லறை வியாபாரிகள், சேவை வழங்குநர்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றன பங்குபற்றும் அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இணையமானது வர்த்தக மயமாக்கப்பட்டதன் பின்னர் பல மில்லியன் கணக்கான மக்கள் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தமையால் இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்கள் விரைவாக விரிவடைந்து வருகின்றன.

## 2.0 இலத்திரனியல் வர்த்தகத்தினை வரையறுத்தல்
## Defining Electronic Commerce

இலத்திரனியல் வர்த்தகம் அல்லது மின்னணு வர்த்தகம் என்பது இணையத்தினை உள்ளடக்கிய கணனி வலையமைப்புக்கள் மூலமாக பொருட்கள், சேவைகள், தகவல்கள் என்பனவற்றினை வாங்குவதையும் விற்பனை செய்வதையும் விபரிக்கின்ற ஒரு வளர்ந்து வரும் எண்ணக்கருவாகும். எவ்வாறாயினும், இலத்திரனியல் வர்த்தகத்திற்கு பல்வேறு நோக்கில் பல வேறுபட்ட வரைவிலக்கணங்களினைக் கொடுக்க முடியும்.

ஒரு தொடர்பாடல் நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொலைபேசி இணைப்புக்கள், கணனி வலையமைப்புக்கள், அல்லது ஏதாவது ஊடகம் மூலமாக தகவல், பொருட்கள் அல்லது சேவைகள், அல்லது கொடுப்பனவுகள் ஆகியவற்றினை வழங்குவதனைக் கருதுகின்றது.

ஒரு தொழில் செய்முறை நோக்கிலிருந்து பார்க்கும்போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொழில் நிறுவன நடவடிக்கைகளினதும் வேலைபாய்ச்சல்களினதும் தன்னியக்கவாக்கம் நோக்கிய தொழில்நுட்பத்தின் பிரயோகமாகும்.

ஒரு சேவை நோக்கிலிருந்து பார்க்கும்போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது பொருள் தரத்தினை முன்னேற்றி, சேவை வழங்கலின் வேகத்தினை அதிகரித்து, நிறுவனங்கள் வாடிக்கையாளர்கள் முகாமைத்துவம் போன்றவற்றின் சேவைச் செலவினை குறைக்கின்ற ஒரு கருவியாகும்.

ஒரு தொடரறா நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது இணையம் மற்றும் எனைய தொடரறா சேவைகள் மூலமாக பொருட்கள், தகவல்களினை வாங்குவதற்கும் விற்பதற்குமான செயல் வல்லமையினை வழங்குகின்றது எனலாம்.

மேலே கூறப்பட்ட அனைத்து வரைவிலக்கணங்களும் பெறுமதியானவை. இலத்திரனியல் வர்த்தகமானது வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையமைப்புக்கள் மூலமாக வியாபார நடவடிக்கைகளினை நிறைவேற்றுகின்ற பெரும் முன்னேற்றங்களினை ஏற்படுத்தி வருகின்றது எனலாம். இத்தகைய முன்னேற்றங்களினால் சிறந்த தரம், உயர்வான வாடிக்கையாளர் திருப்தி, சிறந்த நிறுவனத் தீர்மானம் எடுத்தல் போன்ற சிறந்த செயற்றிதிறனுக்கு இட்டுச் செல்வதுடன் உயர்வான பொருளாதார வினைத்திறன், உயர் வேகம், துரிதத் தன்மை, அல்லது நிகழ்நேர பரிமாற்றம் போன்ற மிக விரைவான பரிமாற்றத்துக்கும் வழிகோலுகின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தினை இன்னொரு வழியில் பின்வரும் இரண்டு கூறுகளாக பிரித்து நோக்கலாம்

- நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை.
- இலத்திரனியல் சந்தைகள்

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கிடையேயான தகவல் பாய்ச்சலுடன் தொடர்புபட்டதாகும். இதன் பிரதான நோக்கம் இலத்திரனியல் தரவு பரிமாற்றத்தினைப் பயன்படுத்தி கட்டளைகள், சிட்டைகள், பணக் கொடுப்பனவுகள் போன்ற வினைத்திறனான பரிமாற்று முறைவழியாக்கத்தினை மேற்கொள்ளுவதாகும். சகல தொடர்புகளும் முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும். இங்கு பேரம்பேசுதல் என்பது இருக்காது. மாறாக நிறைவேற்றுகை காணப்படும்.

இலத்திரனியல் சந்தைகள் (Electronic markets) என்பது வாங்குபவர்களும் விற்பனையாளர்களும் ஒரு கட்டளையில் உடன்பட்டு நிறைவேற்றுகையானது தொடரறா அல்லது பின்தொடர் மூலமாக முடிக்கப்படுகின்றது. நிறுவனங்களுக்கு இடையேயான முறைமைகள் வியாபாரத்துக்கு வியாபாரமாக (Business to Business - B2B) பயன்படுத்தும்போது இலத்திரனியல் சந்தையானது வியாபாரத்துக்கு வியாபாரமாகவும் வாடிக்கையாளருக்கு வியாபாரமாகவும் (Business to Customer - B2C) தொழிற்படும் இரண்டு இயல்புகளையும் கொண்டிருக்கின்றது.

## 2.1 நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகளின் நோக்கம் Scope of interorganizational information systems

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை என்பது பல தொழில் பங்காளர்கள் சூழ்ந்துகொள்கின்ற ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு முறையாகும். ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது ஒரு நிறுவனம் மற்றும் இதனுடைய வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரினைக் கொண்டிருக்கும். நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை மூலமாக வழங்குனர்களும் விற்பனையாளர்களும் தங்களுடைய நாளாந்த தொழில் நடவடிக்கைகளினை ஒழுங்குபடுத்துகின்றனர். தகவலானது முன்னதாகவே ஒழுங்கமைக்கப்பட்ட வடிவங்களினைப் பயன்படுத்தி தொடர்பாடல் வலையமைப்புக்கள் மூலமாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. ஆகவே, தொலைபேசி அழைப்புக்கள், காகித ஆவணங்கள், அல்லது தொழில் தொடர்புகள் என்பன தேவையில்லாது போகின்றது. நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது உரிமையுடைய தொடர்பாடல் இணைப்புக்களினைப் பிரதானமாகப் பயன்படுத்தி வழங்குகின்றது. தற்போது சில நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் இணையத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றன.

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள்:-

- நாளாந்த வியாபார பரிமாற்றங்களினது செலவினைக் குறைக்கின்றது
- பிழைகளினை குறைத்து தகவல் பாய்ச்சலின் தரத்தினை முன்னேற்றுகின்றது.
- காகித நிரற்படுத்தலுடன் தொடர்புபட்ட காகிதம், வினைத்திறனற்ற தன்மை, மற்றும் செலவீனம் போன்றவற்றினை நீக்குகின்றது.
- பாவனையாளர்களுக்கான வியாபார செய்முறையினை இலகுவாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளின் வகைகள் Types of interorganizational systems

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளினை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் சில இலத்திரனியல் வர்த்தகத்துடன் தொடர்பற்ற செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளில் மிகவும் பிரதானமான ஐந்து வகைகள் காணப்படுகின்றன.

* இலத்திரனியல் தரவு பரிமாற்றம்
* இலத்திரனியல் நிதிமாற்றம்
* இலத்திரனியல் வடிவங்கள்
* ஒருங்கிணை செய்தியிடல்
* பகிர்ந்தளிக்கப்பட்ட தரவுத்தளங்கள்

## 2.3 இலத்திரனியல் சந்தைகள் Electronic Markets

இலத்திரனியல் சந்தைகள் வியாபாரத்தினை நடாத்துவதற்கான ஒரு வாகனமாக நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளுடன் இணைந்து விரைவாக வளர்ந்து வருகின்றது. ஒரு சந்தை என்பது தகவல், பொருட்கள், சேவைகள், கொடுப்பனவுகள் பேன்றவற்றினைப் பரிமாற்ற ஒருங்கிணைந்ததும் உறவு முறைசார்ந்ததுமான ஒரு வலையமைப்பாகும். சந்தைக்கான இடமானது இலத்திரனியல் வடிவில் இருக்கும் போது விற்பனை நிலையமானது ஒரு பௌதீக கட்டிடத்தினைக் கொண்டிருக்கமாட்டாது. ஆனால் ஒரு வலையமைப்பு வழியிலான இடமாக இருப்பதுடன் இங்கு வியாபார பரிமாற்றங்கள் நிகழும்.

இலத்திரனியல் சந்தையானது வாங்குனர்களும் விற்பனையாளர்களும் சந்திக்கும் இடமாகும். சந்தையானது வங்கிகளுக்கிடையேயான பணத்தினை மாற்றீடு செய்வது உட்பட எல்லா அவசியமான பரிமாற்றங்களினையும் கையாள்கின்றது. இலத்திரனியல் சந்தையில் பரிமாற்றங்களினைக் கையாள்பவர்கள், வாங்குனர்கள், தரகர்கள், விற்பனையாளர்கள் போன்ற முதன்மையான பங்குபற்றுநர்கள் இருப்பதுடன் அவர்கள் வேறுபட்ட இடங்களிலிருந்து ஒருவரை மற்றவர்கள் மிக அரிதாகவே தெரிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இடைப்பிணைப்பு வழிகளானது குழுவினர்களுக்கிடையே வேறுபடுவதுடன் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மற்றும் குழுக்களுக்கிடையே மாறுபாடுடையதாகவும் காணப்படுகின்றன.

## 3.0 நிறுவனங்களுக்கான நன்மைகள் Benefits to Organizations

இலத்திரனியல் வர்த்தகமானது தேசிய சந்தைகளிலிருந்து சர்வதேச சந்தைகளுக்கு சந்தைப்பரப்பினை விரிவுபடுத்தியுள்ளது. மிகக் குறைந்தளவான மூலதனச் செலவுகளுடன் ஒரு கம்பனி இலகுவாகவும் விரைவாகவும் கூடுதலான வாடிக்கையாளர்கள், சிறந்த வழங்குனர்கள், மிகவும் பொருத்தமான தொழில் பங்காளர்கள் ஆகியோரை உலகளாவிய ரீதியில் கொண்டிருக்கும்.

*இலத்திரனியல் வர்த்தகமானது காகித அடிப்படையிலான தகவல்களினை உருவாக்குதல், நிரற்படுத்துதல், பகிர்ந்தளித்தல், களஞ்சியப்படுத்துதல், மீட்டுப்பார்த்தல் போன்றவற்றுக்கான செலவினைக் குறைக்கின்றது. உதாரணமாக ஒரு இலத்திரனியல் கொள்வனவு செய்முறை முறைமையினை அறிமுகப்படுத்துவதன் மூலமாக கம்பனிகள் கொள்வனவு நிர்வாகச் செலவினை கணிசமானளவு குறைத்துக் கொள்ள முடியும்.

*இலத்திரனியல் வர்த்தகமானது இழுவை வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் வசதியின் மூலமாக ( Pull-type supply chain management)குறைக்கப்பட்ட இருப்புக்களுக்கும் மேந்தலைகளுக்கும் அனுமதியளிக்கின்றது. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுவகை முறையில் செய்முறையானது வாடிக்கையாளர்களின் கட்டளையிலிருந்து ஆரம்பித்து உடனடிநேர செய்முறையினைப் பயன்படுத்துகிறது. இது பொருள் வாடிக்கையாளர் மயமாக்கும் குறைந்தளவான இருப்புச் செலவுகளுக்கும் வழி வகுக்கின்றது.

* இலத்திரனியல் வரத்தகமானது மூலதனச் செலவுகளுக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளினைப் பெறுவதற்கும் இடையிலான நேரத்தினைக் குறைக்கின்றது.

* இலத்திரனியல் வர்த்தகமானது வியாபார செய்முறை மீளப் பொறியமைத்தல் முயற்சிக்கு ஆதரவளிக்கின்றது. செய்முறைகள் மாற்றப்படும் போது விற்பனையாளர்கள், அறிவுசார் தொழிலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் உற்பத்தித் திறனானது நூறுவீதம் அல்லது அதற்கு மேலாக அதிகரிக்கப்பட முடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது தொலைத் தொடர்பு செலவினை மிகக் குறைவாக வைத்துள்ளது. இணையமானது பெறுமதிச் சேர்க்கை வலையமைப்புக்களை விட மிகவும் மலிவானதாகக் காணப்படுகின்றது.

## நுகர்வோருக்கான நன்மைகள் Benefits to Consumers

* இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் கூடுதலான தெரிவுகளினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. அவர்கள் பல விற்பனையாளர்களிடமிருந்தும் பொருட்களிலிருந்தும் தெரிவு செய்ய முடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் குறைந்த செலவில் வாடிக்கையாளருக்கு பொருட்கள், சேவைகளினை வழங்குகிறது. அத்துடன் விரைவாக பல இடங்களில் தொடர்பு கொண்டு ஒப்பீடுகளினையும் மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்றது.

* சில சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் வர்த்தகமானது பொருட்கள், சேவைகளினை விரைவாக வழங்குகின்றது.

* இலத்திரனியல் வர்த்தகத்தில் வாடிக்கையாளர்கள் தங்களிடத்திலிருந்து எந்த நேரத்திலும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குக் கட்டளையிட முடியும்.

* வாடிக்கையாளர்கள் பொருத்தமானதும் விபரமானதுமான தகவலினைச் சில விநாடிகளில் பெற முடியும். பல நாள்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

* இலத்திரனியல் வர்த்தகமானது ஒரு வாடிக்கையாளர் மற்ற வாடிக்கையாளருடன் இலத்திரனியல் சமூகத்தில் ஒருவரோடு மற்றவர் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதற்கும் தமது அனுபவங்களினை ஒப்பீடு செய்வதற்கும் வசதியளிக்கின்றது.

## 3.2 சமூகத்துக்கான நன்மைகள் Benefits to Society

* இலத்திரனியல் வர்த்தகமானது பல தனிப்பட்டவர்களினை வீட்டிலிருந்தபடியே வேலை செய்ய வசதியளிப்பதனால் மிகக் குறைவான பயணங்களுக்கு அனுமதிக்கின்றது. இதனால் வீதிகளில் வாகன நெரிசல் குறைவாகக் காணப்படுவதுடன் காற்று மாசடைவதும் மிகக் குறைவாக காணப்படும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது சில வியாபாரிகளுக்கு தமது பொருட்களினை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதறகு அனுமதியளிப்பதால் குறைவான பணவலுவுடைய மக்கள் கூடுதலாக இப்பொருட்களை வாங்கித் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது மூன்றாம் உலக நாடுகளிலும் கிராமப் பகுதிகளிலும் இருக்கும் மக்கள் பொருட்கள் சேவைகளினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிப்பதற்கு வசதியளிக்கின்றது. உயர் தகமை பற்றி கற்பதற்கும், கல்லூரி பட்டங்களினை பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களினை இலத்திரனியல் வர்த்தகம் வழங்குகின்றது.

* இலத்திரனியல் வர்த்தகமானது பொதுச் சேவைகள் வழங்கலுக்கான வசதியினை கொடுக்கின்றது. இது செலவினைக் குறைத்து தரத்தினை அதிகரிக்கும்.

## 4.0 இலத்திரனியல் வர்த்தகத்தின் வகைகள்
## Types of Electronic commerce

இலத்திரனியல் வர்த்தகத்தில் பல சாத்தியமான பிரயோகங்கள் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக் கிடையேயும் வியாபாரிகளுக்கிடையேயும் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகங்களின் தனிப்பட்ட பொதுவான வகைகளாக மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவை நிறுவனங்களுக்கிடையேயானவை. இதனை நிறுவனத்திற்கு நிறுவனம் எனவும் நிறுவனத் துக்குள்ளேயானவை, நிறுவனத்திலிருந்து நுகர்வோருக்குரியவை எனவும் வரையறுக்கலாம்.

### நிறுவனங்களுக்கிடையிலான இலத்திரனியல் வர்த்தகம்
### Inter organizational Electronic Commerce

இந்தப் பார்வையில் இலத்திரனியல் வர்த்தகமானது பின்வரும் வியாபார பிரயோகங்களுக்கு வசதியளிக்கின்றது.

*** வழங்குனர் முகாமைத்துவம்**

இலத்திரனியல் பிரயோகமான கம்பனிக்கு வழங்குனர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் கொள்வனவு கட்டளைகள், நிரற்படுத்தல் செலவு சுழற்சி நேரங்கள் போன்றவற்றினைக் குறைப்பதற்கும் வசதியளிக்கின்றது.

*** இருப்பு முகாமைத்துவம்**

இலத்திரனியல் பிரயோகமான கட்டளை சுழற்சியினைச் சுருக்குகின்றது. ஒரு நிறுவனத்தின் பங்காளர்களில் பலர் இலத்திரனியல் மூலமாக இணைந்திருப்பதால் தொலைநகல் அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட தகவலானது உடனடியாக மாற்றீடு செய்யப்படுகின்றது. இது இருப்பு மட்டங்களை குறைப்பதற்கும் இருப்பு சுழற்சியினை முன்னேற்றுவதற்கும் இருப்பின்மையினை நீக்குவதற்கும் உதவுகின்றது.

## 5.0 முடிவுரை

தகவல் தொழல்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வர்த்தகம் பெற்றுக் கொண்ட நன்மைகள் அளப்பரியனவாகும். இலத்திரனியல் வர்த்தகமானது 21ம் நூற்றாண்டில் நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளை விரைவாகவும் அதிகமாகவும் வளர்க்க உதவும் என்பதில் சந்தேகமில்லை. நவீன அடிப்படையிலான வர்த்தகம் சர்வதேச வர்த்தகத்தில் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தி வருவதனால் உலக மக்கள் இலத்திரனியல் வர்த்தகத்தின் மீது அதிக நாட்டத்தை செலுத்துவதாக கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சமுதாய வளர்ச்சியில் கல்வியின் பயன்கள்

ஜ. வைத்திலிங்கம்
சமாதான நீதவான்
கோண்டாவில்

புராதனக் கல்வி வழக்கில் ஆரம்ப கல்வியானது குடும்பத்தில் இருந்து தோற்றம் பெற்றது இது தொழிற் கல்வி, வாழ்க்கைக் கல்வி, செயல்முறைக்கல்வி என பன்முகத்தன்மை பெற்றிருந்தன. பின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சியின்போது கோயில்கள், பாடசாலைகள் மூலம் முன்னெடுக்கப்பட்டது. பின் மிலேனியம், மிசனறிகள், ஆதியினங்கள், பிரிவேனாக்கள், திண்ணைப் பள்ளிகள் மூலம் கல்வியானது முன்னெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. இக்கல்வியானது சமுதாய மக்களை மேம்படுத்தவும் நல்வழிப்படுத்தவும் வழிகாட்டின.

கல்வி கற்கும் போது நூல்களை குற்றமற தெளிவுற கற்க வேண்டும். அங்ஙனம் கற்பதற்கு ஏற்ப நிற்க வேண்டும் எண்ணும் எழுத்தும் மனித வாழ்வுக்கு கன் போன்றது

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப**
**இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**

என வள்ளுவர் தமது தமிழ் மறையாகிய திருக்குறளில் குறிப்பிடுகிறார்.

மேலும் கல்வி கற்றவர்களின் கண்களை கண்கள் எனவும் கல்வி கல்லாதவரின் முகத்தில் காணப்படும் கண்களை புண்கள் என குறிப்பிடுகிறார். கற்றறிந்தவர்கள் உயர்ந்தவர்களாகவும் போற்றப்படுகிறார்கள். கல்லாதவர்கள் இழிந்தவர்களாக போற்றப்படுகிறார்கள் கற்றவர்கள் மகிழும் படி கூடிப்பழகிப் பிரிதல் அவர்களின் தொழில் ஆகும். கல்வி ஆனது கற்க கற்க பெருகிக் கொண்டே இருக்கும். இதனை

**"தொட்டனைதூறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத் தூறும் அறிவு"**

இது மணற்கேணியில் நீர் ஆனது ஊறிப் பெருகிக்கொண்டே இருக்கும் அதே போல கல்வியானது கற்க கற்க பொங்கிப் பெருகும்.

நாம் கற்பது அறிவை வளர்க்கவும், கற்றபடி ஒழுகி முன்னேறவுமே இம் முன்னேற்றத்தை எமக்கு உணர வைத்து வாழ வழிகாட்டியவர் குருவாகும். இந்தக் குருவின் பாதங்களை வணங்கினால் எமக்கு வாழ்க்கையின் முன்னேற்றம் உண்டாகும். இதை உணரவைத்து அறிவூட்டிய குருவின் பாதங்களை வணங்கினால் தான் கற்றகல்வியின் பயன் என வள்ளுவர் கூறுகிறார் இதை.

**"கற்றதினால் ஆயபயனென் கொல்வாலறிவன்**
**நற்றாள் தொழா ஆர்எனின்"**

திருக்குறள் புலப்படுத்துகிறது இதை உணர்ந்து நடவாது எமக்கு அறிவூட்டிய குருவை வணங்காது விடுவோமாகில் நாம் கற்றதினால் எவ்வித பிரயோசனமும் இல்லை பொதுவாக சமுதாயத்தை எடுத்து நோக்கும் போது கல்வியின் பங்கு உன்னத நிலையை இடத்தை வகிக்கின்றது.

கல்வி கற்றவர்களை எடுத்துக் கொண்டால் அவர் எங்கு செல்கிறாரோ அங்கு அவருக்கு சிறப்பு, அவரின் ஊர், நாடு, மக்கள் அனைவருக்கும் சிறப்பு சாரும். ஆனால் கல்வி அறிவில்லாதவன் இருந்தாலும் இல்லாததாகவே கருதுவர். கல்வி கற்றவன் ஆனவன் தமது ஏழு பிறப்பிலும் கூட கற்ற கல்வி கூடவே செல்லும். இது மறு பிறப்புக்கும் துணை புரியும் இது அழியாச் செல்வமாகவும் காணப்படுகிறது. இவ்வாறு சமுதாய வளர்ச்சியை எடுத்து நோக்கின் கல்வி முக்கிய இடத்தை வகிக்கிறது.

ஒரு சமுதாய நடைமுறையை உற்று நோக்கும் போது கல்வி கற்காத ஒரு கூட்டம் அல்லது சபையில் பேச நினைத்தல், சொல்லுதல் , இது தவறான செயற்பாடு ஆகும். கற்காதவனின் அறிவை கற்றோர் அறிவாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இது கவலைக்குரிய விடயம் ஆகும். இதனால் எல்லா மக்களும் கல்வி கற்க வேண்டும். இது சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் சிறப்பைத்தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நோக்கங்களும் கடமைகளும்

மால்நேயச்செல்வன் செஞ்சொல்லரசு,
கீதோபதேச வித்தகர்
**திரு. SKN. தவராஜா** B.A Mphil
(யாழ்/பல்கலைக் கழகம்)

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைபவர்கள் அந்நாட்டு மக்கள் இத்தகைய அபிவிருத்தி அதன் கிராமப்புறங்களிலிருந்தே ஆரம்பிக்கிறது. கிராமங்கள் அபிவிருத்தி அடைந்தால்தான் நாடு தன்னிறைவு காணும் நிலை ஏற்படும். இச்சிந்தனை 1930 களில் இருந்தே உதயமாயிற்று. ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்குப் பின்வரும் காரணிகள் மிக அவசியமானவை எனக் கருதபபட்டன.

1) கல்வி அபிவிருத்தி
2) பொருளாதார அபிவிருத்தி
3) சமூக அபிவிருத்தி
4) சுகாதார அபிவிருத்தி
5) கலாச்சார அபிவிருத்தி

மேற்குறித்த அபிவிருத்தி நிலைகளை எமதுப் பொருட்டு கிராம மக்களால் ஒன்று சேர்ந்து ஸ்தாபிக்கப்படுகின்ற ஓர் நிறுவனமே கிராம அபிவிருத்திச் சங்கமாகும் இச்சங்கங்கள் மக்கள் தமது சொந்த சமுதாய முன்னேற்றத்திற்காக ஒழுங்கு படுத்தப்பெற்ற செயற்பாடுகள் மூலம் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட தன்னிச்சையான ஓர் நிறுவனமாகும்.

இத்தகைய கிராம அபிவிருத்திச் சங்கம் தான் அமைந்திருக்கும் கிராமத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அடிப்படையான இயற்கைக் காரணிகளை மையமாகக் கொண்டு தொழிற்பட வேண்டி இருக்கின்றது. இவற்றை நாம் ஒவ்வொன்றாக நோக்குவோயின் ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு மிகமிக அவசியமாகக் கருதப்படுவது கல்வி வளர்ச்சியும் அதன் அபிவிருத்தியுமாகும். கிராமத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் கல்வியைப் பெறும் நோக்கில் ஓர் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைய வேண்டும் பாலர் பாடசாலை, முதியோர் கல்வி போன்ற வசதிகளை ஏற்படுத்துவதுடன் கல்விசார் நிகழ்வுகளை அடிக்கடி நிகழ்த்துவதோடு பத்திரிகை, மாத இதழ், கதை நூல்கள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றை மாணவர் பயன்படுத்தும் வகையில் சங்கத்தைக் செயற்படுத்தல் இவ்வகையில் கல்விசார் செயற்பாடுகளில் சங்கம் இயங்காதிருப்பின் ஏனைய வளர்ச்சிக் காரணிகளும் பாதிக்கப்படுமென சமூக விஞ்ஞானிகள் குறிப்பிடுவர்.

மேலும் ஓர் கிராமத்தின் வளர்ச்சி அதன் பொருளாதார அபிவிருத்தியிலும் தங்கியுள்ளது. பொருளாதாரவிருத்தி என்பது மக்கள் ஒவ்வொருவரும் தமது தேவைவ்யைப் பூர்த்தி செய்யும் நிலையாகும். இதனால் ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கங்களும் சிறந்த திட்டங்களை வகுக்க வேண்டும். கைத்தொழில், விவசாயம், சுயதொழில் முயற்சிகள் போன்றவற்றில் தன்னிறைவை எய்தும் வகையில் ஓர் வழிகாட்டும் அமைப்பாகத் தொழில் புரிய வேண்டும்.

மக்கள் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட வேண்டுமாயின் சுகதேசிகளாக வாழ வேண்டும். இதனால் கிராமத்தில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் உதவியைப் பெற்று வீட்டுக்கு ஒரு மலகூடம், குழாய் நீர் விநியோக வசதிகள் போன்ற சுகாதார வசதிகளை ஏற்படுத்தி கிராமத்தின் வளர்ச்சி உழைக்கும் உத்வேகம் உடையவர்களாக மக்களை உருவாக்குவது கிராம முன்னேற்றச் சங்கத்தின் கடமையாகும்.

ஒரு கிராமத்தின் அபிவிருத்திக்கு இன்னுமோர் அடிப்படைக் காரணி கலாச்சாரம் இது மனித பண்பியல் ரீதியில் உருவாவது மக்கள் கலாச்சார ஒழுக்க பண்பாடும் உடையவர்களாக இருந்தால் மட்டுமே அவர்கள் ஏனைய வளர்ச்சிக் காரணிகளையும் சிந்திக்கின்ற மனோநிலை ஏற்படும். இதனால் மக்களைக் கலாச்சார ரீதியில் ஆனவர்களாக உருவாக்கும் கடமை இச்சங்கஙளுக்கு உரியவை ஆகும்.

இவற்றை எல்லாம் ஏன் நினைத்து கிராம அபிவிருத்தி வித்திடுவது போன்ற ஒரு காரணி சமூக அபிவிருத்தியாகும். இச்சமூக அபிவிருத்திக்கான ஓர் சமூக இயக்கமே இக்கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகும். மேலே கூறப்பெற்றவற்றைச் சுருக்கமாக கூறவேண்டுமாயின் ஓர் சமூக அபிவிருத்தி இயக்கம் சமூக வளர்ச்சி, சமூக நலன் ஆகிய இலக்குகளை எய்துகின்ற வகையில் மக்களின் கலாச்சார பண்பாடு முறைகளுக்கு கட்டுப்பட்டு, அவற்றோடு இயைந்து போர்க்கூடிய பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதாகவும் அமைய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆராய்ச்சிப்பிரிவு, சமூக பொருளாதார வளர்ச்சி பற்றி பின்வரும் 4 அம்சங்களை வழிப்படுத்தியிருக்கின்றது.

அ) சமூகம் பற்றிய அறிவு
ஆ) சமூகத்தின் தேவைகள்
இ) சுயமுயற்சி
ஈ) தகுந்த திட்டம்

ஒரு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தெரிவு செய்யப்பெறும் தலைமைப்பீடம் சமூகம் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் அவசியமாகின்றது அதாவது சமூகத்தின் சனத்தொகை அளவு முதியோர், சிறுவர், அங்கவீனர், குழந்தைகள் போன்றவர்களினது தரவு ரீதியான எண்ணிக்கை பற்றிய அறிவு இருத்தல் அவசியம்.

மேலும் ஒரு சமூக அபிவிருத்திக்கு முதுகெலும்பு போன்றது சமூகத்தின் தேவையே ஆகும். மேற்குறிப்பிட்ட வகைப்பிரிவான மக்களது தேவைகளை உணர்ந்து அவற்றிற்கு ஆற்றக் கூடிய சேவைகள் பற்றிக் பெறுகின்ற தீர்மானங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

கிராமத்தில் தேங்கிக்கிடக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மனித வளத்தைக் கையாண்டு சமுதாயத்தின் பல்வேறு பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கின்ற சிந்தனையைக் கொண்டிருப்பதோடு அல்லாது அதை செயற்படுத்தும் திறனையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த வகையில் சுயமுயற்சியை வளர்க்கும் திட்டங்களை வகுத்து சமூகத்தின் வேலையில்லாப் பிரச்சனைகள் தீர்க்கும் வழிமுறைகளுக்கான தொழில் திட்டங்களை வகுக்க வேண்டும்.

இதனால் ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் தன் வேலைத்திறனையும் அபிவிருத்தியையும் அதிகரிக்கவேண்டுமெனின் பின்வரும் பொதுஸ்தாபனங்ளோடு தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

1) கூட்டுறவுச் சங்கங்கள்
2) விவசாய சபைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள்
4) இளம் உழவர் குழுக்கள்
5) சனசமூக நிலையங்கள்
6) சமய நிறுவனங்கள்
7) மக்கள் சபைகள்

மேற்கூறிய நிறுவனங்களோடு தொடர்பு கொண்டிருப்பதால் பின்வரும் தன்மைகள் கிடைக்கின்றன.

1) சுகாதார வசதிகள்
2) கல்வி
3) விவசாயம்
4) நீர்ப்பாசனம்
5) குடிசைக் கைத்தொழில்
6) கூட்டுறவுக் கடன் வசதி
7) சந்தைப்படுத்தல்
8) போக்குவரத்து
9) பொழுதுபோக்குகள்
10) பொது வேலைத்திட்டங்கள்

இவ்வகையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்குவதால் அரசாங்க அதிபரிடம் இருந்து 75 வீதமான பண உதவிகளைப் பெற்று 25 வீதமான சரீர உதவியுடன் கிராம அபிவிருத்தி வேலைகளான வீதி செப்பனிடல் நீர் வசதி அமைத்தல் சுகாதார வசதிகள் அமைத்தல் போன்ற இன்னோரன்ன திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

இவ்வகையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பணியாற்றுவதோடு அல்லாமல் இன்று கிராமப்புறங்கள் அழிந்து போகும் நிலையிலுள்ள அருங்கலைகள், பொக்கிஷங்கள், நுண்கலைகள், வைத்திய இரகசியங்கள் போன்றவற்றை வருங்காலச் சந்ததியினர் அறியும் வகையில் கருத்தரங்குகளை ஏற்படுத்தி சமூக விழுமியங்களை நிலைபெறச் செய்ய வேண்டியது அவசியமானதோடு எதிர்காலச் சந்ததியினரையும் உருவாக்கும் மனப்பாங்கை வளர்க்க உதவ வேண்டும் எனவும் இங்கு கூறமுடிகின்றது.

மனம் என்ற கோயிலின் ஒளி விளக்கு பகுத்தறிவு கோபம் என்ற புயல் வீசினால் அந்த அரிய விளக்கு அணைந்து விடும். ஆகவே கோபத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். பகுத்தறிவை அணைத்து விடாதீர்கள்.

- இங்கர்சால்

பிறரைக் கெடுத்து தான் மட்டும் வாழ நினைத்தால் ஆசை. தான் மட்டும் வாழ நினைத்தால் பற்று. தானும் தன் இனமும் தன் நாடும் வாழ நினைத்தால் அன்பு. சராசரம் வாழ நினைத்தல் அருள் எனப்படும்.

- வாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாடும் சனசமூக நிலையமும்

திருமதி
தியாகவதி சிவகுமாரன் B.A.
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

ஒரு சமூகம் தான் உயர்ச்சிபெற்று, எழுச்சிபெற்று பல வழிகளிலும் நிறைவு கண்டு சமூகமேம்பாடு காணவேண்டும் என்ற அவாவுடன் இருப்பதனை நாம் கண்கூடாக காண முடிகிறது. அவ்வாறு விரும்பும் ஒரு சமூகம் மேம்பாடு காண வேண்டுமாயின் அதற்கு கல்வி, கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம், அபிவிருத்தி, விளையாட்டு, கலை, மனித உழைப்பு, சேவை என பலவகைப்பட்ட காரணிகள் அத்தியாவசியமாகின்றன.

இத்தனை காரணிகளாலும் தன்னிறைவு காணும் ஒரு சமூகத்தால் நிச்சயமாக மேம்பாடுடைய ஒரு சமூகமாக வளர்ச்சிகண்டு, உயர்ச்சிபெறும் ஒரு சமூகமாக மாறமுடியும் என்பது வெள்ளிடைமலை யாழ்ப்பாணப் பாரம்பரியத்தையும், சமூதங்களையும் ஒப்பிட்டு நோக்குகையில் இவ்வாறான மாற்றங்களுடனும், வளர்ச்சிகளுடனும் கழகங்கள் மேம்பாடு கண்டிடிருப்பதனை நாம் நன்கு அவதானிக்க முடிகின்றது.

ஒரு சமூகம் மேம்பாட்டுடன் வளர்ச்சி பெற்று உயர்வுடன் மிளிர்வதற்கு சமூகம் சார்ந்த சனசமூக நிலையங்களின் சேவையுடன் கூடிய பங்களிப்புக்கள் மிக அத்தியாவசியமானவையாக விளங்குவதையும் நாம் காணமுடிகின்றது. சனசமூக நிலையங்கள் எனும்போது கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் கலை இலக்கியப் பேரவை என்பனவும் அடங்கலாகவே கொள்ளப்படுகின்றது.

இவ்வகையில் ஒரு சனசமூக நிலையம் தனது சேவை நோக்கில் சமூகத்திற்கு பத்திரிகை மூலமும் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி மூலமும் எந்தத்தரத்தையுடைய மக்களுக்கும் வாசிக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்துகின்றது. அது போன்று இளைஞர், யுவதிகளுக்கு விளையாட்டின் மூலம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை சிறுவயதிலிருந்தே பழக்கி உதவுகின்றது. இவ்வாறாக கலை, கலாசாரம், பண்பாடு, சிரமதானம், சேவைநோக்கு என்பவற்றையும் சிறு வயதிலிருந்தே கற்பிக்கிறது. இதனால் பலதரப்பட்ட மக்களையும் வயது வேறுபாடோ அன்றி, ஆண் பெண் வர்க்க பேதம் அன்றி, மத வேறுபாடோ அன்றி அச்சமூகத்தின் மக்களை ஒரு குடையின்கீழ் அணிதிரட்டி, அமர்த்தி தனது உன்னத சேவைகளால் மக்களைக் கவர்வதுடன் சமூக மேம்பாட்டில் உயர்ந்து நிற்பதனையும் காணமுடிகின்றது.

இத்தகைய உயரிய சேவைகளுக்கு அர்ப்பணிப்புடன் சேவை புரியும் சேவையாளர்களுக்கும், மனித உழைப்பை சேவை நோக்கில் வழங்குகின்ற உத்தம சேவையாளர்களின் பங்களிப்பும் வரவேற்கக்கூடியதும், பாராட்டப்படக்கூடியதுமாக அமைகின்றது. இவ்வகையில் ஒப்பீடு செய்கையில் இன்று தனக்கென்றோர் பாணியில் ஐம்பது வருடங்களாக எமது சமூக மக்களுக்கு அளப்பெரும் சேவைகளையாற்றி வருகின்ற எமது நாராயணா சனசமூக நிலையத்தின் சேவைகளை நாம் மறந்துவிட முடியாது. இத்தனைக்கும் இந்நிலையத்தின் ஆரம்பதாரர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், வாழ்த்தப்பட

வேண்டியவர்கள் நினைவு கூறப்படவேண்டியவர்கள்.

நாராயணா சனசமூக நிலையம் கடந்த ஐம்பது வருடங்களாக எமது சமூக மக்களுக்கு கல்வி அறிவூட்டி விளையாட்டில் இளைஞர், யுவதிகள் பல சாதனைகள் புரிய வைத்து நெசவு சங்க மூலம் கைத்தொழில் கல்வியூட்டி, அதன் மூலம் கைத்தொழிலில் வளர்ச்சி காண வைத்து சுயதொழிலுக்கு மக்களுக்கு கடன் வழங்கி சுயதொழிலுக்கு வழிகோலி அதன் மூலம் பொருாதார அபிவிருத்தி காண உழைத்து சிரமதானப்பணிகள் மூலம் கிராமத்தை அழகுபடுத்தி கலை, கலாச்சாரம், பண்பாட்டுடன் சமூகமக்கள் ஒன்றிணைந்து வாழ வழிகள் பல சமைத்துள்ளதனை நாராயணா சனசமூக மக்கள் என்றும் மறந்துவிடமாட்டார்கள்,

இத்தகைய சேவைகளால் மக்கள் மனதில் மங்காத இடத்தைப்பிடித்து இன்று புதுப்பொலிவுடன் பொன்விழாக் காணும் எமது நாராயணக சனசமூக நிலையத்தை வாழ்த்துவதுடன், இந்நிலையத்தின் ஆரம்பதாரர்முதல் பொன்விழா நிகழ்வை நடாத்துகின்ற சேவையாளர் வரை அனைவரையும் பாராட்டி வாழ்த்தி, ஆசிகூறுவதுடன் பொன்விழாக் காணும் எமது நிலையம் மென்மேலும் எமது சமூக மக்களுக்கு பல வகைகளிலும் சேவைகள் பற்பல புரியவேண்டும் என்று எல்லாம் வல்ல நாராயணப்பெருமானை வேண்டித் துதிக்கின்றேன்.

## நேரத்தின் மகிமை

உழைக்கும் நேரத்தை எடுத்துக் கொள் அது வெற்றியின் சின்னம்
சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள் அது சக்தியின் ஊற்று
விளையாட நேரத்தை எடுத்துக் கொள் அது இளமையின் ரகசியம்
படிக்க நேரத்தை எடுத்துக் கொள் அது அறிவின் வாயில்
அன்புகாட்ட நேரத்தை எடுத்துக் கொள் அது இறைவனின் கொடை
சேவை புரிய நேரத்தை எடுத்துக் கொள் அது வாழ்வின் குறிக்கோள்
சிரித்துமகிழ நேரத்தை எடுத்துக் கொள் அது இதயத்தின் இன்னிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோ நாணய உருவாக்கம் சர்வதேச பொருளாதாரத்தில் இருமுனை நாணய அமைப்பை உருவாக்குமா?

S. KARNAN B. A.
SAMURDHI DEVELOPMENT OFFICER
J/263, URUMPIRAI WEST.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் சிதறியிருத்த ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைக்கவும் அவற்றுக்கான சமூக, பொருளாதார அரசியல் நிலையை மேம்படுத்தி நாடுகளை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், சுவீடன், டென்மார்க், பெல்ஜியம், போர்த்துக்கல், கிறீஸ், லக்ஸம் பேக், ஸ்பெயின், அயர்லாந்து, பின்லாந்து, நெதர்லாந்து, அவுஸ்திரியா, போன்ற 15 ஐரோப்பிய நாடுகள் இணைந்து ஐரோப்பிய சங்கம்என்ற ஒன்றை உருவாக்கினர். இந்த ஐரோப்பிய சங்கத்தில் இணைந்து கொண்ட நாடுகள் தமது பண்பாட்டிற்காக 1999 ஆம் ஆண்டு யூரோ நாணயத்தை ஒரு பொது நாணயமாக உருவாக்கிக் கொண்டன. இவ்வாறு உருவாகிய ஒரு பொது நாணயமே ''யூரே நாணயம்'' (EURO CURRENCY) ஆகும். இதற்கு அடித்தளமாக 1969 ஆம் ஆண்டில் பேணர் குழு என்ற ஒன்றும் உருவாக்கப்பட்டதாகும். இந்த ஐரோப்பிய நாணயச் சங்கம் யூரே நாணயத்திற்கு மூன்று கட்டங்களை தீர்மானித்தது.

1) 1991 - 93 காலப்பகுதியில் ஐரோப்பிய சங்க அங்கத்துவநாடுகள் நாணயமாற்று பொறிமுறையில் இணைதல்.
2) 1994 -96ல் உறுதியான நாணயமாற்று வீதத்தை உருவாக்க முயலுதல்.
3) 1997 - 99 ல் புதிய செலவாணியை உருவாக்குதல்.

யூரோ நாணயத்தை வெளியிடும் உரிமையும், கட்டுப்படுத்தும் ஆதிக்கமும், நிரம்பல் பண வீக்க கட்டுப்பாடு என்பவற்றை மேற்கொள்ளும் பொறுப்பு ஜேர்மனியின் பிரான்போட் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஐரோப்பிய மத்திய வங்கிக்கே உரித்துடையதாகும்.

ஐரோப்பிய மத்திய வங்கி (Eurapean Central Bank) யூரோ நாணய அமுலாக்கத்தை மூன்று கட்டமாக வடிவமைத்துள்ளது.

1) 1999 - 01 - 01 ம் திகதியில் இருந்து வங்கி நடவடிக்கைக்கு மட்டும் பயன்படுத்தப்படும்.
2) 2000 - 01 - 01 ம் திகதியில் இருந்து வங்கிகள் பொதுக் கடனை யூரோவில் வழங்கும்.
3) 2002 - 02 - 01 ம் திகதியிலிருந்து அங்கத்துவ நாடுகளின் நாணயங்கள் உள்ளடக்கப்பட்டு அவற்றுக்கு பதிலாக யூரோநாணயத்தை ஐரோப்பிய மத்திய வங்கி வழங்கும்.

உலக ரீதியாக செல்வாக்கு செலுத்தி தனிப்பெரும் பன்னாட்டு நாணயமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அமெரிக்க டொலருக்கு போட்டியாகவும் சவாலாகவும் செயற்படுமா என்பதை பின்வரும் காரணிகளின் அடிப்படையில் நோக்கிக் கொள்ளலாம்.

1) உலக வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் 50 வீதம் டொலரில் நடைபெறுகின்றன.
2) அமெரிக்காவில் மொத்தத் தேசிய உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி 7400 மில்லியன் டொலராகவும் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி 6400 மில்லியன் டொல ராகவும் காணப்படுகிறது.

3) அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 31மாகவும் ஐரோப்பிய யூனியன் பொருளாதார வளர்ச்சி வீதம் 2.7மா கவும் காணப்படுகிறது.

4) அமெரிக்காவின் பாதீட்டு செலவுமொத் தத் தேசிய உற்பத்தியில் 3வீதமாகவும் ஐரோப்பிய யூனியன் பாதீட்டுச்செலவு மொத்தத் தேசிய உற்பத்தியில் 47வீத மாகவும் உள்ளது.

5) அமெரிக்காவில் வேலையின்மை வீதம் 4 மாகவும் ஐரோப்பிய யூனியனின் வேலையின்மை வீதம் 12 வீதமாகவும் காணப்படுகிறது.

6) அமெரிக்காவின் பணவீக்க வீதம் 3 மாக வும்ஐரோப்பிய ஒன்றியத்தின் பணவீக்க வீதம் 8 மாகவும் காணப்படுகிறது.

7) அமெரிக்கா உற்பத்தி அதிகரிப்பு தொழில் நுட்பம் என்பவற்றுக்கு ஐரோப்பிய ஒன்றியமே மொத்த தேசிய உற்பத்தியில் 2வீதம் செலவிடப் படுகிறது.

8) அமெரிக்காவின் விவசாயத் தொழில் நுட்ப உற்பத்திகள் அளவுகள் மிகஉயர் வாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விவ சாய தொழில் நுட்ப அளவுகள் குறை வாகவும் உள்ளது.

9) அமெரிக்காவின் சனத்தொகை 26 கோடி 62லட்சமாகவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மொத்த சனத் தொகை 37கோடி 45லட்சமாகவும் காணப்படுகிறது.

இந்த அடிப்படையில் நோக்கும்போது டொலர் நாணயம் யூரோ நாணயத்தை ஒரு உறுதியான திரவத்தன்மையை கொண்டிருப்பதால் யூரோ நாணயத்தை விட ஓர் உயர்ந்த கட்டத்தில் இருக்கிறது எனலாம். எனினும் ஐரோப்பிய மத்திய வங்கி தனது நாணயக் கொள்கையை சிறப்பான முறையில் பயன்படுத்துமாயின் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒரு இறுக்கமான சிறப்பான நிதியமைப்பை உருவாக்கி டொலருக்கு எதிராக நல்ல முறையில் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கி றது. அதே நேரம் ஐரோப்பிய யூனியல் உள்ள பிரிட்டன், சுவீடன், டென்மார்க் கிறீஸ், போன்ற நான்கு நாடுகளும் யூரே வில் இணையும் பொழுது அமெரிக்க டொலர் பெரும் சவாலை எதிர்கொள்ள லாம். அதுமட்டுமன்றி உலகில் உள்ள பிரதான 7 கைத்தொழில் நாடுகளில் 4 நாடுகள் ஐரோப்பிய யூனியனைச் சார்ந் தவை இதனால் யூரோ நாணயம் முழு அளவில் அமுலுக்கு வரும்போது அன்னிய செலாவணி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் பெரும்மாற்றம் தவிர்க்க முடியாதது ஆகும். அதாவது ஐரோப்பிய நாடுகளுடன் கூடுதலாக வர்த்தக தொடர் புகளைக் கொண்டுள்ள நாடுகள் பணத்தை யூரோவாக மாற்றி இந்தப் 11 நாடுகளில் எந்த ஒரு நாட்டுடனும் கொடுக்கல் கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண் டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவதால் யூரோ நாணயத்தின் சர்வதேச வர்த்தகம் விரிவடையும்.

